
Deviyin **KANMANI** -Tamil Fortnightly **NOVEMBER -1, 2009**. Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With .Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப் பற்றி

நாவலாசிரியர் அறிமுக உரை...

'உயிரில் கலந்த உறவே'' நாவல் எனது பல வருட கனவு ஆகும். எத்தனையோ எழுத்தாளர்களை உருவாக்கிய ''கண்மணி'' என்னையும் ஒரு எழுத்தாளராக அடையாளம் காட்டும் என நம்புகிறேன். கண்மணியில் உயர்ந்த பல எழுத்தாளர்களின் பெயர்களைச் சொல்லிபார்த்து அவர்களைப்போல ஒரு நாள் நானும் வருவேன் என்று தினம் தினம் எனக்கு நானே சொல்லிக் கொள்வேன். பல சிறுகதைகளையும் கவிதைகளும் எழுதியிருக்கும் நான் எழுதிய முதல் நாவல் இது. வாசகர்களின் ஆசியுடன் வளரவிரும்பும்

- சொ.கலைவாணி சொக்கலிங்கம்.



# உயிரில் கலந்த உறவே....

**கடற்கரை காற்றே வழியைவிடு
தேவதை வந்தாள் என்னோடு**

அறுபடை வீடுகளுள் ஒன்று திருச்செந்தூர். கம்பீரமாய் ஓங்கி உயர்ந்த கோபுரங்களில் கலசங்கள் மாலை வெயில்பட்டு பொன்னாய் ஜொலித்தன. இதுதான் எங்கள் வீடு என உரிமையாய் சில புறாக்கள் அமர்வதும் பறப்பதுமாக இருந்த பொன்மாலைப் பொழுது. மெலிதாக ஒலித்துக் கொண்டிருந்த கந்தசஷ்டி கவசம். குழந்தைகளின் குதூகலம். கடல் அலைகளின் ஆர்ப்பரிப்பு.

கடற்கரை காற்று உற்சாகமாக வந்து ஸ்ரீராமின் அடர்ந்த கேசத்தை கலைத்து விளையாட்டு காட்டியது.

ஸ்ரீராம் கண்மூடி அந்தக் காற்றை ரசித்து சிலிர்த்தான். இயற்கை எவ்வளவு அற்புதம்! வாவ்! எவ்வளவு அழகு இந்தக் கடல். பசுமையும் நீலமும் கலந்தாற்போல் என்னவொரு நிறம். எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காத அழகு. கடல் ஒரு அற்புத அதிசயம் தான்.

''டேய்! ஸ்ரீ! வரவர உன்னோட நிலைமை ரொம்ப மோசமாயிட்டே போகுது. எங்கே போனாலும் இயற்கையோடயே ஒன்றிப் போயிடற. போற போக்கபாத்தா அடுத்தவாரம் ஓப்பன் பண்ற உன்னோட ஹாஸ்பிடல்ல நீதான் முதல் பேஷன்டா இருப்பன்னு தோணுது.'' கடல் இரைச்சலை மீறி சத்தமாகச் சொல்லி சிரித்தான் விஷ்ணு.

''டேய்! அவனை என்ன உன்னை மாதிரி, வருஷா வருஷம் கோட் அடிச்சவன்னு நினைச்சியா. ஹீ இஸ் ஏ பேமஸ் டாக்டர் ஸ்ரீராம். பெரிய மனோதத்துவ நிபுணர். அதுவும் அமெரிக்கன் ரிட்டர்ன்ட். நீ இந்த திருச்செந்தூரை தாண்டியிருப்பியா. அவன் அப்படி ஆழ்ந்து ரசிச்சா அதில ஏதாவது ஒரு காரணம் இருக்கும். இப்ப பார்க்கிறதை எல்லாம் மனசில குறிப்பெடுத்து வச்சிட்டு ஏதாவது ஒரு பேஷன்டுக்கு தேவைப்படும் போது சொல்லுவான். அதெல்லாம் நம்மை மாதிரி சாதாரண ஆட்களுக்கு புரியாது. இயற்கையை ரசிக்கிறது தப்பில்ல. இப்ப நீ ரசிச்சிட்டு இருக்கியே இது தப்பு'' என்றவாறு அவன் தலையில் குட்டியவாறே அவனது கையில் இருந்த கையடக்க வீடியோ கேமராவைப் பறித்தான் சிவா.

-சொ.கலைவாணி சொக்கலிங்கம்



படமாகி இருந்ததைப் பார்த்துவிட்டு ''அடப்பாவி'' கோவில்ல வந்து கடல்ல கால்நனைக்கிற பெண்களையா இவ்ளோ நேரம் கவரேஜ் பண்ணிட்டிருந்தே. இடியட். இடியட்.. ஏன்டா உனக்கு இப்படியெல்லாம் புத்தி போகுது. ச்சே! டேய் நீ இவனை முதல்ல உன் ஹாஸ்பிடல்ல சேர்த்து இவன் மூளையை பெண் பித்துல இருந்து தெளியவைடா. வரவர ரொம்ப ஜொள்ளு விடறான்''- என்றவாறு தன் கையிலிருந்த கேமராவை ஸ்ரீராமிடம் காட்டினான் சிவா.

''பார்! இந்த முட்டாள் படம் எடுத்துருக்கிறதை'' ஸ்ரீராம் கண்கள் அந்த சிறிய டி.வி. திரையை அசுவாரஸ்யமாய் நோட்டமிட்டது.

யாரும் தங்களை பார்ப்பதில்லை என்ற எண்ணத்தில் சுதந்திரத்தில் கடல் அலை தந்த உற்சாகத்தில் பெண்கள் கூட்டம் தங்கள் புடவையை முழங்கால் வரை உயர்த்தி பிடித்திருந்தபடி கடல் நீரில் ஆட்டம்போட அதை அப்படியே படமாக பிடித்திருந்தான். கண்கள் கோபத்தில் சிவக்க, ''யூ டாமிட்! இதுக்குத்தான் இவனை இந்த டூருக்கு கூப்பிட வேண்டாம்னு சொன்னேன். எங்கே அந்த திலீப். டேய் திலீப் வெளியே வாடா போலாம்''- விருட்டென எழுந்தவன் கடல் அலையில் உற்சாகக் குளியல் போட்டுக் கொண்டு இருந்த திலீப்பை பார்த்து உரக்க குரல் கொடுத்தான்.

''பிளீஸ். ஸ்ரீ! இன்னும் ஒரு டென் மினிட்ஸ்'' என்றவன் அதற்கு மேல் திரும்பாமல் மீண்டும் அலையோடு மிதக்க ஆரம்பித்தான்.

''ஓ.கே. நீங்க இருந்துட்டு வாங்க. நான் ரூமுக்குப் போறேன். இன்னிக்கு நைட்டே சென்னைக்கு கிளம்பலாம்னு இருக்கேன்''- பொதுவாக பேசியவாறு நடக்க ஆரம்பித்தவனை வேகமாகச் சென்று வழி மறித்தான் விஷ்ணு.

''டேய்! சாரிடா மச்சான். சும்மா விளையாட்டுத்தனமா பண்ணிட்டேன்டா. ஸாரிடா. இனிமே சமர்த்தா இருக்கேன். இன்னும் ஒரு நாள் தானே. அந்த ஒரு நாளும் நமக்குள்ள எந்த பிரச்சனையும் வந்திடக்கூடாதுடா. லோ ஸாரி. இனிமே இந்த கேமராவை டூர் முடியறவரைக்கும் நான் தொடமாட்டேன். இந்தா நீயே வெச்சிக்க. ஊருக்கு போகும் போது தா. இந்தா பிடி''- ஸ்ரீராமின் கைகளில் அந்த வீடியோ சாதனத்தை திணித்தான்.

''ஆனா! கோவிச்சிட்டு பேசாம மட்டும் இருந்திடாதடா ஸ்ரீ''- குரல் கம்மியது விஷ்ணுவிற்கு.

லேசாக சிரித்த ஸ்ரீ ''டேய்! நாமெல்லாம் படிச்சவங்க. அதுவும் கோவில்ல வந்து. நாமளே இப்படி இன்டீஸன்டாக நடந்துக்கலாமா, சரி நீ போய் குளி. நான் உட்கார்றேன்''- என்றவனை அந்தக் கிண்கிணிச் சிலிப்பொலி தொட்டுத் திருப்பியது.

''ஹே! என்னைத் தொடு பார்க்கலாம். எங்கே தொடு பார்க்கலாம்''- கீதமாய் இசைத்தது ஒரு பெண்ணின் இனிய குரல் .காதில் தேனாய் பாய்ந்த அந்த சிரிப்பொலியில் தன்னையும் அறியாமல் திரும்பினான் ஸ்ரீராம். அவன் கண்களில் முதலில் பட்டது மெல்லிய கொலுசணிந்த வெண்பஞ்சு பாதங்கள் தான். அப்போது தான் பூமிக்கு வந்த பிஞ்சுக் குழந்தையின் பாதங்களை நினைவுபடுத்தியது அந்தப் பாதங்கள்.

அந்த பாதங்கள் தன்னை நோக்கி வருவதை உணர்ந்து அவசரமாய்

நிமிர அந்த தேவதைப் பெண் அலையிலிருந்து தப்பிக்க தன் கரும்பச்சை நிற பட்டுப்பாவாடைவயை இரு கைகளாலும் லேசாக பிடித்தபடி பாவாடை விளிம்பு கணுக்காலிற்கு மேல் போகாமல் கவனமாக ஓடிவர ஸ்ரீராம் ஆயிரம் பட்டாம்பூச்சிகளை ஒரே இடத்தில் பறந்தது போல் இலட்சம் பன்னீர் ரோஜாக்கள் மொத்தமாய் கொட்டியது போல் கோடி நிலாக்கள் ஒரே இடத்தில் உதித்தாற்போல் உலகின் மொத்த அதிசயங்களை ஒரே இடத்தில் கண்டது போல் விதிர்விதிர்த்து அமர்ந்திருந்தான்.

தன் அருகில் வந்த பாதங்கள் நின்றன. அதற்கு சற்று தள்ளி அலை உள்நோக்கிச் செல்ல, ''ஹேய்'' ஹேய்! தோத்துட்டியா! நல்லா வேணும். என்னைத் தொட முடியுமா! நான் யாரு?ஜானகியாக்கும்!'' கைகொட்டிச் சிரித்தாள் அந்த தேவதை.

மீண்டும் கடலில் இறங்கி ஓட, அடுத்த அலை வர அந்த வெண்பஞ்சு பாதங்கள் தன்னை நோக்கி வர ஸ்ரீராமிற்கு சிலிர்த்தது. இது என்ன விளையாட்டு வித்தியாசமாய்? அலைகளுடன், விளையாடிய அந்தப் பெண்ணை ரசிக்க ஆரம்பித்தான். இன்பமாய்.

அடுத்த அலையும் அந்தப் பாதங்களை தொட முடியாமல் தோற்றுப்போக உற்சாகத்தில் துள்ளினாள் அவள். இதழ்களில் குறுஞ்சிரிப்போடு அவளை ஆர்வமாய் ஆராய்ந்தான் ஸ்ரீராம்.

நல்ல பொன்நிறம். அளவான தேகம். போதுமான உயரம். கருகருவென நீண்ட கூந்தல். நெற்றியில் சுருளாய் விழுந்து புரண்ட முடியை அலட்சியமாய் ஒதுக்கி விடும் தந்தக் கைகளில் ..கரும்பச்சை நிற கண்ணாடி வளையல்கள். கரும்பச்சை நிற ஜாக்கெட்டும் பட்டுப்பாவாடையும் ரத்தச் சிவப்பிலான ஜரிகையும் அதே நிறத்தில் தாவணியுமாய் அதற்கு மேட்சாய் பச்சைக்கல் நெக்லஸ் அதே போன்ற கல் ஜிமிக்கி என்று மொத்த அழகையும் அந்த பெண் வரமாய் வாங்கி வந்திருந்தாள். ஒவ்வொரு முறை அலை வரும்போதும் வளையல்களும், கொலுசுகளும் சிணுங்கி அவள் தன்னை நோக்கி ஓடி வருவது கவிதையாய் இருந்தது. தன்னைச் சுற்றி யாருமே இல்லை. தான் தனியே ஒரு தீவில் கடலோடு விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வில் துள்ளிக் கொண்டிருந்த அவளை அம்மாவின் குரல் வந்து கலைத்தது.

''ஏய்! ஜானு போதும் விளையாடியது. அப்பா கோவில்ல காத்திருப்பார். வா சீக்கிரம்''- ஸ்ரீராமிற்கு பின்னால் இருந்து குரல் வர, அந்தப் பெண் திரும்பினாள். சூரியனை வெகு அருகில் பார்த்தது போல் கண்கள் கூசிற்று. அத்தனை ஒளி அந்த முகத்தில், அந்த கருப்பு திராட்சை விழிகள் என்ன ஜொலிப்பு. அப்பா! ஆளையே சாய்த்துவிடும் பார்வை. உதடுகளின் ஈர மினுமினுப்பு வெண்முத்து பற்கள். என அந்தப் பெண்ணை முழுமையாய் தன்னுள் பதிந்து கொண்டான் ஸ்ரீராம்.

''அம்மா! அம்மா! பிளீஸ் இன்னும் கொஞ்சநேரம். பிளீஸ் மா. என் செல்ல அம்மா இல்லை''

உதடு குவித்து சிணுங்கலுடன் அவள் கொஞ்சிய அழகிற்காகவே அவள் அன்னை மனம் உருகியிருக்க வேண்டும். அதற்கு பிறகு அவர்



அழைக்கவில்லை. ஆனால் அருகிலிருந்து அதட்டலான இன்னொரு குரல் கேட்டது. '' ஏய். ஜானகி. இதுவரை ஜெயிச்சிட்ட அப்படியே ஓடிவந்திடு. இருட்ட ஆரம்பிக்கப் போகுது. இனிமே பெரிய பெரிய அலை வரும். நிச்சயமாக உன்னை நனைச்சிடும். நான் சொல்றத கேளு. வந்திடு''

ஸ்ரீராம் மெலிதாய் தலை சாய்த்து திரும்பிப் பார்த்தான். நாலைந்து பெண்கள் இரண்டு சிறுமிகள் என மொத்தமாய் அமர்ந்திருக்க அவர்களின் கைகளில் சுண்டல் பொட்டலங்கள், மாங்காய் துண்டுகள், வெள்ளரிக்காய் என உணவாகிக் கொண்டிருந்தன. ஒரே குடும்பமாக இருக்கும் என்ற எண்ணத்துடன் மீண்டும் கடலை நோக்கி அவளை நோக்கித் திரும்பினான்.

ஜானகி இடுப்பில் கைவைத்தபடி '' போடி! போங்கடி தின்னிப்பண்டாரங்களா! என்னை யாருன்னு நினைச்சீங்க? ஜானகி யாக்கும் ஒரு நாளும் யார்கிட்டயும் தோற்கமாட்டா இந்த ஜானகி'' என முகத்தை திருப்ப அவளோடு அவள் கூந்தலும் துள்ளி முன்னால் விழ அந்தக் கூந்தலில் சூடி இருந்த ஜாதிமல்லிச் சரத்திலிருந்து ஒரு கொத்து மலர்கள் ஸ்ரீராமின் முன்வந்து விழுந்தன.

கீழே சிதறிய முத்துக்களை எடுப்பது போல் ஆர்வமாய் அவசரமாய் அந்தப் பூக்களை எடுத்தான் ஸ்ரீராம். உள்ளங்கையில் அதை சேகரித்து யாராவது தன்னை கவனிக்கிறார்களா என ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அப்படி எதுவும் இல்லை என்று தெரிந்த உடன் அதை நாசியருகே கொண்டு சென்று அதன் மணத்தை ரசித்து சுவாசித்தான். அந்த சுவாசத்தில் ஜாதிமல்லியின் மணத்தோடு அந்த தேவதைப் பெண்ணின் நினைவுகளும் அவனது இதயம் நுரையீரல் என உடம்பு முழுவதும் சென்று வியாபித்துக் கொண்டது. அந்த சுவாசத்தில் ரத்த ஓட்டம் புது உற்சாகத்துடன் உடல் முழுவதும் பாய்வது போல் தோன்றியது ஸ்ரீராமிற்கு.

'பேரென்ன சொன்னாள்? ஜானு... ஜானகி. வாவ்! ஸ்ரீராம்- ஜானகி. எத்தனை பொருத்தம் எங்கள் பெயரிலேயே! அம்மா அடிக்கடி சொல்வாளே! இன்னார்க்கு இன்னாருன்னு தேவ லோகத்திலே எழுதிவெச்சிருப்பாங்க. அதுதான் நடக்கும்னு. அப்படி எழுதி வைத்திருக்கும் எனது இன்னார் இவளாகத்தான் இருக்குமோ?

''ஏண்டா ஜோக் சொன்னா பக்கத்துப் பையனை கடிக்கப் போறே?''
''நீங்கதான் சார் கடி ஜோக் குன்னு சொன்னீங்க''
-செல்வராஜா சேலம்.



இவளாகத்தான் இருக்க வேண்டும் என மனம் உத்தரவிட்டது.

என்ன ஸ்ரீராம் உல்லாச பயணம் வந்த இடத்தில அதுவும் பார்த்த ஒரு சில நிமிஷத்திலே ஒரு பெண்ணை வாழ்க்கை பயணம் முழுவதும் கூட இணைந்து வரும் இணையை அவள் யார் எவரென்று அறியாமல் எப்படி தேர்ந்தெடுக்க முடியும்? அதுவும் மனிதமனங்களை ஆராய்ந்து அதன் குறை குற்றங்களை தீர்த்து மனநலபாதிக்கப்பட்டவர்க்கு பூரண குணம் தந்து அவர்களுக்கு மறுஜென்மம் கொடுக்கும் மருத்துவன் நீ இப்படி நொடியில் தடுக்கி விழுகிறாயே- என எச்சரித்தது உள்மனம்.

அடப்போடா! யார் எவர் என்று தெரிந்து கொண்டா வரும் காதல்? அப்படி வந்தால் அதன் பெயர் காதல் அல்ல. பார்த்த உடன் நம் விழிகளில் நுழைந்து இதயத்தில் புகுந்து நம் உயிரோடு ஒன்றிப் போய்விடும் ஒரு உன்னத உணர்வு! இது படித்த மேதாவி என்றும் பாராது. படிக்காத பாமரனையும் விட்டு வைக்காது. அது ஒரு உருவம் இல்லாத சக்தி. கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் உணர முடியும். படித்தவன் மருத்துவன் என்பதால் நான் காதலிக்கக் கூடாதா? இந்தப் பெண் என் இதயத்தில் பதிந்து விட்டாள். இனி அதை அழிக்கவோ மறக்கவோ முடியாது. இவள் என்னவள். இது அந்த இறைவன் போட்ட முடிச்சு. இல்லையென்றால் இத்தனை ஆண்டுகள் கொஞ்சமும் யாருக்காகவும் அசைந்து தராத மனம் இவளைக் கண்டதும் இவள் பின்னே ஓடுகிறதே. வேறென்ன சொல்வது? எது எப்படியோ இந்த ஜானகி இந்த ஸ்ரீராமிற்குத்தான்.

மனதை வாதாடி வென்றுகொண்டிருந்தவனை அந்த பேரிரைச்சல் நிகழ்காலத்திற்கு கொண்டு வந்தது. ஒரு பேரலை ஒன்று இரைச்சலோடு வர பின்னால் இருந்தவர்கள் பதறிப்போய் ஜானகியை அழைக்க, அதுவரை உற்சாகத் துள்ளலோடு திரிந்து சிரித்த ஜானகி கொஞ்சம் பயத்தோடு ஓடி வர என்ன நடக்குமோ என ஸ்ரீராம் இதயம் பதற யாரும் எதிர்பாராமல் அது நடந்தது. நடந்தே விட்டது.

என்னிடமா உன் விளையாட்டைக் காட்டுகிறாய் என நினைத்தோ என்னவோ ஜானகியை நோக்கி சீறியபடி வந்தது அலை. இதை சற்றும் எதிர்பாராத காலை மடக்கியபடி கைகள் இரண்டையும் பின்னால் ஊன்றி அவளை ரசித்துக் கொண்டிருந்த ஸ்ரீராமின் கால் இடறி மொத்தமாய் அவன் மீது சரிந்தாள்.

மெத்தென்ற பூச்செண்டு தன் மீது மோதிய இன்ப உணர்வுடன் சிலிர்த்தான் ஸ்ரீராம். வேகமாக வந்த அலை அவர்கள் மீது மோதி நனைத்து இருவரையும் சுருட்டி இழுத்துச் சென்றது. இதை எதிர்பாராத ஸ்ரீராம் பதைப்புடன் அவளை இறுகப் பற்றிக் கொள்ள ஆபத்தில் உள்ளவன் கையில் கிடைக்கும் துரும்பைப் பற்றிக் கொள்வது போல ஜானகியும் அவனது சட்டையைப் பற்றிக் கொள்ள இருவரும் மணலில் புரண்டு ஓட அடுத்த அலை அவர்கள் இருவரையும் அடித்து வெளியே வந்து தள்ளியது. சமாளித்து எழுந்துநிற்கும் முன்பே அடுத்த அலை வந்து உள்ளே இழுக்க மீண்டும் முழுவதும் நனைய கீழே விழுந்தனர்.

அதற்குள் அவளது உறவினர்கள் வந்து ஜானகியை இழுத்துக் கொண்டு தாறுமாறாய் திட்டிக் கொண்டே சென்றனர். கண் இமைக்கும்



நேரத்தில் எல்லாம் நடந்துவிட உடலும் உள்ளமும் கூசிப் போனது ஜானகிக்கு. விதிர்விதிர்த்து உடல் வெடவெட என நடுங்கியது. ஈரமான உடல் மீது கடல் காற்று பட்டதால் ஏற்பட்ட குளிர் மட்டுமல்ல முன்பின் அறியா அந்நிய ஆடவனின் ஸ்பரிசமும் அணைப்பும் உடம்பை நெருப்பாய் சுட்டது. யார் அவர்? ச்சே! என் விளையாட்டு புத்தியால் பாவம் கரையில் இருந்த அவர் மீதும் விழுந்து அலையில் நனைத்து ஈரமாக்கி விழுந்து புரண்டு அணைத்துக் கொண்டு ச்சே! நினைக்கையிலே அதிர்ச்சியால் விதிர்த்தாள்.

யாரோ எவரோ, நிச்சயம் கண்ணியமானவராகத்தான் இருக்க வேண்டும். அந்த அலைக் கழிப்பில் தன்னைப் பாதுகாப்பாய் பற்றிக் கொண்டு கையை விட்டுவிடாமல் பத்திரமாய் கரை சேரும் வரை தன்னை தவறான நோக்கத்தில் தீண்டாமல் வெகு ஜாக்கிரதையாய் பிடித்திருந்தாரே! யார் அவர்? ஆவலுடன் திரும்பிப் பார்க்க நன்றாக இருட்டி விட்டிருக்க அந்தக் கூட்டத்தில் எங்கே அவன் என்று தெரியாமல் தேடினாள்.

''அங்கே என்னடி பார்வை! ஒழுங்காக வா. இதுக்குத்தான் பொம்பளைப் புள்ளையை வீட்டோட வைக்கணும் அது இஷ்டத்துக்கு ஆட்டம் போட விடக்கூடாது மதினி. சொன்னா கேக்கிறீகளா''- இதுதான் சமயம் என்று இடித்தார் அத்தை. நடுங்கிய இதயத்துடன் அவள் பின்னே சென்றாள் ஜானகி.

## 2

''டேய் ஸ்ரீ! என்னாச்சுடா! உனக்கு? டேய் ஸ்ரீ!''

நண்பர்கள் வந்து தன்னை உலுக்கும் வரை ஸ்ரீ கண்களை திறக்கவில்லை. தனது ஜானகியுடன் கைகோர்த்து சொர்க்கத்தில் நடந்து கொண்டிருந்தான். அவளுடன் பேசிக் கொண்டே தேவர்களை சந்தித்தான். தனக்காக ஜானகியை படைத்ததற்கு பிரம்மாவிடம் நன்றி கூறினான். அவளுடன் நான் வாழ்ந்து பூமியில் இன்னொரு சொர்க்கத்தை உருவாக்கிக் காட்டுகிறேன் என சிவனிடம் உறுதியளித்தான்.

திடும்மென விழித்தவனை நண்பர்கள் கொஞ்சம் பயத்துடன் பார்த்தனர். கூட்டம் குறைய தொடங்கியிருந்த கடற்கரையை இருள் ஆக்கிரமித்திருக்க ஆங்காங்கே விளக்குகள் பளிச்சிடத் தொடங்கியிருந்தன. அவை பிரம்மாண்டமான விளக்குகள் இதுவரை கண்டது கனவோ?

ஸ்ரீ தன்னையே ஒரு முறை குனிந்து பார்த்தான். உடல் முழுவதும் ஈரமண் ஒட்டியிருக்க ஆடை இன்னும் ஈரமாக இருந்தது. நடந்தது கனவல்ல நிஜம் என்றது. எங்கே அவள்? எங்கே சென்றுவிட்டாள். நான் அவளைப் பார்க்க வேண்டும்! என் இதய தேவதையே எங்கே சென்றுவிட்டாய்? பரபரவென எழுந்து பார்வையை சுற்றுமுற்றும் தவழவிட்டும் அந்த ஜானகி தென்படவில்லை.

குழம்பிப்போன நண்பர்கள் கரையில் கிடந்த கேமரா தங்களுடைய

ஆடைகளை பொறுக்கிக் கொண்டு அவசரமாக அவனை அழைத்துக் கொண்டு லாட்ஜுக்குள் செல்வதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. துருவி துருவி கேட்டாலும் அவன் சொன்ன ஒரே மந்திரம் ஜானகி. ஜானகி. மோகினி ஏதாச்சும் பிடிச்சிருக்க போல சிவா!

''சேச்சே! நமக்குத் தெரியாதா ஸ்ரீயைப்பத்தி? அவன் எந்தப் பெண்ணையும் இதுவரைக்கும் ஏறெடுத்துக் கூட பார்த்ததில்ல. அவன் பேர் மட்டும் இல்ல அவனே அந்த ஸ்ரீராமன் தான்''

''அந்த ஸ்ரீராமனே சீதையைப் பார்த்த உடனே மனசை தொலைக்கலையா''

திலீபின் வார்த்தையால் வாயடைத்துப்போனான் சிவா. அப்படியும் இருக்குமோ? அப்படி ஒன்று நடந்தால் சந்தோஷமே.

## 3

சிவா, ஸ்ரீராம், விஷ்ணு, அய்யனார் என்ற திலீபன் நால்வரும் நண்பர்கள். பள்ளிமுதல் கல்லூரி வரை இணைந்து வந்த நட்பு. மற்ற மூவரும் படிப்புக் கேற்ற வேலையைத் தேடிக் கொள்ள படிக்கும் காலத்திலிருந்தே ஸ்ரீக்கு மருத்துவ சேவையில் தான் முழு ஆர்வம். அதனால் அவன் மருத்துவ கல்லூரியில் சேர கோல்டு மெடல் ஸ்டூடன்ட் ஆகி பல பாராட்டுக்களுடன் கல்லூரியே போற்றும் மாணவனாக தேர்ச்சி அடைந்தான். அதோடு அவனது படிப்பின் தாகம் அடங்கவில்லை. ஒரு சிறந்த மன நல மருத்துவராக வேண்டும் என்ற குறிக்கோளுடன் அம்மாவை நச்சரித்து அமெரிக்காவில் இருக்கும் சித்தி வீட்டிலிருந்தே தனது படிப்பை முடித்துவிட்டு திரும்பினான்.

ஊர் திரும்பிய உடனே ஊர் சுற்ற கிளம்பவில்லை. நல்ல இடமாக தேடி அலைந்து பெரிய இடமாகப் பார்த்து நிலம் வாங்கி பெரிய மருத்துவமனை கட்டத் துவங்கினான். பொதுமருத்துவமனை மனநலமருத்துவனை என இரு பிரிவுகளாக கட்டிமுடித்து கிட்டதட்ட எல்லா வேலைகளையும் முடித்தாயிற்று. அடுத்த வாரம் மருத்துவமனை திறப்பு விழா. மருத்துவமனை திறந்தபின் வேலையே சரியாக இருக்கும். வேறு எங்கும் செல்லவோ நண்பர்களுடன் சுற்றவோ நேரம் கிடைக்காது என்பதால் வெகு நாட்களுக்குப் பிறகு நண்பர்கள் மொத்தமாய் கூடி பேசி முடிவெடுத்தனர். நால்வரில் விஷ்ணுவிற்கு சொந்த ஊர் திருச்செந்தூர் என்பதால் அவனது விருப்பப்படி கன்னியாகுமரி, கேரளா, நெல்லை, குற்றாலம், பாபநாசம், உவரி, மணப்பாடு, திருச்செந்தூர், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் என தென் மாநிலம் முழுவதும் சுற்றலாம் என முடிவு செய்து புறப்பட்டனர். ஸ்ரீயின் காரிலேயே பயணம்.

கேரளாவின் பசுமையையும், கன்னியாகுமரியின் பகவதியம்மன் கோவில், நெல்லையப்பர் கோவில் தெப்பக்குளம், குற்றாலம் அருவி, பாபநாசம், உவரி கப்பல் மாதா ஆலயம், மணப்பாடு அந்தோணியர் எல்லா இடமும் உற்சாகமும் இனிமையும் கலகலப்புமாக சுற்றிப்



பார்த்தாயிற்று. தேவையான அளவு போட்டோவும் வீடியோவும் எடுத்துக் கொண்டாயிற்று. இன்று திருச்செந்தூர் முருகன் தரிசனம் முடித்து நாளை காலை புறப்பட்டு மதுரை மீனாட்சியை தரிசித்து விட்டு புறப்பட்டாக வேண்டும்.

ஆனால் கடலில் நனைந்து வந்த பின் ஸ்ரீ கனவுலகில் மிதந்தவனாக அமர்ந்திருந்தது அனைவரின் வயிற்றிலும் புளியைக் கரைத்தது.

''திஸ் இஸ் டூ மச் ஸ்ரீ. என்ன ஏதுன்னு சொல்லுடா. நாங்க என்னன்னு நினைக்கிறது. நாளைக்கு புறப்படணுமே! நீ இப்படி இருந்தா எப்படி. எழுந்து முதல்ல டிரெஸ் சேஞ்ச் பண்ணுடா. சாப்பிட்டுட்டு தூங்கலாம். மார்னிங் கிளம்ப வேண்டாமா'' என்று அவனை உலுக்கினான் விஷ்ணு.

ஸ்ரீ அசைந்து கொடுக்கவில்லை ''உஹூம். இவன் சரிப்படமாட்டான். இவன் இப்படியே சிரிச்சிட்டே இருக்கட்டும். எனக்கு பசி காதை அடைக்குது. டேய் திலீப் இவனை இப்படியே விட்டுட்டு நாம கீழே போய் சாப்பிட்டு வர முடியாது. பேசாம டிபனை ரூமுக்கே வரவழைச்சிடலாம். அந்த ஜானகிராம்னுக்கு போன் போடு''- விஷ்ணு சொல்லிய வினாடி ஸ்ரீராம் சட்டென திரும்பினான்.

ஜானகியா! எங்கே.... எங்கே என்று விழிப்பு நிலைக்கு வந்தான் ஸ்ரீ, நண்பர்கள் மர்மப் புன்னகையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''டேய்! ஜானகி இல்ல. ஜானகிராமன். ரூம்பாய். உனக்கு நினைவில்லையா'' கோபமாகக் கேட்டான் சிவா.

## 4

***ஒரு நாளும் உனை மறவாத இனிதான***
***வரம் வேண்டும். விழியோடு***
***இமைபோல விலகாத வரம் வேண்டும்.***

சிவாவின் கோபத்தில் தான் சுயநினைவிற்கு வந்தான் ஸ்ரீராம். ஈரமான உடை பேன் காற்றில் லேசாக காயத் தொடங்கியிருக்க உடல் முழுவதும் பிடிவாதமாய் ஒட்டியிருந்த கடல் மணல். உப்பின் பிசுபிசுப்பு அப்போது தான் உறைத்தது. சுற்றியிருந்த நண்பர்களை ஒருவித அவஸ்தையோடு பார்த்தான். அனைவரின் கண்களும் நெருப்பைக் கக்கியது. மெலிதாக சிரித்தபடி

''ஓ! வெரி ஸாரிடா! ஒன் செகண்ட். குளிச்சிட்டு வந்துடறேன். உடம்பெல்லாம் உப்பு'' என்றவாறு சர்ட் பட்டன்களை கழற்றியவன் ஏதோ நினைவு வந்தாற்போல் சட்டை பாக்கெட்டினுள் கையை விட்டான். உள்ளேயிருந்து கையை எடுத்தவன் கைகளில் வாடிய பூக்கள் ஒரு சில இருந்தன. ஒரு பொக்கிஷம் போல அதைக் கையில் ஏந்தியவன் டேபிளின் மீதிருந்த தனது டைரியை பிரித்து அதில் அந்தப் பூக்களை ஒவ்வொன்றாய் விரித்து வைத்து டைரியை மூடினான். தனது பெட்டியை

திறந்து டைரியை பத்திரப்படுத்தினான்.

''டேய் ஸ்ரீ என்னடா பண்றே''- என்றான் சிவா.

''சிவா! நீ சினிமால்லாம் பாக்கிறதில்லையா. அதாண்டா இந்த ஜீன்ஸ் படத்தில ஐஸ்வர்யாராய், பிரசாந்த் யூஸ்பண்ண கூல்ட்ரிங்ஸ் டப்பா, சாக்லேட் பேப்பர், வெற்றிலை காம்பு எல்லாம் பத்திரப்படுத்தி வைப்பாங்களே. அதைத்தான் இப்ப ஐயா பண்ணிட்டு இருக்கார். இந்தப் பூ அந்த ஜானகி தலையில இருந்து விழுந்திருக்கும். அதை இவர் தன்னோட பூர்வீக சொத்தா மதிச்சு டைரியில பத்திரப்படுத்தறார். ஸ்ரீ ஆம் ஐ கரெக்ட்?'' என்றான் திலீப்.

அவஸ்தையாய் சிரித்தான் ஸ்ரீ ''ஆமாண்டா! எனக்கு இது பொக்கிஷம் தான்'' என்றான் கண்கள் மின்ன.

''டேய் ஸ்ரீ! கேட்கிறேன்னு தப்பா நினைச்சுக்காதே! நிஜமாவே நீ அந்தப் பெண்ணைப் பார்த்து மனசைத் தொலைச்சிட்டியா? ஒரு பெண்ணை பார்த்ததும் அவ மேல பைத்தியமா திரியறது ஊர் பேர் தெரியாத பெண்ணை தேடி அலையறது எல்லாம் சினிமாவுக்கு மட்டும்தான்டா லாயக்கு. பிராக்டிக்கலா இதெல்லாம் சரியா வராது. ஏன்னா அந்தப் பெண் இதே ஊராகவும் இருக்கலாம். இல்ல நம்மைப்போல பிக்னிக் வந்த பெண்ணாகவும் இருக்கலாம். இல்ல வெளியூர்ல இருந்து விருந்து விசேஷத்திற்கும் வந்திருக்கலாம். ஒரு வேளை நீ அந்தப் பெண்ணை உண்மையாகவே நேசித்தாலும் எங்கேன்னு போய் தேடுவே. அவளைப் பத்தி உனக்கு என்ன தெரியும். பேரைத் தவிர. ஊர்ல ஆயிரம் ஜானகி இருப்பாங்க. இந்த ஒரு பேரை மட்டும் வெச்சிகிட்டு யாரைப் போய் விசாரிக்க முடியும். நம்மை பைத்தியக்காரங்கன்னு நினைக்க மாட்டாங்க?'' சிவாவின் வார்த்தையில் தவிப்பும் உண்மையும் இருந்தது.

''சிவா! நீ சொல்றது அத்தனையும் உண்மை. அது புரியாத முட்டாள் இல்ல நான். ஆனா... ஆனா.. என்னன்னு தெரியலடா. இந்தப் பெண்ணை பார்த்த மறுநிமிடமே இந்த பாழாய் போன மனது அவ பின்னாலேயே போய்விட்டதே! அதை என்னால கண்ட்ரோல் பண்ண முடியலடா.

நானா இப்படி மாறினேன்னு எனக்கே வெட்கமா இருக்குதுடா.

ஏனோ எம்மனசு சொல்லுது. அவ எனக்காகவே பிறந்தவள்னு. அப்படி அவ எனக்காக பிறந்திருந்தா எத்தனை தடை வந்தாலும் எத்தனை மாதமோ ஆண்டோ ஆனாலும் நிச்சயமா நான் அவளை சந்திப்பேன். நிச்சயமா என்னையும் அவளுக்கு பிடிக்கும். நாங்க வாழ்க்கையிலே இணைவோம்'' ஸ்ரீயின் குரலில் இருந்த உறுதி அனைவரையும் அசைத்தது.

''ஒரு வேளை நம்ம பார்க்க முடியலைன்னா'' தயங்கியவாறே ஒலித்தது சிவாவின் குரல்.

''தேடிட்டே இருப்பேன். என் வாழ்நாள் பூரா அவளை நினைச்சுகிட்டே வாழ்ந்து முடிச்சிடுவேன். அதனால தாடி வளர்த்துகிட்டு ரூமுக்குள்ள அடைஞ்சு விட்டத்தையே பார்த்துகிட்டு



முடங்கிப்போயிடுவேன்னு நினைச்சிடாதே. அவ இந்த உயிரோட கலந்து போயிட்டா. என்னோட நாடித்துடிப்பு இப்போ ரொம்ப சுறுசுறுப்பா இயங்குது. நானும் அவநினைவோட முன்பை விட ரொம்ப துடிப்பா என்னோட சேவையைத் தொடங்குவேன். என்னோட கடைசி மூச்சு வரைக்கும் என் சேவை தொடரும். அவளோட நினைப்பும் இருக்கும்'' முத்தாய்ப்பாய் முடித்தான் ஸ்ரீராம்.

சிலையாய் அமர்ந்திருந்தனர் மற்றவர்கள். ஒரு சில நிமிடங்களிலேயே அவனது இதயத்தை ஆக்கிரமித்துவிட்ட அந்த ஜானகியை பார்க்க அவர்களது மனம் விரும்பியது.

விஷ்ணுதான் முதலில் எழுந்தான். தனது வீடியோ கேமராவை இயக்கி தான் எடுத்த படங்களை எல்லாம் ரீவைண்ட் பண்ணினான். ''டேய் சிவா! நம்ம ஸ்ரீயை பிளாட்டாக்கிய பொண்ணு நிச்சயமா இதுல படமாகி இருப்பா. நம்ம ஸ்ரீயோட அதிர்ஷ்டத்தை இப்பவே கண்டுபிடிச்சிடலாம். ஸ்ரீ நான் ஒவ்வொரு பிரேமா காட்டிட்டு வர்றேன். இதுல உன்னோட ஆளு இருக்குதா பாரு'' என்றவாறு தான் எடுத்த ஸ்டில்சை காட்டினான் விஷ்ணு.

துடிக்கும் இதயத்தோடு ஸ்ரீயும் ஜானகியை பார்க்கும் ஆவலில் மற்றவர்களும் கேமராவை மொய்த்துக் கொள்ள காமிரா தான் விழுங்கிய படங்களை ஒவ்வொன்றாக காட்டிக் கொண்டிருந்தது. கடல்நுரை, படகு, கால் நனைக்கும் பெண்கள் ,துள்ளிக் குதித்தோடும் சிறுவர்கள், சூரியனின் மறைவு, சுண்டல் பொட்டலம் விற்கும் பையன், கடற்கரை மணலில் நடந்த சிறு நண்டு என சகலத்தையும் படமாக்கியிருந்தான் விஷ்ணு.

ஜானகி படத்தில் இருக்க வேண்டும். புகைப்படம் வடிவிலாவது அவள் எனக்கு கிடைக்க வேண்டும். ஸ்ரீயின் மனம் ஓலமிட்டது. திடீரென அவனது கண்கள் ஆச்சரியத்தில் துள்ளியது. இவள்தான். இவளே தான்... என் ஜானகி இவள் தான். துள்ளினான் பதறிய இதயத்தை சற்று சமாதானம் செய்தவாறே அவர்களுக்குக் காட்டியவாறே தானும் பார்த்தான் ஸ்ரீ.

உறவினர் கூட்டத்துடன் வந்து கொண்டிருந்தாள் ஜானகி. அப்புறம் சுண்டல் காரப் பையனிடம் சுண்டல் வாங்குவதில் இருந்தாள். கடல்நுரையை கைகளில் அள்ளித் திரும்பும் போது தெளிவாகவே படம்

''ஒருத்தர் கை தட்டினாலே ஆட்டோ வரும்-எதுக்கு இப்படி ரெண்டு பேரும் கையைத் தட்டுகிறீர்கள்?''

''நாங்கள் ஷேர் ஆட்டோவைக் கூப்பிடுகிறோம்!''

-அரவக்குறிச்சிப்பட்டி
எம்.அசோக்ராஜா.



பிடித்திருந்தான் விஷ்ணு. ''அட! இந்தப் பெண்ணா! ஸ்ரீ இந்தப் பெண்ணை நான் நிறைய ஸ்டில்ஸ் எடுத்தேனேடா! ரொம்ப நேரமா நம்ம பக்கத்தில தான் தண்ணில விளையாடிட்டு இருந்தது. இதோ பாரு'' வரிசையாக அனைத்து போட்டோக்களிலும் ஜானகி சிரித்துக் கொண்டும் ஓடிக் கொண்டும் துள்ளிக் கொண்டும் இருக்க ஸ்ரீக்கு பரவசத்தில் கண்ணீரே வந்துவிட்டது. விஷ்ணுவை தாவி அணைத்துக் கொண்டான்.

''நண்பா! உன்னைப் போய் திட்டிவிட்டேனே. நீயானால் என் வாழ்க்கையையே என் கையில் கொடுத்திருக்கிறாய். உன்னைப் போய் திட்டி..ச்சே... சாரிடா.வெரி ஸாரி. ரொம்ப தேங்க்ஸ்டா. எனக்கு இது போதும்டா... ஜானகி எனக்கு கிடைப்பாளோ இல்லையோ இதோ இந்த ஜானகி கூடவே என் வாழ் நாளை நான் கழிச்சிடுவேன். தேங்க்ஸ்டா.. ரொம்ப தேங்க்ஸ்'' விஷ்ணுவின் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டு எச்சில் படுத்தினான் ஸ்ரீ.

## 5

நான் பார்ப்பதில் எல்லாம்
அட உன்முகம் தானே!
நான் கேட்பதில் எல்லாம்
உன் குரல் தானே!
என்னில் நீயடி! உன்னில் நானடி!

''இதுதாம்மா நடந்தது! அந்த போட்டோஸ் எல்லாம் அவனே எடுத்துகிட்டான். அப்புறம் சென்னை வர்ற வரைக்கும் ஒரே ஜானகி புராணம் தான். ஆனா ஜானகி கிடைக்கிற வரைக்கும் இந்த விஷயத்தை யாரும் உங்ககிட்ட சொல்லக்கூடாதுன்னு சொல்லிட்டான். நாங்க பயந்த மாதிரி அவன் ஜானகி நினைவில துவண்டு போகல்ல. முன்பைவிட ரொம்ப துருதுருப்பா இருக்கான். எங்களைப் பாத்து பேசக் கூட அவனுக்கு இப்ப டைம் இல்ல. ஹாஸ்பிடலுக்கு போனா வீட்டுக்கு வா பேசலாம். பேஷன்ட்டை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு சொல்லி அனுப்பிடுறான். அது தாம்மா வீட்டுக்கு வந்தேன். வந்த இடத்தில நீங்க கேட்டதால உளறிட்டேன். அவன் கிட்ட சொல்லிடாதீங்கம்மா. கொன்னுடுவான் என்னை'' என்றான் திலீபன்.

தன்னிலை மறந்து அமர்ந்திருந்தார் அம்பிகை அம்மாள். மகனின் மனதில் ஏதோ இருக்கிறது என்பது தெரியும். ஆனால் ஒரு பெண் அதுவும் வருடக்கணக்கில் அவளையே நினைத்துக் கொண்டிருப்பான் என அவர் நினைக்கவில்லை.

''அப்படி இல்லடா! இதுக்கு முன்னால படிப்பு படிப்புன்னு இருந்தான். இப்ப அப்படி இல்லையே. கிட்டதட்ட அஞ்சு வருடம் முடியப்போகுது ஹாஸ்பிடல் திறந்து. அப்ப இருந்தே அந்த உமாவும் வேலைக்கு வந்திட்டாளே. இந்த அஞ்சு வருடத்திலே ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சிருப்பாங்க. அதிலேயும் ரெண்டு பேருமே டாக்டர் ஒருத்தொருக்கொருவர் ஒத்தாசையா இருக்கும். அதனால் தான்



கேட்கிறேன்'' என அடுத்த கொக்கியை போட்டார்.

அவர் அவனை துருவிக்கேட்க காரணமில்லாமல் இல்லை. நேற்று மாலை உமாவின் அப்பா வந்திருந்தார் தன் மகளுக்கு ஸ்ரீராமைக் கேட்டு. உமாவின் அப்பாவும், ஸ்ரீராமின் அப்பாவும் சிறுவயது முதலே நண்பர்கள். அந்த முறையில் தான் உமாவின் படிப்பு முடிந்த உடனே ஸ்ரீயின் ஹாஸ்பிடலில் ஜாயின் பண்ணிக் கொண்டாள் உமா. படிக்கும் காலத்திலே தனக்குத் தான் ஸ்ரீராம் என்பதில் உறுதியாக இருந்தாள் உமா. அதற்காகவே வேறு படிப்பு எதற்கும் முயற்சிக்காமல் ஸ்ரீராம் எடுத்த மருத்துவபடிப்பை தேர்ந்துஎடுத்தாள். படிப்பு முடியும் வரை எதற்கும் தன்னிடம் ஒருவார்த்தை கூட பேசாத ஸ்ரீராமிடம் தன் தந்தையின் நட்பு முறையைக் காட்டி அவனது மருத்துவமனையிலேயே சேர்ந்து கொண்டாள். எனினும் வேலை சம்பந்தப்பட்ட பேச்சைத் தவிர வேறு எதையும் பேச மறுத்தான் ஸ்ரீராம். வெறுத்துப்போன உமா இனி இவனை நம்பி பிரயோஜனமில்லை என்று நேரடியாக தன் தந்தையிடம் தனது விருப்பத்தைக் கூற அவரும் டபுள் ஓ.கே. சொன்னதோடு அம்பிகை அம்மாளிடம் வந்து கேட்டுவிட்டார்.

அம்பிகை அம்மாளும் மறுத்துப் பேசமுடியாமல் போனது.ஸ்ரீராமிடம் கேட்டுவிட்டு சொல்கிறேன் என்று பதில் சொல்லி அனுப்பியிருந்தார்.

இன்று அவனது உயிர் நண்பர்களில் ஒருவனான திலீபன் தனியாக கிடைத்ததும் அவனைத் தோண்டி துருவி விட்டார். முதலில் மறுத்த திலீபன் விட்டால் அம்மா உமாவை பேசி முடித்து விடுவார் போல் தோன்றவே மெல்ல வார்த்தையை விட்டான்.

''உமா மட்டுமில்லம்மா! வேற எந்தப் பெண்ணையும் ஸ்ரீ விரும்பமாட்டான்மா! ஏன்னா அவன் மனசில ஏற்கனவே ஒரு பொண் இருக்கா'' சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டான் திலீபன்.

முதலில் தயங்கிய திலீப் என்ன இருந்தாலும் இந்த ஐந்து வருடங்க ளில் நிச்சயம் அந்த ஜானகிக்கு திருமணம் ஆகியிருக்கும். அப்படியிருக்க இன்னும் ஏன் தன் நண்பன் காத்திருக்க வேண்டும்? அன்னையிடம் உண் மையை சொல்லிவிட்டால் மற்றதை அவர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் அனைத்தையும் ஒன்று விடாமல் ஒப்புவித்துவிட்டான்.

அம்பிகையின் கண்களில் நீர் கோர்த்தது. எப்படிப்பட்ட உத்தம பிள் ளையை பெற்றுள்ளேன். காலையில் பார்த்து மாலையில் சந்தித்து ஓரிரு நாட்களில் தங்களது தேவைகளை நிறைவேற்றிவிட்டு பெண்களை கை கழுவி விடுகிற எத்தனையோ பையன்களை பார்த்திருக்கிறோம். தினசரி களில் படித்திருக்கிறோம்.

ஆனால் என் பிள்ளை பார்த்த சில நிமிடங்களில் ஒரு பெண்ணை மன தில் ஏற்றிவைத்து இத்தனை வருடங்களாக பூஜித்துக் கொண்டிருக்கி றானா? அந்தப் பெண் அப்பேர்ப்பட்ட அழகியோ? அவளை கண்டிப்பாக பார்க்க வேண்டும். அருகிலேயே பணிபுரியும் உமாவிடம் கூட அவனது கவனம் சிதறவில்லையென்றால் ஆளை அசத்தும் அப்சரஸாகத் தான் இருப்பாள் அவள். ''ஏண்டா திலீபா! அந்தப் பொண்ணு எப்படி

இருப்பா? நான் அவளைப் பார்க்கணுமே '' என்றார் ஆவலாய்.
'' ஸ்ரீயோட ரூமுக்குப் போய் பாருங்கம்மா. நீங்க எங்கே திரும்பினா
லும் ஜானகி தெரிவாள். வசந்த மாளிகை மாதிரி '' என்றான் சிரிப்புடன்.
'' அடடா! அதனால் தான் இவர் ரூமை பூட்டி சாவியை எடுத்துட்டு
பேறாரா! இருக்கட்டும் நான் பார்த்துக்கிறேன். சரிடா! அந்தப் பொண்
ணைப் பத்தி ஏதாவது விசாரிச்சிங்களா? ஒரு தகவலும் கிடைக்கலையா?''
'' இல்லம்மா! என்னன்னு விசாரிக்கிறது. ஆனாலும் ஊர்ல செட்டி
லாயிட்ட விஷ்ணுகிட்டே அப்பப்ப போன்ல கேட்போம். அவன் கிட்ட
ஒரு போட்டோ இருக்கு. அவனும் ஊர்ல, பக்கத்து ஊரு திருவிழான்னு
எங்கே போனாலும் போட்டோவை தூக்கிட்டு போய் தேடிப்பார்க்கிறா
னாம். ஆனா இதுவரை ஒருதகவலும் இல்லை. ஸ்ரீ இன்னும் நம்பிக்கை
யோடத் தான் இருக்கான். ஆனா எங்களுக்குத் தான் நம்பிக்கை விட்டுப்
போச்சு. சரிம்மா! எனக்கு லேட்டாகுது. ஸ்ரீ எப்போ வருவான்? அவன்
கையில பத்திரிக்கையை கொடுத்தாத்தான் முழு திருப்தி '' என்றான் திலீ
பன்.

**6**

> '' பார்த்து பார்த்து கண்கள்
> பூத்திருப்பேன் நீ வருவாய் என!...
> தென்றலாக நீ வருவாயா
> ஜன்னலாகிறேன் நீ வருவாய் என!... ''

நகரத்தின் ஓரத்தில் மூன்றடுக்கு கட்டிடம் கொண்டு கம்பீரமாய்
நின்று கொண்டிருந்தது அன்பு மருத்துவமனை. பெரிய இரும்பு கேட்
டுக்கு பின்னால் வேப்பமரமும், கொன்றை மரமும் தங்களது நிழலை
வாரி இறைத்துக் கொண்டிருக்க வரிசையாக வளர்த்திருந்த ரோஜா பட்டு
ரோஸ் செடிகள் விதவிதமான வண்ணங்களில் பூத்துக் குலுங்கின. அது
போக வராந்தா ஓரத்தில் சிறிய மண்தொட்டிகள் தொங்கவிடப்பட்டிருக்க
அதிலிருந்த புல் போன்ற கொடிகள் தொங்கி தங்கள் பங்குக்கு அந்த மருத்
துவமனையை அழகாக்கிக் கொண்டிருந்த சீராக வெட்டப்பட்டிருந்த புல்
வெளிகளில் ஆங்காங்கே சிமெண்ட் பெஞ்சுகள் மற்றும் சிறுவர்கள் விளை
யாடும் விதமாக சில ஊஞ்சல்கள் என பிரமாதப்படுத்தியிருந்தான் ஸ்ரீராம்.
'' எல்லாவற்றையும் விட முக்கியம் சுத்தம். சுத்தம் தான் சுகாதாரத்தை
தரும். அதனால தூசு, குப்பை என்று எதுவும் இருக்கக்கூடாது.
இதையெல்லாம் பார்த்து கவனிப்பது மட்டுமே உங்கள் வேலை''
என வெளி வேலைகளுக்கு மட்டுமே ஏழு பேரை அமர்த்தியிருந்தான்
ஸ்ரீராம்.

கீழே பொது மருத்துவமனை. மூன்று பெண் மருத்துவர்கள், இரண்டு
ஆண் மருத்துவர்கள் என வரிசையாக அமர்ந்திருந்த நோயாளிகளை கவ
னித்துக் கொண்டிருக்க. மருந்தகம் அருகே இரண்டாக பிரிந்த மாடிப்படி
களில் இடது புறம் பிரசவ வார்டு, அதையொட்டி பதினைந்து அறைகள்,
அனைத்திலும் பிறந்து ஒருசில நாட்கள் சில மணித்துளிகள் ஆன இளம்



பிஞ்சுகள், மெல்லிய சிணுங்கலைத் தவிர வேறு சத்தம் எதுவுமின்றி
அமைதி.

ஹாலில் பொதித்திருந்த சவுண்ட் ஸ்பீக்கரில் இருந்து வழிந்து கொண்
டிருந்த மெலிதான மெல்லிசை. இரண்டாவது மாடியில் வயதான
பேஷண்ட்ஸ். மூன்றாவது மாடியில் இதர நோயாளிகள் என தெளிவாய்
பிரித்து வைத்திருந்தான். அத்தனையும் தெளிவு, சுத்தம், அமைதி. ஒவ்
வொரு ஹாலிலும் மூன்று நர்ஸ்கள்.

வலதுபுறம் அன்பு மனநல மருத்துவமனை பிரிவு. அங்குதான்
ஸ்ரீயின் வாசம்.

ஸ்ரீராமின் பெயரைத் தாங்கியிருந்த கண்ணாடிக் கதவுகள் பொருத்
தப்பட்ட அறை காலியாக இருக்க, ஸ்ரீராமின் மாலை ரவுண்டஸ் வலம்
வந்து கொண்டிருந்தான். கூடவே முகம் நிறைந்த பூரிப்புடன் கையில்
பேஷன் பைலுடன் கண்களில் மின்னும் புன்னகையுடன் உமா சென்று
கொண்டிருந்தாள். அவனுக்கு பின்னால் இரண்டு நர்ஸ் என ஸ்ரீராமின்
நடை ஒரு ராஜகுமாரனின் உலாவலை நினைவுபடுத்தியது.

ஸ்ரீராமின் முகத்தில் முன்பை விட தேஜஸ் தெரிந்தது. மென்மையும்,
கனிவும் நிரந்தரமாக குடிகொண்டிருந்தது. கண்களில் அணிந்திருந்த மெல்
லிய தங்கபிரேமிட்ட கண்ணாடி அவனது கவர்ச்சியை இன்னும் தூக்கி
யது. இதமான புன்னகையோடு நோயாளிகளிடம் பேசுகையில் மெய்ம
றந்து ரசித்துக் கொண்டிருந்தாள் உமா. '' மிஸ் உமா! மிஸ் உமா! '' என
அவன் அழுந்த கூப்பிட்டதும் தான் திடுக்கிட்டாள் உமா. ச்சே! இப்படியா
புத்திக் கெட்டுப்போய் அவனையே பார்த்துக் கொண்டு நின்றோம். தன்
னையே திட்டிக் கொண்டு '' யெஸ் சார்! '' என்றாள் அவசரமாக.
'' என்னாச்சு மிஸ் உமா! எனி பிராப்ளம். உடம்பு எதுவும் சரியில்
லையா? ''

அந்தரத்தில் மிதப்பது போல் உணர்ந்தாள் உமா. பேசுவது ஸ்ரீதானா?
ஸ்ரீயே தானா தன்னிடமா இந்த கரிசனமா கேட்கிறான். காண்பது கனவா,
கையை கிள்ளிப் பார்த்தாள். ஷ்...ஆ... வலித்தது. அப்போ நிஜம் தான்.
'' மிஸ் உமா! வாட் ஹேப்பண்ட். என்னாச்சு '' ஸ்ரீயின் குரல் உயர
''நத்திங் சார்'' என பைலை பிரித்து ஸ்ரீ பார்த்துக் கொண்டிருந்த நோயாளி
யின் ரிப்போர்ட்டை அவனிடம் நீட்ட யோசனையோடு அதை பெற்றுக்

''மன்னா விலைவாசி ஏறிக்
கிட்டே போகுது''
''அப்படியா? அரண்ம
னைக்கு வேண்டிய பொருட்
களை இப்போதே வாங்கி
பதுக்கி வையுங்கள்''
-செல்வராஜா, சேலம்.



கொண்ட ஸ்ரீ பேஷண்டிடம் திரும்பினான். '' மிஸ்டர் அசோக்! ரிப்போர்ட்ஸ் எல்லாம் கிளியரா இருக்கு. உங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்ல. இனிமே இங்க வந்து ட்ரீட்மெண்ட் எடுத்த எதுவுமே நீங்க நினைக்க வேண்டாம். பதினைஞ்சு நாள் டூர் போயிட்டு வந்ததா உங்க ஸ்டாப்புங்க கிட்டே சொல்லுங்க. எப்பவும் ரிலாக்ஸா இருங்க. ஹெவி ஒர்க் இருந்தா அதை பிரிச்சு செய்யும் அளவுக்கு நல்ல ஒர்க்கரை சேர்த்துக்கங்க. நோ டென்ஷன் ஓ.கே, பிஸ்னெஸ்ல லாபம் நஷ்டம் ஏற்றம், இறக்கம் எப்பவும் இருக்கும். இனிப்பு மட்டுமே சாப்பிட்டா திகட்டாதா? அப்பப்போ கசப்பு மருந்தும் சாப்பிட்டாத் தானே உடம்பு ஆரோக்கியமா இருக்கும். அப்படி நினைச்சி ஈசியா எடுத்துக்கங்க. ஒரு பெரிய பிஸினெஸ் மேன் சின்ன, சின்ன விஷயத்துக்கெல்லாம், துவண்டு போகக்கூடாது. ஓ.கே.வா '' என்றவாறு அருகிலிருந்த அசோக்கின் அன்னையிடம் திரும்பினான்.

'' அம்மா! நீங்க தான் இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கணும். தப்பித்தவறி கூட பேச்சுவார்த்தையில உறவுக்காரங்ககிட்ட இப்படி இந்த ஹாஸ்பிடல்ல அசோக்கை சேர்த்திருந்தோம் அப்படின்னு சொல்லிடாதீங்க. ஏன்னா இது மனநல மருத்துமனை. அசோக்குக்கு ஏற்பட்டது வெறும் மனக்குழப்பம் தான். அப்பா தூக்கி நிறுத்தின பிஸினெஸ் தன்னால சரிஞ்சிடுமோன்ற பயத்தால ஏற்பட்ட குழப்பம். அதை கவுன்சிலிங் பண்ணியே சரி பண்ணியாச்சு. ஆனா மத்தவங்க அப்படி ஏத்துக்கமாட்டாங்க. ஆளுக்கு ஒன்னா திரிச்சி பேசுவாங்க. அது அசோக்கோட எதிர்காலத்தையே பாதிக்கும். ஸோ. பார்த்து நடங்க ஓ.கே.வா! நீங்க நாளைக்கு மார்னிங் டிஸ்ஜார்ஜ் பண்ணிடலாம். நைட் சாப்பிட்டு நல்லாத் தூங்குங்க ஓ.கே. அசோக் '' என்றவாறு எழுந்தான் ஸ்ரீராம்.

ரிப்போர்ட்டை எடுத்து பைலில் வைத்துக் கொண்டு அவன் பின்னே சென்ற உமாவிற்கு பெருமை தாளவில்லை. '' அப்பாடி! என்ன ஒரு மனுஷன். எப்படி இவரை எல்லாருக்கும் பிடித்துப் போகிறது என்று இப்போதல்லவா தெரிகிறது. வந்த ஒரு வாரமும் கடுகடுவென்று சீறும் சிறுத்தையாக இருந்த அசோக்கே இன்று பூனைக்குட்டியாய் மாறிவிட்டானே. இவரும் என்னமாய் வருடிவிடுகிறார். செய்கையால் மட்டுமல்ல பேச்சாலும்

''தம்பி வேணுமா தங்கச்சி பாப்பா வேணுமானு என் மகனிடம் கேட்டேன்''

''அவன் என்ன கேட்டான்?''

''அப்பா உங்க தங்கச்சியோட பாப்பா தான் வேணும்னு சொல்லிட்டான்!''

- அரவக்குறிச்சிப்பட்டி
எம்.அசோக்ராஜா.





வசதியானவர்கள் மட்டும் என்றில்லை சாரதாம்மாள் அனாதை இல்லத்தில் இருந்து வந்திருக்கும் பேஷண்ட்களிடமும் இதே வாஞ்சை. அவர்களுக்கு கட்டணமும் கிடையாது. எனினும் எந்த பேதமும் இன்றி எப்படி அரவணைக்கிறார். ஸ்ரீ எல்லோரையும் பதமாக பரிவாக அணைத்து செல்லும் நீங்கள் என்னை மட்டும் ஏன் ஏறெடுத்து பார்க்க கூட மறுக்கிறீர்கள்? நான்... என்... மனம்... என் ஏக்கம் எல்லாம் எப்போது உங்களுக்கு புரியும்? புரியுமா, இல்லை புரிந்தும் புரியாதது போல் நடிக்கிறீர்களா? ''

## 7

*'' காணவேண்டும் சீக்கிரம்*
*என் காதல் ஓவியம்*
*வராமலே என்னாகுமோ*
*என் ஆசை காவியம் ''*

" ஹாய் சுஜாதா! எப்படி இருக்கே'' என்ற ஸ்ரீராமின் செல்லமான குரலில் கட்டிலில் உட்கார்ந்து தலை முழுவதும் மூடி முக்காடிட்டு அமர்ந்திருந்த அந்த இளம் உருவம் விருட்டென தன்னை மூடியிருந்த போர்வையை விலக்கியது. '' ஹப்பா வந்திட்டீங்களா சார்! ஏன் சார் என்னை பர்ஸ்ட் ரூமிற்கு ஷிப்ட் பண்ணிடுறீங்களா '' என்றாள் அந்த சின்ன பெண் சுஜாதா. மிஞ்சிப்போனால் ஒரு பதினாறு வயது தான் இருக்கும். பள்ளி மாணவி போல் துறுதுறுப்பாய் அழகாய் தங்க நிறத்தில் புள்ளி மானாய் தெரிந்தாள்.

முகத்திலும் பேச்சிலும் இன்னும் குழந்தைத் தனம் மிச்சம் இருந்தது. இந்த பால் மணம் மாறாத குழந்தையைப் போய் ஏமாற்ற அந்த காமுகனுக்கு எப்படி மனம் வந்தது. அவனெல்லாம் ஒரு மனிதனா? சுஜாதாவை பார்த்ததும் ஏற்படுகிற பாரம் இன்றும் ஸ்ரீராமின் மனதில் ஏறிக்கொள்ள இயல்பாய் சிரித்தபடி '' ஏன்! என்னாச்சு சுஜிக்குட்டி இந்த ரூம் பிடிக்கலையா '' என்று கேட்டவாறு அவளை டெஸ்ட் பண்ண ஆரம்பித்தான்.

'' ஆமாம் சார் ''

'' ஏன் பிடிக்கலை ''

'' என்னோட ரூம் கடைசி ரூமா இருக்கே ''

'' அதனால என்ன பயமா இருக்கா? ''

'' ம்ஹூம் பர்ஸ்ட் ரூம்னா நீங்க மொதல்ல என்னைப் பார்க்க வந்திடுவீங்கள்ல, இப்பப்பாருங்க! நான் தான் கடைசியில இருக்கேன். நீங்க வர லேட்டாகுது. நான் காபி, பிஸ்கட் கூட சாப்பிடாம இருக்கேன் தெரியுமா? '' சுஜாதாவின் முகம் அழுகைக்கு தயாரானது.

'' அச்சச்சோ! சுஜிக்குட்டி அழலாமா. காபி சாப்பிடாம இருக்கக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல அடம் பண்ணக்கூடாது. ஓ.கேவா அம்மா காபி கொடுங்க '' என்றவாறு அவளது தாயாரை ஏறிட்டான்.

அவர்களது உரையாடலை கண்களில் கண்ணீருடன் புடவைத் தலைப்பால் வாயை மூடியபடி கேட்டுக்கொண்டே விம்மியபடி இருந்த மதுரம் உடனே கண்ணீரைத் துடைத்தபடி அருகிலிருந்த நாற்காலியில்

இருந்த பிளாஸ்கில் சூடான காபியை டம்ளரில் ஊற்றி அவனிடம் நீட்டினாள். அதை வாங்கி சுஜாதாவிடம் கதையளந்தபடியே அவளை குடிக்க வைத்தான். சுஜாதாவிடம் உமாவிற்கும் ஒரு பரிவு உண்டு. அதனால் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தாள். தினமும் நடக்கும் காட்சி தான். ஸ்ரீராம் இந்த அறைக்கு வந்தாலே சிறு குழந்தையைப் போல் நடந்து கொள்வான். அதுதான் சுஜாதாவை வழிக்கு கொண்டுவரும் முயற்சி. ஒழுங்காக சாப்பிட்டு விட்டு மாத்திரைகளை விழுங்கி படுக்கப்போகும் வரை அவளை நகர விட மாட்டாள். இது அனைவரும் அறிந்தது. அதனாலேயே அவளது ரூமிற்கு கடைசியாக வருவான் ஸ்ரீராம்.

பேசியபடி சாப்பிட்டு முடித்திருந்தாள் சுஜாதா '' ம். வெரிகுட். இப்ப சின்னதா ஒரு இன்ஜெக்ஷன் என்ன '' சொல்லிக் கொண்டே புஜத்தில் ஊசியை செலுத்தி மருந்தை இறக்கினான்.

'' ஸ்..ஸ்..ஆ..ஆ ஏன் டாக்டர் ஐ'ம் ஆல்ரைட் பின்ன ஏன் எனக்கு இன்ஜெக்ஷன்'' முகத்தை சுருக்கியவாறே கையால் ஊசி போட்ட இடத்தை அழுத்தி தேய்த்தவாறே கேட்டாள் சுஜாதா.

மனதை அழுத்திய பாரத்துடன் அவளது மெலிதான மேடிட்ட வயிற்றை பார்த்தான். இதயம் பாறாங்கல்லாய் கனத்தது. '' உன்னோட ஹெல்த் நல்லாயிருக்கனுமே. அதனால தான் இந்த ஊசி '' லேசாக தோளைக் குலுக்கினான் ஸ்ரீராம்.

'' ஹய்யோ! டாக்டர் அப்படியே நினைத்தேன் வந்தாய் விஜய் போலவே இருக்கிங்க என '' எப்போதும் போல் இயல்பாக தனது பேச்சை சுஜாதா தொடங்க '' போச்சுடா! ஆரம்பிச்சிட்டாய்யா ஆரம்பிச்சுட்டாயா'' என்றவாறு சிரித்தான் ஸ்ரீராம்.

'' ஹய்யோ! இப்போ அப்படியே காதல்கோட்டை அஜித் மாதிரியே இருக்கு. ''

'' போச்சு போ. ஷாலினி மட்டும் இதைக் கேட்டாங்க, கட்டிவெச்சி உதைப்பாங்க ''

'' ஹய்யோ! நம்பலையா நீங்க, நிஜமாவே சிரிச்சா ரொம்ப அழகா அஜித் மாதிரியே இருக்கிங்க. எப்பவும் சிரிச்சிகிட்டே இருங்க டாக்டர் ''.

'' அப்போ பக்கத்து ரூமை எனக்கு ஒதுக்கிடலாமா ''

'' ஹய்யோ! இப்படி கிண்டலா பேசுறப்போ அப்படியே ஜெயம் ரவியே தான் நீங்க '' '' ம்ஹூம் இப்போ அப்படியே பிரசாந்த் தான் ''.

'' ஹய்யோ சாமி! கோலிவுட்ல எந்த ஹீரோவையும் விட்டுவைக்க மாட்டியா? மொத்த கோடம்பாக்கமும் நான்னு சொல்லிடுவே போலிருக்கே ''

'' ம்ஹூம் அப்படி சொல்லி முடிக்க மாட்டேன். இந்த கருகரு மீசையை மட்டும் எடுத்திட்டீங்க அப்படியே ஷாருக்கான் தான், கொஞ்சம் சைடா பார்த்தா அமீர்கான் அப்புறம்....''

'' போதும் போதும் '' இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி கும்பிடு போட்டான் ஸ்ரீராம்.

'' நீ இப்ப சொன்னது மட்டும் இவங்க காதுக்கு போச்சு அப்புறம் நான் அம்பேல் தான் '' என்றவாறு கலகலத்து சிரித்தான்.

நர்ஸ் கொடுத்த மாத்திரையை சாப்பிட்டு விட்டு அமைதியாக அவ



ளைப் பார்த்து '' ஏன் டாக்டர்! உங்களை இவ்வளவு பேரோட கம்பேர் பண்றேனே, நான் யார் மாதிரி இருக்கேன்னு சொல்லமாட்டீங்களா '' என்றாள் ஏக்கமாக,

ஒரு கணம் அமைதியாக இருந்தவன் '' உனக்கென்ன ஸ்ரீதேவி மாதிரியிருக்கே '' என்றான் இயல்பாக.

'' ஓ! மூன்றாம்பிறை ஸ்ரீதேவியா '' என்றவாறு கை கொட்டிச் சிரித்தாள்.

அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரம் உடைந்து போக மதுரம் குமுறி அழுதாள்.

''ஏதோ வெளியூர்ல இருந்து வேலைக்காக வந்தவன். பக்கத்து வீட்டுக்காரன்னு நினைச்சி பிள்ளையை சும்மா பழக விட்டது இப்போ எவ்வளவு பெரிய பாவத்துக்கு இடமாச்சு. அவன் குடும்பஸ்தன்றதே எனக்கு இன்னிக்குத் தான்யா தெரிஞ்சது. அவனை நான் என்னய்யா செய்ய முடியும்.

போச்சு இவ வாழ்க்கை மொத்தமும் முடிஞ்சுப் போச்சே. இனிமே நான் என்ன செய்வேன். டாக்டரம்மாகிட்டே கேட்டேன். குழந்தையை அழிக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க. இவ உயிருக்கே ஆபத்தாகும்னு சொன்னாங்க. புத்தி கலங்கிப் போன இவளைப் பார்ப்பேனா, இல்ல பாரச்சுமையா வளர்ற சிசுவைப் பார்ப்பேனா. நான் என்ன செய்வேன். சொல்லுங்க தம்பி '' மதுரம் கதறியதில் அனைவரும் செயலற்று சிலையாய் நின்றனர்.

சுஜாதா ஒரு வெகுளிப்பெண். சினிமா பைத்தியம். கொள்ளை அழகு. இதைப் பயன்படுத்தி அவள் வீட்டுக்கு அருகில் குடியிருந்தவன் அடிக்கடி சினிமாவிற்கு அழைத்துச் சென்று ஏதோ ஒரு சூழ்நிலையில் அவளை கெடுத்தும் விட்டான். வீட்டு வேலை செய்து பிழைப்பு நடத்தி வரும் மதுரத்திற்கு இது உடனே தெரியவில்லை. மசக்கை வாந்தியெடுத்த பின் தான் உஷாராகி விசாரிக்க அவள் பக்கத்து வீட்டுக்காரனை கை காட்டிவிட்டு புழக்கடையில் இருந்த கிணற்றுக்குள் விழுந்தாள். உயிருக்கொன்றும் ஆபத்தில்லையென்றாலும் சுற்றுச்சுவரில் தலைமோதி தலையில் பலத்த அடி. அந்த அடியில் தனக்கு நேர்ந்ததை சுத்தமாய் மறந்து விட்டாலும் அவளது பேச்சு பாட்டு கூத்து எல்லாம் அதிகரித்து விட்டது .

மதுரம் வேலை செய்யும் வீட்டு முதலாளி ஸ்ரீராமிடம் பேசிவிட்டு மதுரத்தையும், சுஜாதாவையும் அனுப்பி வைத்தார். அவனின் வைத்தியத்தில் சுஜாதா கொஞ்சம், கொஞ்சமாக மாறிக் கொண்டிருந்த நேரத்தில் வயிற்றில் சிசுவும் வளர மதுரம் குழந்தையின் தந்தையிடம் போய் மன்றாடியிருக்கிறாள்.

அவனும் ஊரைவிட்டே போய்விட்டான். இனி இந்த ஏழைத் தாயினால் என்ன செய்ய முடியும்? தன்னையும் மீறி கண்கள் கலங்கிய ஸ்ரீராம் கட்டிலைப் பார்த்தான். இத்தனை தளேபரத்திலும் சுஜாதா தூங்க ஆரம்பித்திருந்தாள். ஸ்ரீயின் கைகளை இறுகப்பற்றிக் கொண்டு முகத்தில் புன்னகையோடு தூங்கும் அவளையே பார்த்தான்.

தன் எதிர்காலத்தைப் பற்றியோ நிகழ்காலத்தைப் பற்றியோ எந்தக்

கவலையும் இல்லாமல் அப்போது தான் பூமிக்கு வந்த பிஞ்சுக்குழந்தை யாய் தூங்கிக்கொண்டிருந்தாள். இந்தக் குழந்தையின் வயிற்றில் இன் னொரு குழந்தையா கடவுளே! பிரசவ வலியை இந்த பூவுடல் எப்படித் தாங்கும் அதன் பிறகு ஊர் பேசும் அவல பேச்சை இந்த பிஞ்சு மனம் எப் படி ஏற்கும்? வயதுக்கோளாறால் ஏற்பட்ட விபரீதம் தான்.

ஆனால் பாவமும் பழியும் வசைச்சொற்களும் பெண்களுக்கு மட் டுமே கிடைக்கிறதே! இது என்ன நியதி. யாரிட்ட சாபம் இது. பெண்களை தெய்வமாகவும், நதியாகவும், பூமியாகவும் வணங்கும் சமுதாயம் பாவங் களை மொத்தமாகச் சுமக்கும் ஒரு இடிதாங்கியாக ஆக்கிவிட்டதே. இதோ இவளை ஏமாற்றியவன் இன்று மனைவி குழந்தைகளோடு ஒதுங் கிவிட்டான்.

இந்த பேதைப் பெண்ணின் நிலை? இவள் வயிற்றில் வளர்ந்து இன் னும் சில மாதங்களில் வெளியே வரும் குழந்தையின் நிலை? அதன் எதிர் காலம்?

'' டாக்டர் டாக்டர்...'' உமாவின் குரலால் கலைந்தாள். '' டாக்டர் அம்மா நாலஞ்சு முறை போன் பண்ணிட்டாங்க. உங்க பிரண்ட் வீட்டுக்கு வந்து ரொம்ப நேரமா வெய்ட் பண்றாராம். சீக்கிரமா வரச் சொன்னாங்க.'' என்றாள் ரிஷப்னிஸ்ட் நர்ஸ்.

'' ஓ! மறந்தே போயிட்டேன் தேங்க்யூ சிஸ்டர் '' என்றவாறு சுஜாதா வின் கைகளில் சிறைப்பட்டிருந்த தனது கைகளை மெதுவாக உருவி எடுத்தாள். மெலிதாக முனகியபடி திரும்பிப்படுத்தவளை தட்டிக் கொடுத்துவிட்டு '' பத்திரம்மா நர்ஸ் கவனிச்சுக்கங்க நான் கிளம்பறேன்'' என்றவாறு வெளியேறியவள் தனது அறையை அடைந்தாள்.

ஒரு பார்மாலிட்டிக்காவது பை உமா என சொல்லிட்டுப்போகக்கூ டாதா, இவள் என்ன ஜடமா? கோபமாக அவளது அறையை வெறித் தாள் உமா.



'' உன்னைக்காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல
நீ இல்லாமல் நானும் நானல்ல''

'' அம்மா! ரொம்ப இருட்டிப்போச்சு. நான் இன்னும் நாலஞ்சு பேருக்கு இன்விடேஷன் கொடுத்திட்டு வீட்டுக்கு திரும்பணும். ஸ்ரீ வந்தா சொல்லுங்க. என் வீட்டுக்கு வாடான்னா டயமில்லைன்னு தட் டிக்கழிக்கிறான். இந்த சன்டே எப்படியும் வரச்சொல்லிடுங்க.

என் புது வீட்டு அட்ரஸ் இன்விடேஷனுக்கு பின்னால தெளிவா எழு தியிருக்கேன், சன்டே எதிர்பார்ப்பேன்னு சொல்லுங்கம்மா, வர்றேம்மா '' என்றவாறு அவரது காலில் விழுந்து நமஸ்கரித்தான்.



'' எல்லா நலமும் பெற்று சந்தோஷமா இருப்பா '' மனதார வாழ்த்தி வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தாள்''. திரும்பி வந்து சோபாவில் அமர்ந்து அவனது திருமண அழைப்பிதழை தனது கையில் எடுத்த போது ஸ்ரீராமின் கார் ஓசை கேட்டது. வேகமாக எழுந்து வாசலுக்கு சென்றாள். போர்டிகோவில் காரை நிறுத்தி பூட்டிவிட்டு கையில் சாவியை சுழற்றிய வாறே வந்த மகனை கண்கொட்டாமல் பார்த்தாள்.

புதிதாக இப்போது தான் பார்ப்பது போல் இருந்தது. தந்தையின் உய ரத்தை அப்படியே வாங்கியிருந்தான். நிறமும் இதழ்களில் எப்போதும் தேங்கியுள்ள புன்னகையும் தன்னிடமிருந்து பெற்றுள்ளதை எண்ணி பெருமையடைந்தாள். தன் உயரத்திற்கேற்ற கம்பீர நடை. யாரையும் ஒரே பார்வையில் அளந்து விடும் கூர்மையான மின்னலடிக்கும் கண்கள், இந் தக் கண்களைப் பார்த்துதான் நோயாளிகள் தங்கள் மனக்குமுறல்களை ஒளியாமல் மறையாமல் இவனிடம் கொட்டுகிறார்களோ. எப்போதும் புன்னகையுடன் இருந்த இதழ்கள் எனக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லை என்று அடித்துக்கூறியது. தன் மகனை எண்ணி பெருமிதம் கொண்டது மனம். இவன் என் மகன். என் பத்தரைமாற்றுத் தங்கம்.

இவன் என்றும் இன்பமாய் வாழ அந்த ஜானகி கிடைக்க வேண் டுமே. இத்தனை வருடங்களாக மனதில் அந்தப் பெண்ணை வைத்துக் கொண்டு அந்த துயரம் எதுவும் சிறிதும் காட்டாமல் சிரித்துக் கொண்டே இருக்கிறானே! இவனிடம் எப்படி கேட்பது? எப்படியும் அந்த அழகுப் பெண்ணை பார்த்தே ஆக வேண்டும். மனம் ஆவலாய் பறந்தது.

தாயின் காதிற்குள் அம்மா என்று கத்தினான் ஸ்ரீராம். பதறிப்போய் உணர்வு பெற்றாள் அம்பிகை. '' என்ன அம்மா! எப்பவும் போல காலை யில டாடா காட்டிட்டுத்தானே போனேன். என்னவோ நிறைய வருஷம் கழிச்சு இப்பத் தான் பார்ப்பது போல் இப்படி பார்க்கறிங்க, எங்கே அந்த தடியன் சாப்பிட்டானா? '' என்று பேசிக்கொண்டே தாயைத் தாண்டி வீட் டிற்குள் நுழைந்தான். அவன் பின்னால் வந்த அம்பிகை அலுத்துக் கொண் டாள்.

'' அடப்போப்பா! அவனும் தான் எத்தனை நேரம் காத்திருப்பான். இப்பத்தான் போனான். என்னவோ உன்னைப் பார்த்தே ஆகனும்னான். நான் தான் அவனோட புதுவீட்டு அட்ரஸ் வாங்கி வெச்சிட்டு அனுப்பி

"டாக்டர் எப்பவும் இயல்பா தான் வைத்தியம் பார்ப்பாரு!"
"அதுக்காக பைபாஸ் ஆப ரேஷனை பைப்பாஸ் ரோட்டில தான் பண்ணுவேன்னு சொன்னா எப்படி?"
-பி.பாலாஜி கணேஷ்.
கோவிலாம்பூண்டி.



னேன். இன்னும் சில பேருக்கு பத்திரிக்கை வெச்சிட்டு போகணுமாம். சரின்னு போகச் சொல்லிட்டேன். இந்த பத்திரிக்கையைப் பாரு இன்னும் பத்து நாள்ல கல்யாணமாம். பின்னால அட்ரஸ் எழுதி இருக்கான். நீ பாரு நான் போயி டிபன் எடுத்துட்டு வர்றேன் '' என்றவாறு உள்ளே சென்றாள்.

சோபாவில் சாய்ந்து கொண்டு பத்திரிக்கையை பிரித்தவாறே தனது செல்லால் திலீபனை அழைத்தான். ஸ்ரீயின் நம்பரை பார்த்ததுமே தனது லைக்கை ஓரம் கட்டினான் திலீபன்.

'' என்னடா டாக்டர்! போனெல்லாம் பண்றே. என் நம்பரை இன்னும் வச்சிருக்கியா என்ன? '' திலீபனின் குரலில் கோபம் தொனித்தது.

'' ஸாரிடா நண்பா, வெரி ஸாரி! உன்னை வீட்டுக்கு இன்னிக்கு வரச் சொன்னதே மறந்து போயிட்டேன். ஹாஸ்பிடல்ல ஹெவி ஒர்க். உனக்குத் தான் தெரியுமே அந்த சுஜாதா கேஸ். அது இன்னிக்கு ரொம்பவும் டென்ஷனாப் போச்சுடா. என்னால வேற எதையும் யோசிக்கவே முடியல்ல. ஸாரிடா '' ஸ்ரீயின் குரலில் உண்மையான வருத்தம் தெறிக்க உடனே இளகிவிட்டான் திலீபன்.

'' ஓ.கேடா! டாக்டர் தொழில்னா சும்மாவா சரி, சரி அதெல்லாம் போகட்டும். வர்ற சன்டே வீட்ல வெச்சு என்கேஜ்மெண்ட் பங்ஷன் இருக்குடா. பொண்ணு வீட்டு வழக்கமாம். அதனால் மாப்பிள்ளை தோழனா நீயும் வந்திடுடா. விஷ்ணு, சிவா எல்லார்கிட்டயும் சொல்லிட்டேன். எல்லாருமே வர்றாங்க. அப்புறம் நம்ம சந்த்ரு கூட வர்றான்டா. மலேசியாவில் இருந்து அவனுக்கு ஒன் மன்த் லீவாம். நீயும் கண்டிப்பா வந்திடுடா. ஏதாவது சாக்கு போக்கு சொல்லிடாதே. ப்ளீஸ் நாமெல்லாம் ஒண்ணா சந்திச்சு எவ்ளோ நாளாச்சு. அதுக்காகவேணும் நீ கண்டிப்பா வரணும். வருவியாடா? ''

'' கண்டிப்பாடா, கண்டிப்பா வர்றேன். சந்த்ருவை பார்த்து மூணு வருஷம் ஆச்சில்ல. அப்புறம் விஷ்ணு என்ன ஏதாவது சொன்னானா? '' தயங்கினான் ஸ்ரீராம்..

'' ஜானகியைப் பத்தியா '' '' ம் '' ''ஸாரிடா ஸ்ரீ நேற்று கூட கேட்டேன், எந்த தகவலும் இல்லையாம். தேடுறது வேஸ்ட்ன்றான். நானும் தான் கேட்கிறேன் ஸ்ரீ, இந்த அஞ்சு வருஷத்தில இன்னுமா அவளை மறக்காம இருக்கற. ஏண்டா வேற எந்தப் பொண்ணும் உன் கண்ணுல படலியா ''

'' என்னடா திலீ நீயும் இப்படி பேசுற. என் கண்கள் ஜானகியைத் தவிர வேறு யாரையும் பார்க்க விரும்பாது. என் நெஞ்சம் அவளைத் தவிர இன்னொன்றை தேடாது. என் வாழ்க்கையே ஜானுதான். ப்ளீஸ் எல்லாம் புரிஞ்சும் இப்படி கேட்டு மனசை கஷ்டப்படுத்தாதே '' ஸ்ரீயின் குரலில் வலி தெரிந்தது.

'' ஸாரிடா மச்சான். சும்மா ஏதோ விளையாட்டுக்கு கேட்டேன். உம் மனசை காயப்படுத்திட்டேனா? ஸாரிடா அப்புறம் ஒரு முக்கியமான விஷயம், ஒரு இக்கட்டான நிலையில் உன் மேட்டரை அம்மாகிட்டே சொல்ல வேண்டியதாப் போச்சு. உன் நல்லதுக்காகத்தான்... அம்மாகிட்டே பேசினா புரிஞ்சுக்குவ சரி, யாரோ கால் பண்றாங்கடா. அப்புறம் பேசலாம், சன்டே மீட் பண்றோம். மறந்திடாதே பை '' என்றவாறு



வைத்து விட்டான்.

'' பாவி நான் வர லேட்டானதால அம்மாகிட்டே போட்டுக் கொடுத்திட்டானே. இனி அம்மாவை எப்படி சமாளிப்பது? எப்படியும் ஒரு நாள் தெரிந்து தானே ஆக வேண்டும் பார்க்கலாம் '' அம்மாவிற்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

## 9

*''பசுந்தங்கம் புது வெள்ளி மாணிக்கம்*
*மணிவைரம் இவையாவும் ஒருதாய்க்கு*
*ஈடாகுமா விலை மீது விலை வைத்துக் கேட்டாலும்*
*கொடுத்தாலும் கடைதன்னில்*
*தாயன்பு கிடைக்காதம்மா ''*

சூடான பஜ்ஜியும், தேங்காய் சட்னியும் பிரமாதமான காபியும் மகனிடம் கொடுத்ததோடு சரி, அம்பிகை வாயைத் திறந்து ஒரு வார்த்தை கேட்கவில்லை. அவன் சாப்பிட்டு முடித்துவிட்டு காபியை குடித்தவுடன் காலி தட்டையும், டம்ளரையும் உள்ளே கொண்டு சமையல்காரம்மாவிடம் கொடுத்து விட்டு '' ஸ்ரீ உனக்கு ராத்திரி என்ன பண்ண சொல்லட்டும், சொல்லிட்டு நீ போய் ரெஸ்ட் எடு ''என்றாள்.

'' அம்மா! நைட்டுக்கு தோசை போதும். நீங்க எம்பக்கத்துல வந்து உட்காருங்க. '' என்றான்.

'' சரிப்பா! ஏய்... வள்ளியம்மை தோசை போதுன்றான் தம்பி! நானே வார்த்துடுறேன். சட்னி மட்டும் வெச்சிட்டு நீ போய் படு. அவன் சாப்பிட நேரமாகும். சரியா '' என்று சமையலறையை நோக்கி குரல் கொடுக்க, '' சரிங்கம்மா '' என பதில் வந்ததும் மகனை நோக்கி வந்தாள்.

அவள் அமர இடம்விட்டு நகர்ந்தவன் '' அம்மா! எனக்கு மனசெல்லாம் ஒரே பாரமாயிருக்கு. கொஞ்ச நேரம் உங்க மடியில தலை வெச்சு படுத்துக்கட்டுமா '' மெல்லிய குரலில் தன் மகன் வினவ, தாயுள்ளம் பதறிப்போயிற்று.

'' இது என்னப்பா கேள்வி! படு ராஜா '' பரிவோடு மகனை தன் மடி மீது சாய்த்து அவனது அடர்ந்த தலைமுடியை வருடிவிட்டு தட்டிக்கொடுத்தாள். ஸ்ரீராம் கண்களை மூடிக்கொண்டான். சொர்க்கம். எத்தனை வயதானால் என்ன தாயின் மடி எந்த வயதிலும் இனிய சுகம்.

அம்மா சிறுவயது முதலே எதற்கும் தன்னை திட்டியது கூட இல்லை, எது கேட்டும் மறுத்ததும் இல்லை. வருடத்தில் இரு முறை மட்டுமே வெளிநாட்டிலிருந்து வந்து போகும் தந்தையை விட தன் சிறகுகளுக்குள் பதுக்கி பாதுகாக்கும் தாய் தான் அவன் உலகம். அதனால் தான் தனது பதிமூன்றாம் வயதில் ஒரு விமான விபத்தில் தந்தை இறந்த போதும் கூட ரொம்பவும் மனமுடைந்து போய்விடவில்லை. ஆனால் அம்பிகை தான் ரொம்பவும் இடிந்து போனாள். இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வெகுநாட்களானது. தவித்துப் போனான் ஸ்ரீராம். அம்மா சிலையாய் அமர்ந்திருந்த கோலம் கண்டு பிடிக்காமல் அழுது கொண்டே இருந்தான்.

அவன் நிலையை கண்டு கிராமத்தில் இருந்து அம்பிகையின் அம்மா

அழகம்மாள் புறப்பட்டு வந்து பேரனையும் மகளையும் கண் போல் பார்த்துக் கொள்ள மெல்ல மெல்ல தேறினாள் அம்பிகை. அன்று முதலே மகனுக்காக மட்டுமே வாழத் தொடங்கினாள். ஸ்ரீயும் தாயின் மனதறிந்து நல்ல பிள்ளையாகவே வாழத் தொடங்கினான். வாலிப வயதின் தொடக்கத்தில் சிகரெட், பான்பராக் என ஆரம்பித்த நண்பர்களை வெறுத்தான். இயல்பாகவே நன்னடத்தை கொண்ட சிலரே நெருக்கமான நண்பர்களாக இருந்தனர். படிப்பிலும் படுசுட்டி .இப்படி எல்லா விதத்திலும் தங்கமான பிள்ளையாக இருந்ததில் அம்பிகைக்கு மிகுந்த ஆனந்தம். அதனால் தான் அவன் மருத்துவ படிப்பிற்கு ஆசைப்பட்ட போதும் மறுக்காமல் சம்மதித்தாள். தேவைக்கும் அதிகமாக கணவர் சொத்துக்களை குவித்து வைத்திருந்தார். ஒரே மகனின் ஆசையை மறுக்க முடியுமா? அமெரிக்கா சென்று படிக்க வேண்டும் என்றதும் அங்கு தங்கையிடம் பேசி அவனை சந்தோஷமாக அனுப்பி வைத்தாள். அவன் புறப்பட்ட போது அவனைக் கட்டிக்கொண்டு அழுதது இன்னும் ஸ்ரீராமின் மனக்கண்ணில் தெளிவாகத் தெரிந்தது. இப்படி அழும் அம்பிகையை விட்டுப் போவதா என்று கூடத் தயங்கினான்.

பாட்டி தான் சமாதானம் செய்து அனுப்பி வைத்தாள். பாட்டியின் மறைவுக்கு கூட வரமுடியாமல் போனது. ஆனாலும் அம்மா போனிலேயே தைரியம் சொன்னாள். வெளிநாடு சென்று திரும்பியதும் அங்கு நடந்ததை ஒன்று விடாமல் ஒருவாரமாகச் சொன்னான். அவன் வாழ்வில் முதலும், கடைசியுமாய் அவன் தாயிடம் மறைத்தது சுற்றுலாவில் ஜானகியைக் கண்டு மனதை இழந்தது மட்டும் தான். அதையும் சொல்லியிருக்கலாம். என்னவென்று சொல்வது, அவளைப் பற்றி எதுவும் தெரியாமல்? அதனால் அவளை நேரில் கண்டு கொண்ட பிறகு சொல்லலாம் என்று விட்டு விட்டான். ஆனால் இன்று தன் நண்பன் மூலம் தெரியவந்து விட்டதே! அம்மா என்னைப் பத்தி என்ன நினைத்திருப்பார் எதுவும் கேட்கவும் இல்லையே! அப்படியானால் என் மீது வருத்தம் தானே. கூடாது. இனியும் மறைக்கக்கூடாது. முடிவு செய்தவனாய் '' அம்மா '' என்றழைத்தான்.

'' என்னப்பா '' அம்பிகையின் குரல் நெகிழ்ந்திருந்தது. தலைக்கு மேல் வளர்ந்த மகன் மனபாரத்தில் மடியில் படுத்தான் எந்தத்தாய் உள்ளம் நெகிழமாட்டாள்.

'' அம்மா உங்க கிட்டே ரொம்ப நாளா ஒரு விஷயம் சொல்லணும்னு இருந்தேன். பட் அதை எப்படி சொல்லணும்ன்னு தான்... '' மகனின் தயக்கமே விஷயம் எதைப்பற்றி என்பதை தெரிவித்தது.


'' எங்கிட்டே என்னப்பா தயக்கம். சொல்லலாம்னா சொல்லு, இல்லன்னா வேண்டாம். மனசை குழப்பிக்காம படுத்துக்கோப்பா ''

'' இல்லம்மா '' என்றவாறு எழுந்தான். '' வாங்கம்மா! மாடிக்குப் போகலாம் '' என தாயை கைப்பற்றி எழுப்பினான்.

அம்பிகைக்கு ஆவல் கொப்பளித்தாலும் அதை வெளிக்காட்டாமல் '' எதுக்குப்பா '' என்றாள்.

'' ஷ்! பேசாமல் வாருங்கள் '' என்றவாறு தாயின் கரம் பற்றி மாடிக்கு அழைத்து வந்து தன் அறையைத் திறந்து விளக்குகளை உயிர்ப்பித்தான். தாயை கட்டிலில் அமர வைத்தான் '' ஒரு நிமிஷம்மா '' என்றவாறு தன்





கணினியை உயிர்ப்பித்தான்.

அது உயிர்பெற்று பச்சை நிறத் திரை ஒளிர்ந்தது. அதில் இரத்தச்சிவப்பில் ஒரு புள்ளி தோன்றி மெல்ல மெல்ல அது பெரிதாகி திரையில் ஒரு பெரிய ரோஜா மொட்டு தோன்றியது. பின் அது ஒவ்வொரு இதழாக விரிந்து ரோஜாவாக மலர்ந்து விரிய அந்த ரோஜாவே வெட்கப்பட்டு போகும் அளவு அழகான முகம் தோன்றிச் சிரித்தது. ஸ்டில் போட்டு நிறுத்தினான். தாயை நோக்கி '' அம்மா! இது தான் ஜானகி '' என்றான் பரவசமாக.

பெண் அழகாக இருப்பாள் என்று எதிர்பார்த்திருந்தாள் அம்பிகை. ஆனால் இந்தப்பெண் அடேயப்பா! என்ன ஒரு அழகு. சிறிய நெற்றி, கூர் மூக்கு, பச்சரிசிப்பல், மின்னல் தெறிக்கும் கருந்திராட்சை கண்கள், பட்டுக்கன்னத்தில் விழுந்த குழி என பார்க்கும் யாரையும் திரும்பிப்பார்க்க வைக்கும் பேரழகு. ஸ்ரீயின் அழகிற்கும், கம்பீரத்திற்கும் வெகு பொருத்தமானவள் இவளாகத் தான் இருக்க முடியும். இந்த தேவதைக்கென ஐந்து வருடம் என்ன ஐம்பது வருடம் கூட காத்திருக்கலாம் எனத் தோன்றியது.

திரையை விட்டு பார்வையை விலக்காமலேயே '' ஸ்ரீ இவதாண்டா எம்மருமகள். அதுக்கு நான் எந்தத் தடையோ மறுப்போ சொல்லப்போறதில்லை. ஆனா எப்போ நேர்ல கூட்டிட்டு வரப்போறே? '' என்றாள் ஆனந்தமாக.

அம்மாவைக் கட்டிக் கொண்டான் ஸ்ரீ '' தேங்க்யூம்மா, உங்க ஆசிர்வாதம் கிடைச்சதே போதும்மா. எப்படியும் என்னோட ஜானகி எனக்கு கிடைச்சிடுவா. அந்த நம்பிக்கை எனக்கு வந்திடுச்சிம்மா. தேங்க்யூம்மா'' என்றவாறு மற்ற படங்களைக் காட்டினான். சுவரில் டேபிள் மீது, டி.வியின் மீது என திலீபன் சொன்னது போல் திரும்பிய இடமெல்லாம் ஜானகி, ஜானகி, ஜானகி தான் இருந்தாள்.

சிரித்துக் கொண்டும், விளையாடிக் கொண்டும் ஓடிக்கொண்டும் பல விதமாக அவளே இருந்தாள் அனைத்து போட்டோக்களிலும்.

ஒரே வீட்டில் இருந்தும் இதுவரை மகனின் அறைக்குள் நுழையாமல் இருந்ததை எண்ணி மனம் வருந்தினாள். சாதாரணமாகவே வேலைக்காரியைக்கூட உள்ளே வரவிடாமல் தானே தனது அறையை சுத்தம் செய்து

''தலைத் தீபாவளிக்கு பிரஸ்ஸர் குக்கர் வாங்கிதர்றதா சொன்னாரே. என்னாச்சு? மாமனார் வாக்கு''

''பொங்கலுக்கு வாங்கிதருகிறதா சொல்லிட்டாரு அதுவும் என் மனைவி மூலமாக பிரஸ்ஸர் கொடுக்க வேண்டியிருக்கும்.''

- ராமலிங்கம், தூத்துக்குடி.






கொள்வான்.

வேலைக்கு செல்லும் போது ரூமை பூட்டிக் கொண்டு போய்விடுவான். சரி முக்கியமான பைல்ஸ்,பொருட்கள் கம்ப்யூட்டரில் ஏதாவது இருக்கும். நாம் ஏதாவது குடைந்தால் தப்பாகி விடும் என இவளும் மாடியறைக்கு போவதையே விட்டுவிட்டாள் எனலாம். அங்கு வேலையும் இருக்கவில்லை. ஆனால் மகன் தன் அறைக்குள் ஒரு காதல் சாம்ராஜ்யத்தையே உருவாக்கியிருப்பான் என கனவிலும் நினைக்கவில்லை. திலீபன் சொன்னபோது கூட விளையாட்டாகத் தான் சொல்கிறான் என்று தான் எண்ணினாள்.

மகனின் மனம் அறிந்ததும் அம்பிகை பத்து வயது குறைந்தார்போல சுறுசுறுப்பானாள். விரைவில் தன் மகனுக்கு திருமணமாகும். இந்த வீட்டிற்கு மகாலட்சுமி வருவாள். அவள் மணிவயிற்றில் பிறக்கும் பேரக்குழந்தைகளை கொஞ்சி குழவி தன் வாழ்நாளின் மிச்சத்தை கழித்து விட வேண்டும். இப்படி எல்லாம் கனவு கண்டவளுக்கு ஓர் உண்மை உறைத்தது.

'' ஒரு வேளை... ஒரு வேளை ஜானகிக்கு திருமணம் ஆகியிருக்குமோ'' நினைப்பே வயிற்றில் புளியைக் கரைத்தது.




*'' காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுதடி*
*பூத்திருந்து பூத்திருந்து பூவிழி நோகுதடி*
*நேற்று வரை சேத்துவச்ச ஆசைகள் வேகுதடி*
*நீயிருந்து நான் அணைச்சா நிம்மதி ஆகுமடி ''*

ஞாயிற்றுக்கிழமை மாலை விருந்து கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெண் வீட்டார். விருந்து முடிந்து கிளம்பிச்செல்ல நண்பர்கள் மட்டும் மற்றவர்களின் தொல்லையிலிருந்து தப்பிக்க மொட்டை மாடிக்கு சென்றனர். வண்ணவிளக்குச் சரங்கள் மொட்டை மாடியில் இருந்து விழுதுகளாகத் தொங்கிக் கொண்டிருக்க இருள் கவிழத் தொடங்கிய மாலை நேரம் ரம்மியமாக இருந்தது. கடற்கரை காற்று சில்லென்று முகத்தில் மோத அனைவரும் அதை கண் மூடி ரசித்தனர். வாசலில் கட்டியிருந்த ஸ்பீக்கரில் ஏதோ இனிய பாடல் ஒலித்துக் கொண்டிருக்க அதையே முணுமுணுத்துக் கொண்டு படியேறிவந்தான் திலீபன். கையில் ட்ரே நிறைய நொறுக்குத்தீனிகள். குளிர்பான பாட்டில்கள், கொண்டு வந்து விரிக்கப்பட்டிருந்த பெட்ஷீட் விரிப்பின் நடுவில் வைத்தான். '' உட்காருங்கடா எல்லாரும்! என்ன தான் குஷன் நாற்காலி, டேபிள் சேர்ன்னு இருந்தாலும் தரையில் உட்கார்ற சுகம் தனிதான் '' ரசனையுடன் சொன்னான் திலீபன்.

'' நிச்சயமாடா '' அனைவரும் ஒத்துக்கொண்டே தரையில் அவரவர் விருப்பத்திற்கு காலை நீட்டி அங்கும், இங்கும் அமர, சந்துரு மட்டும் கடற்கரையை நோக்கி நின்று கொண்டிருந்தான்.

அனைவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள விஷ்ணு மெல்லிய குரலில் கிசுகிசுத்தான்.

''டேய் சிவா, ஸ்ரீ, நம்ம சந்த்ருவை கவனிச்சீங்களா மலேஷியா போயிட்டு வந்ததுல இருந்து பழைய கலகலப்பையே காணோமே. நம்ம டீம்லயே அவன் தான் ரொம்ப ஜாலிடைப். இதுவே பழைய சந்துருவா இருந்தா கல்யாண மாப்பிள்ளையை விட்டு வைப்பானா? கிண்டல் பண்றேன் பேர்வழின்னு நம் வயித்தையெல்லாம் புண்ணாக்கி இருப்பானே.என்னவாயிற்று இவனுக்கு எதையோ பறிகொடுத்த மாதிரி. ஒரு வேளை இந்தியாவுக்கு வந்ததுல இஷ்டம் இல்லையோ?''

''சேச்சே அப்படியெல்லாம் இருக்காதுடா. நம்மையும் நம் ஊரையும் ரொம்ப லைக்பண்றவன்டா. வேலைக்கு போனதே விருப்பமில்லாமதானே போனான். ஏன்டா ஒரு வேளை நம்ம ஸ்ரீ மாதிரி மலேஷியாவுல ஏதாவது பொண்ணைப் பார்த்திட்டு இப்படி மாறிட்டானா?'' என்றான் சிவா.

''அவன் என்ன ஸ்ரீயா? பார்த்துட்டு அப்படியே பைத்தியம் மாதிரி அலையறதுக்கு. அவன் சந்துருடா. ஒருவேளை அப்படியே ஒரு பொண்ணை பார்த்திருந்தாலும் அவனுக்கு பிடிச்சிருந்தா உடனே அந்தப் பொண்ணுகிட்ட போய் நேருக்கு நேரா பேசி தன்னோட விருப்பத்தைச் சொல்லியிருப்பானே தவிர ஸ்ரீ மாதிரி கோட்டை விட்டு விட்டு இருக்க மாட்டான். இது வேற ஏதோ பிராப்ளம்'' -இது விஷ்ணு.

''டேய் விஷ்ணு. அநாவசியமாய் இப்ப ஏன் என் மேட்டரை இழுக்கிற? நீயெல்லாம் ஒரு பிரண்டாடா. பேச வந்துட்டான். அந்த ஸ்ரீராமனுக்காக ஹனுமன் சீதையைத் தேடி எங்கெல்லாம் போய் தேடி அலைந்து கண்டுபிடிச்சார். கண்டேன் சீதையைன்னு இராமர்கிட்ட தகவல் சொன்னதும் அவர் எப்படி சந்தோஷப்பட்டார். ஆனா நீ ஊர்ல இருக்கன்னுதான் பேர். என்னோட ஜானகியைத் தேடி கண்டுபிடிக்க முடிஞ்சதா உன்னால. உன்னை நம்பித்தானே நான் ஊருக்கு திரும்பினேன். உன் பிரண்டுக்காக நீ என்னடா செய்தே. இடியட். இப்ப வந்து நல்லா பேசு இவனாட்டம்''- என்று ஸ்ரீராம் எகிற, ''ஐயா! மகாபிரபோ! ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி! எனக்கும் ஒரு வலையும் பறக்கிற சக்தியையும் கொடுங்க சுவாமி! எத்தனை கடல் தாண்டி தங்களின் சீதை இருந்தாலும் நான் கொண்டு வந்துவிடுவேன்''- இரு கன்னங்களையும் உப்பலாக்கிக் கொண்டு மண்டியிட்டு அவன் சொன்ன விதம் அனைவரையும் சத்தமாக சிரிக்க வைத்தது. அந்த சிரிப்பில் சந்துரு திரும்பினான்.

'' எந்த சீதையை கண்டு பிடிக்கப்போறே விஷ்ணு''-என்றவாறே அவர்களுடன் வந்தமர்ந்தான்.

''சந்துரு! உனக்கு தெரியாதில்ல. அது ஒரு பெரிய கதைடா''-என்று தொடங்கியவன் ஸ்ரீராமின் மறுப்பை அலட்சியம் செய்தவாறு சுருக்கமாகச் சொல்லி முடித்தான். பிரமித்துப் போனான் சந்துரு, ''ஸ்ரீ!ஸ்ரீ! இதெல்லாம் உண்மையா, ரியல்லி ஐ'ம் பிரவுட் ஆப் யூ''-என்றவாறு அவனை கட்டியணைத்துக் கொண்டான்.

'' போச்சு போ! டேய் இது நடந்து அஞ்சுவருஷமாகி போச்சு. இன்னும் அவளை மறக்காம கல்யாணமும் செய்துக்காம சாமியாரா வாழ்ந்



திட்டு இருக்கான். இவனோட அம்மா எவ்வளவு பீல் பண்றாங்கன்னு தெரியுமா உனக்கு. பிராக்டிக்கலா திங்க் பண்ணமாட்டீங்களா? இவன் ஆம்பிளை இன்னும் கல்யாணம் பண்ணாம அலையுறான். ஆனா அந்தப் பொண்ணு கல்யாணம் பண்ணியிருக்கமாட்டாளா? அதைப் பற்றி இவனும் யோசிக்க மாட்டேன்றான். நீயும் யோசிக்க மாட்டியா''- கோபமாகக் கேட்டான் சிவா.

'' எனக்கு அதைப்பத்தியெல்லாம் கவலையில்லை. நான் என்ன எனக்கு கிடைக்காதவ வேற யாருக்கும் கிடைக்கவே கூடாதுன்னு நினைக்கிற சைக்கோவா? பார்த்தேன். ரொம்ப பிடிச்சுப் போச்சு. வாழ்ந்தா இவ கூடத்தான் வாழணும்னு மனசு சொல்லிச்சு. அவ கூடத்தான் வாழ்ந்திட்டு இருக்கேன் மனசால. அவ கிடைச்சா நிஜமான வாழ்க்கையை தொடங்குவேன். இல்லன்னா எப்பவும் போல எம்மனதளவில் வாழ்ந்து முடிச்சிடுவேன். அதுக்காக அவளுக்கு கல்யாணமே ஆகியிருக்கக் கூடாதுன்னு வேண்டிக்கிற அளவுக்கு சாடிஸ்ட் இல்ல நான். அவ எனக்குன்னு பொறந்திருந்தா நிச்சயமா என்னைச் சேர வருவாள்னு நம்பிக்கையோட இருக்கேன். இதுல ஒண்ணும் தப்பில்லையே. இதைப் புரிஞ்சுக்காம என்னை ரொம்ப இரிடேட் பண்றீங்கடா. ஓ.கே. நான் கிளம்பறேன்'' - என்றவாறு எழுந்தான் ஸ்ரீராம்.

கப்பென அவன் கையைப் பற்றினான் விஷ்ணு. ''ஸாரி ஸ்ரீ! நாங்க யதார்த்தமா பேசினது உன் மனசை இப்படி பாதிக்கும்னு நினைக்கலே. ஸாரிடா. முதல்ல உட்காரு. எவ்ளோ நாள் கழிச்சி சந்திக்கிறோம். சந்தோஷமாக பேசி சிரிக்க வேண்டிய நேரத்தில உன்னை நோக வெச்சிட்டோமே. ஸாரிடா''.

''இல்லடா! நான் ரொம்ப அப்செட்டா இருக்கேன். உங்களோட சிரிச்சுப் பேசுற அளவு மனசு சரியில்ல. நீங்க கண்டினியூ பண்ணுங்க. அம்மா வெயிட் பண்ணுவாங்க. நான் கிளம்பறேன். தில், ஸாரிடா. கல்யாணத்துல பார்ப்போம்''- என்றவாறு எழுந்து புறப்பட தயாரானான். அனைவரின் முகமும் வாடிப்போனது. '' எல்லாம் இந்த விஷ்ணுவால் வந்தது. எங்கே போனாலும் உன் வாய் சும்மாவே இருக்காதாடா. பாரு. அவன் எவ்வளவு சந்தோஷமா வந்தான். இப்படி அப்செட் பண்ணிட்டீங்களே அவனை பார்த்து பேசவே நேரம் கிடைக்கிறதில்ல. இதுல கிடைச்ச சான்லை மிஸ்பண்ண வெச்சிட்டான் இடியட் ''-திலீபன் வார்த்தைகளை துப்ப விஷ்ணுவின் முகம் அஷ்டகோணலானது.

எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் ஸ்ரீ படியிறங்க ஆரம்பித்தான். அவன் பின்னே எழுந்து ஓடிவந்த சந்துரு ''ஸ்ரீ''- என்றழைத்தான்.

நின்று திரும்பிய ஸ்ரீ ''என்னடா!'' -என்றான் சோர்வாக.

ஸ்ரீ! நான் உங்கிட்ட நிறைய பேசணும் மனசு விட்டு அதற்குத் தான் என்னை தயார்படுத்திட்டு இருந்தேன். அதற்குள்ள பேச்சு திசைமாறிப் போச்சு. நான் உங்கிட்ட பேசியே ஆகணும் ஸ்ரீ. நீ தான் என்னோட பிரச்சனைக்கு ஒரு நல்ல தீர்வு சொல்ல முடியும். உன்னைப் பார்க்கணும்னு தான் நான் லீவுபோட்டுட்டு வந்தேன்.''

ஆச்சரியமானான், தன்னைப் பார்த்து பேச வேண்டும் என்று மலேஷியாவிலிருந்து வந்தானா? அப்படியென்ன பிரச்சனையாக இருக்கும்?

இறங்கியவன் மீண்டும் படிகளில் ஏறி சந்துரு அருகில் வந்தான். தோளில் கை வைத்து,

''அப்படிஎன்னடா பிரச்சனை, சொல்லுடா''- என்றான்.

''இல்ல ஸ்ரீ! அதை ரொம்ப பொறுமையா பேசி முடிவெடுக்கணும். இப்ப நீ இருக்கிற மனநிலையல அது முடியுமான்னு தெரியல்ல. நீ வீட்ல போய் ரெஸ்ட் எடு. நான் திலீப் வீட்ல தான் ஸ்டே பண்றேன். நாளைக்கு மார்னிங் நான் ஹாஸ்பிடல் வந்துறேன். அது தான் சரியான இடம். நாம பேசி முடிவுபண்ண தனிமை வேண்டும். ஸோ. நான் வந்திடவா''-என்றான்.

''இது என்னடா கேள்வி! நீ எப்பவேணாலும் வா. எல்லாம் பேசிக்கலாம் சரியா. ஓ.கே. நான் வரட்டுமா. பை'' -என்றவாறு கையசைத்து விட்டு வேகமாக படிகளில் இறங்கி திலீபனின் பெற்றோரிடம் சொல்லி விடைபெற்று காரில் ஏறி மெயின்ரோடு வரும்வரை சந்துருவின் நினைவுகள் தான் அலைகழித்துக் கொண்டிருந்தன. காரில் பயணிக்கும் போது நினைவுகளை சிதறவிடக்கூடாது என்பதில் வெகு கவனமாய் இருப்பான் ஸ்ரீராம். அது தன்னையும் பாதித்து எதிரே வருபவர்களையும் பாதிக்கும் என்பதால் வெகு நிதானமாய்த் தான் காரைச் செலுத்துவான். இன்று மனம் வெகுவாகக் குழம்பியிருந்தது. நண்பர்களின் பேச்சு ஜானகியைப் பற்றிய நினைவுகள் சந்துருவின் பிரச்சனை என மனம் உலைக்களமாகிப் போனது . ஊஹூம். இனியும் காரை ஓட்ட முடியாது என்ற நிலையில் கடற்கரையோரச் சாலையில் தெருவிளக்கின் வெளிச்சத்தில் ஓரமாய் காரை நிறுத்தினான். கடற்கரை காற்று அவனது முகம் தலை உடல் என அவனைக் கலைத்து விளையாடியது. மார்கழி பனி குளிரும் குளிர்காற்றும் கூட தன்னை பாதிக்காது அப்படியே சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான். கண்ணாடிகளை மூடி குளிரைக் குறைக்க தோன்றவில்லை கைகள் ரேடியோவை ஆன் செய்தது. அவன் மனமறிந்து பண்பலை ஒலி பரப்பில், ''ஜானகி தேவி ராமனைத் தேடி இருவிழிவாசல் திறந்து வைத்தாள். ராமன் வந்தான் மயங்கி விட்டாள். தன் பேரைக் கூட மறந்து விட்டாள்'' - என ஜானகி அம்மாவின் இனிய குரல் காதில் தேனாய் பாய்ந்தது.

எங்கு சென்றாலும் ஜானகி. நண்பர்கள் சொன்னது போல் நான் காத்திருப்பது வீண் தானோ? உன்னோடு வாழ முடியாவிட்டாலும் கூட ஒரே ஒருமுறை உன் முகத்தை எனக்கு காட்டிவிடு ஜானகி. பிளீஸ். என் கண்களுக்கு சாப விமோசனம் அளித்துவிடு ஜானகி. கண்ணோரம் நீர் கசிந்தது.

''பற்களைப் பாதுகாக்க என்ன வழி டாக்டர்?''

''யார் வம்புக்கும் போகாமல் இருந்தாலே போதும்!''

- அரவக்குறிச்சிப்பட்டி எம்.அசோக்ராஜா.





காதல் எந்த ஒரு மனிதனையும் சாய்த்து விடும் என்பதை அன்று தான் உணர்ந்தான்.

வசந்த மாளிகை படத்தை நண்பர்களுடன் தியேட்டரில் சென்று பார்த்தான். படித்துக் கொண்டிருந்த காலத்தில். அதில் சிவாஜி எந்தக் கவலையும் இல்லாமல் கட்டுப்பாடும் இல்லாமல் குடி கூத்து பெண்கள் என கும்மாளம் போட்டு திரிவார். பிறகு கதாநாயகியை காதலித்த பிறகு குடிக்கவும் முடியாமல் தனது காதலியை பிரிந்த துக்கத்தில்

கண்களின் தண்டனை காட்சி வழி
காட்சியின் தண்டனை காதல் வழி
காதலின் தண்டனை கடவுள் வழி
கடவுளை தண்டிக்க என்ன வழி என்று பாடி அழுவார்.

அதைப் பார்த்து தியேட்டரில் நிறைய பேர் அழுததைப் பார்த்து சிரித்தான் ஸ்ரீராம். இன்று அதன் வலி தெரிந்தது. தன் கண்கள் கூட நீர்வார்க்கிறதே. கண்ணீரை சுண்டி எறிந்தவன். வாட்டர் பாட்டிலை எடுத்து துக்கத்தால் அடைத்த தொண்டையை உணர்ந்து நனைத்து விட்டு காரை உசுப்பினான். இரண்டு நிமிடங்கள் கூட ஓட்டியிருக்க மாட்டான். பனியில் மங்கலான வெளிச்சத்தில் மெதுவாக ஓட்டி வந்ததால் அந்த காட்சி தெளிவாகத் தெரிந்தது. ஒரு பெண் தலைவிரி கோலமாய் தாறுமாறாய் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

காரின் வெளிச்சத்தை குறிவைத்துக் கொண்டு அவள் ஓடிவர ஸ்ரீராமின் மொத்த செல்களும் உயிர்ப்பித்து உடனடியாக பிரேக்கை அழுத்தி காரை கிரீச்சிட்டு நிறுத்தியும் அந்தப் பெண் வந்து காரில் மோதி ''அம்மா..'' - என்றலறியவாறே சாலையில் விழுந்தாள்.

ஸ்ரீராமின் இதயம் துடிக்க மறந்தது.

## 11

***கண்ணுக்குள் ஜீவனை தேக்கி காலம் கழித்திருப்பேன்
உலகம் அழிகின்ற போதும்
உன்னை நினைத்திருப்பேன்
தேவியே காத்திருப்பேன் தீயிலே பூத்திருப்பேன்
ஜென்மங்கள் தொடர்ந்திருப்பேன் எப்போதும்!***

உடல் மொத்தமும் வியர்த்துக் கொட்டியது ஸ்ரீராமிற்கு. கொஞ்சமும் தாமதிக்காமல் காரிலிருந்து இறங்கி வேகமாக ஓடி அந்தப் பெண்ணை தூக்கினான். அதற்குள் அவளும் சமாளித்துக் கொண்டு எழ ஸ்ரீராமின் நின்ற இதயம் மீண்டும் துடிக்க ஆரம்பித்தது.

''ஏம்மா! ராத்திரி நேரம். இப்படியா நடுரோட்டுல ஓடி வர்றது. நான் மட்டும் வேகமா வந்திருந்தா என்ன ஆகியிருக்கும். எதிலாவது அடிபட்டதா'' - அக்கறையோடு விசாரிக்க, அவள் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் விருட்டென எழுந்து ஓடி வந்த திசையை திரும்பிப் பார்த்தாள். பயத்தோடு ஸ்ரீராமின் முதுகுக்குப் பின்னால் ஒளித்து கொண்டாள் என்பதை விட முதுகோடு ஒன்றிவிட்டாள் எனலாம். ஸ்ரீராமின் உயரமும்

அகன்ற தோள்களும் அவளை முழுமையாக மறைத்துக் கொள்ள மெதுவாக தலையை மட்டும் நீட்டி வெளியே பார்த்தவள் அஞ்சிய படியே ஸ்ரீராமை இறுகப்பற்றிக் கொண்டாள். அவளதுஉடல் நடுங்கிய விதமும் இதயம் படபடத்த ஒலியும் அவள் வெகுநேரம் ஓடிக்களைத்திருக்கிறாள் என்பதை உணர்ந்த ஸ்ரீராம் அவள் வந்த திசையை கூர்ந்து நோக்கினான். தெருவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில் நிழல் உருவங்களாக அவர்கள் தெரிந்தார்கள்.

மூன்று பேர். தடிதடியாய். தெருவிளக்கின் நேர்கீழே நின்ற ஸ்ரீராம் அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். சட்டென நின்று அங்குமிங்கும் நோட்டமிட்டனர். ஸ்ரீராமின் தோள்களில் அந்தப் பெண்ணின் நகம் அழுத்தியது. சட்டென நிலமையை புரிந்து கொண்டான். ''யாரடா அது இந்த நேரத்தில.''-குரலை சற்று உயர்த்தி கொஞ்சம் கரகரப்பை கூட்டி அவன் கேட்ட விதம் சரியாக வேலை செய்தது. அவனது உயரமும் உருவமும் குரலும் போலீஸ் என எண்ண வைத்தது போலும்.'' ஸார்! சும்மா காத்து வாங்கலாமின்னு''- என்றான் ஒருவன்.

'' எத்தனை மணிவரைக்கும் காத்துவாங்குவ. கிளம்பு வீட்டுக்கு ''- என்றான் ஸ்ரீ மீண்டும் அதே குரலில்.

''தோ. ஸார். கிளம்பிட்டோம். நீங்க போங்க ஸார்'' - என்றவாறு போக மனமே இல்லாமல் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டே சென்றனர். அவர்கள் உருவம் கண்ணைவிட்டு மறையும் வரை அசையாமல் நின்ற ஸ்ரீ மெல்ல அந்தப் பெண்ணை விலக்கினான். தலைமுழுவதும் காற்றில் கலைந்து அவளது முகப்பரப்பை மறைத்திருக்க அவளது உடை பல இடங்களில் கிழிந்திருந்தது. கீழே விழுந்ததில் முன் நெற்றி சிராய்த்து ரத்தம் கசிந்திருந்தது. ஜாக்கெட் கிழிந்திருந்த தோள்பட்டையில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் அவள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் கட்டைவிரலை வாயருகேகொண்டு போய் ''தண்ணி தண்ணி'' என்றாள். குரல் வெளியே வரவில்லை.

டாக்டராய் விரைவாக செயல்பட்டான் ஸ்ரீராம். கார் கதவை திறந்து வாட்டர்பாட்டிலை திறந்து அவளிடம் குடிக்கக் கொடுத்து விட்டு எமர்ஜென்ஸி என்று வைத்துள்ள மெடிக்கல் கிட்டை திறந்து டெட்டாலை பஞ்சில் நனைத்து அவளது நெற்றிக் காயத்தை ஒற்றி எடுத்தான். ''ஸ்ஸ்...ஆ...ஆ.''- என அலறியவள் பட்டென ஸ்ரீராமின் கன்னத்தில் அறைந்தாள்.

மெதுவாகத்தான் என்றாலும் அறைந்தது ஒரு பெண். அதுவும் உதவி செய்ய வந்தவனை அறைந்தாள் என்றதும் கோபம் சுள்ளென ஏறியது. கோபமாக அவளை ஏறிட்டு பார்க்க. '' தொட்டே பிச்சிப்புடுவேன். பார்த்துக்கோ''- மழலையாய் மிழற்றியது அவள் குரல். மீண்டும் கடக்கடக் என பாட்டிலை காலி செய்து விட்டு அவனிடம் நீட்டினாள். ''யாரிவள்? ஒரு வேளை மனநிலை சரியில்லையோ? இல்லை இயல்பாகவே இப்படி பேசுபவளா'' - யோசனையுடனேயே '' சரி! உன் பேரென்ன? நீ யார். இப்போ எங்கே போகணும்னு சொல்லு நான் போயி விட்டுடுறேன்.'' - என்றவளை விசித்திரமாகப் பார்த்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். ''இது என்னடா சோதனை'' - என்றிருந்தது ஸ்ரீராமிற்கு.



ஏற்கனவே லேட்டாகி விட்டது. அம்மா தேடிக் கொண்டிருப்பார். இவள் யாரோ தெரியவில்லையே. இப்படியே விட்டுப் போகவும் மனமில்லை. போலீசில் விடலாம் என்றாலும் மனம் ஒப்பவில்லை. யாராவது தேடி வந்தாலாவது சேர்த்து விடலாம் என்றால் இவள் வாயை திறக்க மறுக்கிறாளே! கையைப் பிசைந்து கொண்டிருந்தோடு தப தபவென யாரோ ஓடிவரும் ஓசைகேட்டு உஷாராகி அவளைத் தேட அதற்குள் அவள் அவன் முதுகுக்குப் பின்னால் போய் ஒளிந்து கொண்டாள். ஸ்ரீராமிற்கு கொஞ்சம் அவஸ்தையாக இருந்தது. ஆனால் இந்தப் பெண்ணின் தொடுதல் ஏதோ உணர்த்துகிறதே. மனம் படபடவென அடித்துக் கொண்டது. மனதை ஏதோ நெருட அந்தப் பெண்ணை காரினுள் திணித்து விட்டு கதவை சாத்தியவாறே, கார்கண்ணாடியை, ஏற்றிவிட்டு விட்டு சத்தம் வந்த திசையை பார்த்தான். இப்போது வந்தது ஒரு பெண். கொஞ்சம் வயது முதிர்ந்தவள். ஓடி வந்ததில் மூச்சுவாங்கியவாறே ஸ்ரீராமின் காருக்கு அருகில் வந்து நின்றாள்.

நாலாபுறமும் தேடி அலைந்த கண்கள் தனியாக நின்ற ஸ்ரீராமின் மேல் பாய்ந்தது. ''ஐயா! ரொம்ப நேரமா நிக்கிறீகளா''- என்றாள் பணிவாக.

''இல்லம்மா! இப்பத்தான் வந்தேன்! கார் கொஞ்சம் மக்கர் பண்ணிச்சு. அதான் பார்த்திட்டு இருந்தேன். ஏம்மா என்ன விசயம்''என்றவாறு பானெட்டை திறந்து ஏதோ நோண்டிக் கொண்டே பேச்சுக் கொடுத்தான்.

அவள் ஒரு நிமிடம் போல தயங்கி விட்டு, '' நீங்க வர்ற வழியில ஒரு பொண்ணை இரண்டு மூணுபேரு விரட்டிட்டு வந்ததை பாத்தீங்களா'' - என்றதும் சர்வமும் உஷாரானான் ஸ்ரீராம்.

''இல்லையே! அப்படியாரும் இந்தப் பக்கமும் வரலியே.'' - குரலை மிக இயல்பாய் வைத்துக் கொண்டான்.

'' அய்யய்யோ! நான் எங்கேன்னு போய் தேடுவேன். கேட்க ஆளில்லாத பொண்ணை என்ன செய்தாங்களோ. ஐயா! அந்தப் பொண்ணு புத்தி பேதலிச்ச பொண்ணுய்யா. சின்னவயது. வாழ வேண்டிய பொண்ணுய்யா. அதோட கெட்ட நேரம் எங்கிட்ட வந்து சேர்ந்திடுச்சு. நானே அதுக்கு எமனாகிட்டேனே''.

அவள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழ அந்த அழுகையில் பொய்யில்லை. இரவு நேர நிசப்தத்தில் சாலையில் விர்ரென சீறிப்பாயும் ஓரிரு வாகனங்களைத் தவிர அமைதியாய் இருந்த இருட்டில் அந்தப் பெண்ணின் அழுகை மிரட்டியது.

''ஏம்மா! சத்தம் போடாதே. போலீஸ் எதுவும் வந்திடப் போகுது. நான் ஒரு டாக்டர். விஷயம் என்னன்னு சொல்லு. நான் போற வழியில அந்தப் பொண்ணை பார்த்தா காப்பாத்தி கூட்டிட்டு வர்றேன்''.

''ஐயா! சாமி. வேணாமய்யா எங்கிட்ட கூட்டிட்டு வரவேண்டாமய்யா. எம்புருஷனும் எந்தம்பியும் அந்த புள்ளைய விடமாட்டானுங்கய்யா. ஐயா! அது எம்பொண்ணு இல்லையா! நான் வேலை செய்த வீட்டுக்காரங்க பொண்ணு. ஒரு விபத்துல அம்மா, அப்பா, அக்கான்னு மொத்த குடும்பத்தையும் பறிகொடுத்திடுச்சு. அப்போ மண்டையில அடிபட்டு அம்மா, அப்பா சடலத்தை மொத்தமா பாத்த அதிர்ச்சியில பைத்தி

யமாப் போச்சு. யார்கிட்டயும் பேசாது. சாப்பிடாது. அப்படியே விட்டத்தையே வெறிச்சு பார்த்துட்டே இருக்கும்யா. இதோட நிலைமையைப் பார்த்துட்டு இவங்க சொந்தக்காரங்க எல்லா சொத்துபத்தையும் கொள்ளையடிச்சுப்புட்டாக இருந்த வீட்டையும் எடுத்துட்டு எங்கையில பத்தாயிரம் ரூபாய் கொடுத்து ஏதாவது பைத்தியக்கார ஆஸ்பத்திரியில சேர்த்துடுன்னு எங்கூட அனுப்பிச்சிட்டாங்க. எனக்கும் படிப்பும் கிடையாது. விவரமும் தெரியாது. எம்புருஷன்தான் பட்டணத்துக்கு கூட்டியாந்து விட்டாக. எந்தம்பியும் அவரும் சேர்ந்து பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போறோம்னு சொல்லி..சொல்லி..'' அந்தப் பெண் சொல்ல முடியாமல் கண்ணீர் விட்டாள்.

கண்ணீரைத் துடைத்தவாறே சுற்றுமுற்றும் ஒரு தரம் பார்த்துவிட்டு மீண்டும் சொல்ல ஆரம்பித்தாள்.

''பொண்ணு ரொம்ப அழகா தங்கமாட்டம் இருக்கும்யா. அதைக் காட்டி எவனோ பொறுக்கிப்பயலுக கிட்ட காசைவாங்கிட்டு வித்திட்டாகய்யா. வெவரம் தெரிஞ்சு கொதிச்சுப் போய் அந்தப் புள்ளையை கூட்டிட்டு இந்த பக்கம் உள்ள குப்பத்துக்கு கூட்டியாந்தேன். ரெண்டு வருஷமா பத்திரமா பாதுகாத்தேன். ஆறுமாசம் முன்ன எப்படியோ வந்து சேர்ந்துட்டான்யா குடிகாரப்பாவி. அவன்கிட்ட இருந்து இந்தப் புள்ளைய பாதுகாக்க நான்பட்ட பாடு சொல்லி மாளாது. எத்தனை நாள் தூங்காம உட்கார்ந்து காவல் காத்திருக்கேன் தெரியுமாய்யா. அது பொறந்ததுல இருந்து தூக்கி வளர்த்தவய்யா நான். அதை பலியாக்க விடுவேனா. இன்னிக்கு குப்பத்துல ஒரு சாவு விழுந்துப் போச்சு. போயி தலையைக் காட்டிட்டு வந்து பார்த்தா. புள்ளையைக் காணோம். பக்கத்துல உள்ளவங்களை விசாரிச்சுப்போ எம்புருஷனும் எந்தம்பியும் கூட்டிட்டு போனதா சொன்னாங்க.

எல்லா இடமும் தேடிட்டேன். எங்கண்ணுல மாட்டல்ல. இப்பத்தான் இந்த ரோட்டுல போன ஒருத்தர் கிட்ட விசாரிச்சேன். அவரு ஒரு பொண்ணை ரெண்டு மூனு பேர் விரட்டிட்டு போனதா சொன்னாரு. அதான் ஓடியாந்தேன்''- என்றாள் ஸ்ரீராமின் கைகளைப் பற்றிக் கொண்டு.

''ஐயா! அது பெரிய வீட்டுப் பொண்ணு. போறாதகாலம் எங்கூட குப்பத்துக்கு வந்து ரொம்ப பாடுபட்டுப் போச்சு. அதை எங்கேனும் பார்த்தா ஏதாவது அநாதை விடுதியில பாதுகாப்பான இடமான்னு பார்த்து சேர்த்து

''என் மனைவிக்கு எம் மேலே கொள்ளைப்பிரி





விட்டுடுங்கய்யா. உங்களுக்கு புண்ணியமாப் போகும். எனக்கும் வயசாகிப் போச்சே. எத்தனை காலம் போராட முடியும். ஐயா! அந்தப் பொண்ணு சிகப்பு கலர் சேலை உடுத்தியிருக்கும். போங்கய்யா! போய் பாருங்கய்யா. உங்க கண்ணுல பட்டா எங்காவது பத்திரமா சேர்த்துடுங்கய்யா'' - கையை பற்றி கண்ணீர் விட்டவளை பார்த்து பரிதாபமானான் ஸ்ரீராம். தான் நினைத்தது போல அவள் மனநிலை சரியில்லாத பெண் தான். தன் மருத்துவமனையில் சேர்த்து அவளை குணமாக்குவது ஒன்றும் பெரிய விஷயமல்ல என்பதால் ''சரிம்மா! நீ பயப்படாதே! ஒரு வேளை அந்தப் பொண்ணை பார்த்தா கண்டிப்பா பாதுகாப்பான இடத்துல சேர்த்திடுறேன். அது சரி. அந்தப் பொண்ணு மனநிலை சரியில்லாதாவள்னா கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணுமா''- அவளைப் பற்றி முழுவதும் அறிந்து கொண்டால் சிகிச்சை கொடுக்க சுலபமாக இருக்குமே என்று பானெட்டை மூடிவிட்டு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டே கேட்டான்.

''ஐயோ! ரொம்ப அமைதியான புள்ளைங்க. முன்னெல்லாம் பேசவே பேசாது. நான் தான் ஊட்டி விட்டு குளிப்பாட்டுறது எல்லாமே. ஆனா இப்பஅக்கம் பக்கம் உள்ள சின்னபுள்ளைங்க வந்து பேசி கொஞ்சம் கொஞ்சம் பேசுது, ஆனா கிளிப்பிள்ளை மாதிரி திரும்பி திரும்பி பேசும். வாயைத் திறந்து வேற எதுவும் கேட்காது. இப்பத்தான் கொஞ்சம் முன்னேறி குளி, சாப்பிடு, தலை வாரிக்கோன்னு நாம என்ன சொன்னாலும் அதை புரிஞ்சுக்குது. சீக்கிரமே சரியாயிடும். ஏழையோ பாழையோ பார்த்து கட்டி வைக்கலாம்னு நினைச்சேன். அந்த படுபாவிகளுக்கு பொறுக்கலையே. ஆனா ஒண்ணுய்யா யாராவது வெளி ஆட்கள் ஆம்பிளைங்க உன்னை தொட்டா ஓங்கி ஒன்று குடு. இல்லேன்னா துடைப்பக்கட்டையை எடுத்து சாத்துன்னு சொல்லிக் கொடுத்திருக்கேன். அதனால எப்படியும் அது தப்பிச்சிடும்யா. ஆனா வாணலிக்கு தப்பி அடுப்புல விழுந்த கதையா ஆயிடக்கூடாதே. அதான்யா எம்பயம். சரிய்யா. நீங்க புறப்படுங்க. நானும் தேடிப்போய் பார்க்கிறேன்'' - என்றவாறு அவள் இடப்புறமாக திரும்பிச் செல்ல ஒரு பெருமூச்சு விட்டான். காருக்குள் ஏறி உட்கார்ந்து கதவைச் சாத்தினான்.

சீட்டுக்கடியில் மடங்கி உட்கார்ந்த நிலையில் தூங்கிய அவள் அதறிபதறி விழித்தாள். ''என்னை விடு! என்னை விடு! அம்மாகிட்ட சொல்லிப்பேன்'' - தான் எங்கிருக்குறோம் என்று புரிய தொடங்கியதும் வார்த்தை நிறுத்திவிட்டு, ''நீ யார்? உன் பேரென்ன'' - எனக் கேட்டாள்.

அந்தக் குரல் செவியில் மோத துள்ளித் திரும்பினான் ஸ்ரீ.

12

***நீ தானா நீ தானா நெஞ்சே நீதானா***
***நீயின்றி நானேதான் இங்கே வாழ்வேனா***
***அன்பே அன்பே எந்தன் அன்பே***
***வாழும் காலம் துணை நீயே அன்பே!***

இந்தக் குரல்..இந்தக்குரல்... இது என் ஜானகியின் குரல். ஐந்து வருடங்களாய் தன் காதினுள் ரீங்காரமாய் வட்டமிட்ட

குரல். உண்ணும் போதும் உறங்கும் போதும் தேனாய் சிணுங்கிய குரல். அப்படியானால் இது ஜானகியா.. இவள் தான் என் தேவதைப் பெண்ணா. ஓ.காட் முதலில் இங்கிருந்து கிளம்ப வேண்டும். காரை உசுப்பி வேகமெடுத்தான். கடற்கரை காற்றை எதிர்த்து சீறிப்பாய்ந்தது. போக்குவரத்து முற்றிலும் நின்று போயிருந்த சாலையைத் தாண்டி பிரதான சாலைக்குள் நுழைந்தான். போக்குவரத்து இருந்த ஒரு மார்க்கெட் அருகில் ஓரமாய் காரை நிறுத்தினான். லாரிகளில் மூட்டை மூட்டையாய் வந்து இறங்கிய காய்கறிகளை சுமைதூக்குபவர்கள் இறக்குவதும் அடுக்குவதுமாக வியாபாரிகள் அவற்றை விலைபேசி வாங்குவதும் விற்பதுமாக சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது மார்க்கெட். அவரவர் தங்களது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்க, சாலையோர வியாபாரிகள் தங்களது பொருள்களை தார்ப்பையினால் மூடிவைத்துவிட்டு அங்கேயே தூங்கிக் கொண்டிருந்தனர்.

குளிரைப் பற்றியோ கொசுக்கடியைப் பற்றியோ இரைச்சலோடு போகும் வாகனங்களைப் பற்றியோ சற்றும் கவலையில்லாத ஆழ்ந்த உறக்கம். பகலெல்லாம் கூவி, கூவி விற்ற களைப்பு. இப்படி தன்னை மறந்து தூங்கி எத்தனை நாட்கள் மாதங்களாகிறது. தனது காரை யாரேனும் கவனிக்கிறார்களா என உன்னிப்பாய் பார்த்துவிட்டு இல்லை என்று உறுதியானவுடன் காரினுள் விளக்கைப் போட்டு பின்னால் திரும்பி அவளைப் பார்த்தான்.

கொட்ட கொட்ட விழித்துக் கொண்டு அமைதியாய் உட்கார்ந்திருந்தாள். கார்வேகமாய் பாய்ந்ததில் அரண்டு போயிருக்க வேண்டும். முகத்தை மறைத்திருந்த கூந்தலை ஒதுக்கி பின்னுக்குத் தள்ளியிருந்தாள். காட்! நெஞ்சில் கை வைத்துக் கொண்டான் ஸ்ரீ. அவள் தான். அவளே தான். இத்தனை ஆண்டுகளாய் தவமாய் தவமிருந்து யாரைக் காணத்துடித்தானோ அந்த ஜானகிதான். சிறகடிக்கும் பட்டாம் பூச்சியாய் பார்த்தவள் இப்போது வேடனிடம் அகப்பட்டு சிட்டுக் குருவியாய் நைந்து போயிருந்தாள். நெற்றியில் இருந்த சிராய்ப்பில் இரத்தம் கட்டியாய் உறைந்து போயிருக்க. தோளில் இன்னும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. புடவையும், ஜாக்கெட்டும் நிறைய இடத்தில் கிழிந்திருந்தது.

ஏதேனும் முள்ளில் சிக்கியிருக்க வேண்டும். கைகள் முழுவதும் கோடு கோடாய் கிழித்திருக்க அந்த இடத்தில் தோல் தடிப்பாய் சிவந்திருந்தது. மெலிந்து கருத்து கழுத்தெலும்புகள் துருத்திக் கொண்டிருந்தது. கடலைப் பார்த்த சந்தோஷத்தில் குதூகலித்த அந்த முகம் மருண்டு போய் இருந்ததில் ஸ்ரீராமின் மனம் வலித்தது. யார்? யார் அந்த கயவர்கள். என் இதயதேவதையை என் ரோஜாப் பெண்ணை சின்னா பின்னமாக்கியவர்கள். அவர்கள் மட்டும் என் கைகளில் கிடைத்தால், இந்த வயதில் எத்தனை துன்பங்களை தாங்கியிருக்கிறாய் என்னுயிரே.

உன்னை இந்தக் கோலத்திலா நான் பார்க்க வேண்டும். உன்னை இந்த நிலையில் பார்ப்பதற்காக என் உயிர் இருந்தது. ஐயோ! எத்தனை காயங்கள் மனதிலும் உடம்பிலும். நான் என்ன செய்யப் போகிறேன். என்னைத் தெரிகிறதா பெண்ணே உனக்கு? ஐந்த ஆண்டுகளுக்கு முன் ஒரு பொன் மாலைப் பொழுதில் அலைகள் விளையாடும் ஆண்டவன் சந்நிதியில் உன்



னைக்கண்டு மையல் கொண்டு அன்று முதல் உனக்காகவே உன்னைத் தேடியே நாட்களை கடத்திக் கொண்டிருக்கிறேனே. உன்னை நேரில் பார்த்து உன் நினைவுகளை கதைகதையாய் சொல்லவேண்டும் என்று எத்தனை நாள் கனவு கண்டிருப்பேன்.

இப்போது உன்னிடம் நான் என்னவென்று சொல்வேன். சொன்னாலும் புரியுமா உனக்கு. எது எப்படியோ மற்றவர் கையில் சிக்காமல் உன்னை என் கையில் ஒப்படைத்தானே அந்த செந்தில் ஆண்டவனுக்கு கோடி நன்றி. உன்னை பழைய ஜானகியாக்க என்னால் முடியும். நான் மாற்றுவேன். என்னை ஏற்றுக் கொள்வாயோ மறுப்பாயோ! ஆனால் நான் உன்னை குணமாக்குவேன்.

என் உயிர் நீ. உன்னை விட்டு விட மாட்டேன். என்னுயிரே! உன்னை என் கண்ணுக்குள் வைத்து பாதுகாப்பேன். இனியொரு முறை உன்னை துன்பம் நெருங்க விடமாட்டேன். என் உள்ளங்கையில் உன்னைத் தாங்கி என் இதயத்திற்குள் பொத்தி வைத்துக் கொள்வேன்.

ஸ்ரீராமின் விழிகளில் நீர் நிறைந்து 'பொட்டென விழுந்தது துளிகள். அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் அவனது கலங்கிய விழிகளையும் முகத்தையும் பார்த்து என்ன நினைத்தாளோ.

''ஏன் அழறே! உனக்கும் அடிபட்டுதா. வலிக்குதா'' - பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு அவள் கேட்க. ஸ்ரீராமின் முகம் புன்னகை பூத்தது.

''நீ சிரிச்சா அழகா இருக்க. சிரி என்ன. அழுதா அழுமூஞ்சின்னு திவ்யா சொல்வா. பாத்தியா அதான் நான் இப்பல்லாம் அழறதில்ல.''

''அதுயார் திவ்யா'' ''ஓ! உனக்கு தெரியாதில்ல. அவ என் பிரண்டு. ஏழு படிக்கிறா''

அந்த பெண்மணி சொன்ன பக்கத்து வீட்டு குழந்தைகளாக இருக்க வேண்டும். என் ஜானகியை இந்த வரையிலும் பேசவைத்த குழந்தைகளுக்கு கண்டிப்பாய் நன்றி கூற வேண்டும்.'' சரி! உனக்கு காயம் பட்டிருக்கே. வலிக்குமே! மருந்து போடணுமா''.

''வேணாம்! வேணாம்! எரியுது'' - முகத்தை சுளித்தாள்.

''சரி இந்த மருந்து வேணாம். என்னோட ஹாஸ்பிடலுக்கு போகலாம். அங்க உனக்கு வலிக்காம மருந்து போ[illegible] இருக்காங்க.ஆனா யாரையும் அடிக்கக் கூடாது. நாங்க எல்லாரும் நல்லவங்க. உன்னை எதுவும் பண்ண மாட்டோம். பத்திரமா பார்த்துப்போம் சரியா''.

''சரி! நீ டாக்டரா. உன்னை நான் எப்படி கூப்பிடணும்''. ஒரு கணம் அவளையே பார்த்தான். '' என்னோட பேர் ஸ்ரீராம்! நீ என்னை எப்படி வேணும்னாலும் கூப்பிடலாம். டேய் ஸ்ரீராமுன்னு கூட கூப்பிடு. நான் சந்தோஷப்படுவேன்''

''சரிடா ஸ்ரீராம்'' - இயல்பாய் அவள் கூற ஸ்ரீராமிற்கு சிரிப்பு பொங்கியது. ''சரி. சரி. நாம போகலாம். உடனே காயத்துக்கு மருந்து போடணும். நீ அப்படியே படுத்துக்கோ. இன்னும் கொஞ்ச நேரத்துல ஹாஸ்பிடல் வந்திடும் சரியா''.

''டேய் ஸ்ரீராம். நானும் உங் கூட உட்கார்ந்துக்கவா. பாரு பின்னால

பார்த்தா பயம்மா இருக்கு''

''வாடா செல்லம். நான் இருக்கும் போது நீ ஏன் பயப்படுற'' என்றவாறே கீழே இறங்கி கதவை திறந்து அவளை முன் இருக்கையில் அமர வைத்தான். கையைப் பற்றிய போது வலியில் துடித்தாள். கையைப் பார்த்தான். வலது முழங்கையில் பலமாக அடிப்பட்டிருந்தது. ரத்தம் சீட்டை நனைத்திருந்தது. மைகாட். இவ்ளோ பெரியகாயமா. வலிக்குதுன்னு சொல்லியா பெண்ணே! இந்த வலி கூட மரத்துப் போயிற்றா? மனம் பதற கதவை சாத்திவிட்டு வேகமாக தானும் காரை இயக்கினான்.

''டேய் ஸ்ரீராம். எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு'' ஸ்ரீராமிற்கு தலையில் வானம் இடித்தது. நட்சத்திரங்கள் காலடியில் கொட்டிக்கிடந்தன. மேகங்கள் தன்னை உரசிச் சென்றன. அவளது ஒரு வார்த்தை தன்னை எங்கோ கொண்டு போனதை உணர்ந்தான். இதை மட்டும் அவள் தெளிவடைந்த பின்னும் சொன்னால் போதும். வேறென்ன வேண்டும்.

''வெள்ளையம்மா என்னை எந்த ஆம்பிளையும் தொட்டாலும் உடனே அடிக்கச் சொல்லியிருக்கு. அதனால தான் உன்னை அடிச்சேன். ஆனா ஸ்ரீ ரொம்ப நல்லவன்.

எங்க அம்மா மாதிரியே செல்லம்னு கூப்பிடுறியே. எங்கப்பா என்னை அப்படித்தான் கூப்பிடுவாங்க தெரியுமா? நான் அடித்தது வலிக்குதா? அதனால் தான் அழுதியா'' - கேட்டுக் கொண்டே அவனது கன்னத்தை தொட்டு தடவியவாறே ''ஸாரி'' -என்றாள்.

தனது கட்டுப்பாட்டை மீறிச் சென்ற மனதை கஷ்டப்பட்டு அடக்கினான். 'இல்லை. இவள் இப்போது உன்காதலியாக இல்லை. ஒரு குழந்தை. குழந்தை மனதோடு தொடுவது பேசுவதை காதலுடன் போட்டு குழம்பக் கூடாது. மனமே ரிலாக்ஸ் பிளீஸ்'. மனதிடம் கெஞ்சி அதை அடக்கி வைக்க இவையறியாமலேயே அவன் தோள் மீது சாய்ந்து லேசான முனகலுடன் தூங்க ஆரம்பித்தாள் ஜானகி.

ஒரு புன்னகையுடன் அவளைப் பார்த்துவிட்டு காரை மெதுவாகச் செலுத்தியவாறே செல்போனை உயிர்பித்து இன்று இரவு வீடு திரும்ப முடியாது எனவும் கதவைபூட்டி விட்டு தூங்குமாறும் தன் தாயிடம் தகவல் சொல்லிவிட்டு உடனே மருத்துவமனைக்கு போன் பண்ணி டாக்டரை தயார் நிலையில் இருக்கும் படியும் தகவல் தெரிவித்துவிட்டு செல்போனை அணைத்தான். வளைவில் காரை திருப்புகையில் அவனது

''தமிழ் உச்சரிப்பு சரியாக வராதா டாக்டர் நறிய பலங்கள் சாப்பிடுங்கோ''

''சாப்பிட்டால்''

''நள்ள பழசாலி ஆகளாம்''

- ராமலிங்கம், தூத்துக்குடி.





கைபட்டு ''ஸ்ஸ் ஆஆ''- என முனகினாள் ஜானகி.

''சரி! சரி!'' - மெதுவாக தட்டிக் கொடுத்து விட்டு கவனமாக ஓட்டினான். தான் தேடிய சொர்க்கம் தற்போது தன் தோளில் உறங்கிக் கொண்டிருக்கிறது. இது நிரந்தரமாக நீடிக்குமா. என் கண்ணே! என் உள்ளத்தில் நீ கோவில் கொண்டு வாழ்கிறாய் என்பதை அறிவாயா? இந்தத் தோள்கள் உனக்கு மட்டுமே சொந்தம் என்று உணர்வாயா? துடிக்கும் மனதுடன் சாலையில் கவனம் செலுத்தினான்.

## 13

*உடலாலும் மனதாலும் உன்னை*
*என் உயிராகச் சேர்த்து*
*நான் வாழுவேன் கண்ணே*
*கடல் வற்றி போனாலும் போகும்*
*கொண்ட கடமையும் ஆசையும்*
*மாறாது எந்நாளும்!*

''குட்மார்னிங் டாக்டர்''- உமா பனியில் குளித்த ரோஜாவாய் பிரெஷ்ஷாய் காலை வணக்கம் சொன்னபோது தான் கண்விழித்தான் ஸ்ரீராம். ''குட்மார்னிங்''- என்றவாறு தூக்கமின்மையால் எரிந்த கண்களோடு அவளைப் பார்த்ததும் தான் மருத்துவமனையிலேயே தூங்கி விட்டது நினைவு வந்தது. அதைத் தொடர்ந்து நேற்றைய இரவு நிகழ்ச்சியும் நினைவு வர தனது இருக்கையிலிருந்து விரைந்து எழுந்து தன் அறைக்குள் இருந்த மற்றொரு கதவை திறந்து தனது பார்வையை செலுத்தினான். அங்கிருந்த கட்டிலில் பஞ்சு மெத்தையில் சுகமாக உறங்கிக் கொண்டிருந்த ஜானகியைப் பார்த்ததும் நிம்மதியான மூச்சு வந்தது.

அலுப்பும் களைப்பும் பறந்து போக அறைக்குள் நுழைந்து கட்டிலருகே சென்று கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான். இதமான ஏ.சி.குளிரில் கதகதப்பான போர்வையின் பிடியில் நிம்மதியான சுவாசம் வந்து கொண்டிருக்க வலி மாத்திரையின் உதவியால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போதும் ஜானகி இதழ்கள் விரிந்து சிரித்தாற்போலிருந்தது.

ஓர் அற்புதமான உயிரோவியத்தை நேரில் கண்டது போல் பரவசமானான் ஸ்ரீ. நேற்று இரவு ஹாஸ்பிட்டல் வந்து லேடி டாக்டர் வசந்திசந்திரன் மருத்துவ வளாகத்திலேயே உள்ள கெஸ்ட் ஹவுசில் தங்கியிருந்ததால் மிகவும் வசதியாகப் போயிற்று. அந்த இரவிலும் உடனடியாக ஓடி வந்து ஸ்ரீராமின் அறையோடு இணைந்திருந்த வி.ஐ.பி. அறையில் அவளை அட்மிட் செய்து காயங்களை சுத்தம் செய்து மருந்து வைத்து கட்டுபோட்டு கிழிந்திருந்த ஆடைகளை அகற்றி தன் அறையிலிருந்து எடுத்து வந்த நைட்டியை அணிவித்து வலி மறக்க ஊசிபோட்டு சாப்பிட பிரெட், பால் கொடுத்து மாத்திரைகளை விழுங்க வைத்து உறங்க வைத்த போது மணி மூன்று. கைகளை கழுவி துடைத்தவாறே தன் அறைக்குள் வசந்திசந்திரன் நுழையும் வரை ஸ்ரீராமிற்கு இருப்பு கொள்ளவில்லை. காயங்களை சுத்தம் செய்த போது ஜானகி போட்ட கூச்சலில் பதறிப் போனான். வெளி

யிலிருந்து குரல் கொடுத்தான். ''டாக்டர் பிளீஸ். கொஞ்சம் பார்த்து, பாவம் ரொம்ப வலிக்குது போலிருக்கே.'' - அவனது தவிப்பை ஆச்சரியமாய் நோக்கியவர் 'நோ பிராப்ளம் டாக்டர், ஐவில் டேக் கேர்'' - என்றவாறு ஜானகியை சமாதானம் செய்து தனது வேலையை தொடர்ந்தார். என்னதான் மருத்துவன் என்றாலும் தான் ஒரு ஆண். இந்தப் பெண் உடம்பில் அதிககாயம் என்பதால் ஆடைகளை அகற்ற வேண்டியது இருக்கும் என உணர்ந்து தான் தன்னை அழைத்திருக்கிறான் என்பது புரிந்துபோயிற்று அவருக்கு. ஞாயிறு என்பதால் வழக்கமாக இரவு பணியில் இருக்கும் பிருந்தாவுக்கு விடுமுறை. மற்றபடி இது ஸ்ரீராமே முடித்து விடும் எளிய மெடிசன் தான். ஸ்ரீராம் ஸ்ரீராமன் தான்.


எப்பவுமே ஸ்ரீராம் வெகு ஜென்டில்மேன். பெண்களுக்கு ஒரு சின்ன கீறல் என்றால் கூட பெண் டாக்டரிடம் அனுப்பிவிடுவான். மருத்துவமனையில் வேலை செய்யும் இளம் பெண் மருத்துவர்களிடமோ நர்ஸ்களிடமோ தேவையின்றி ஒரு வார்த்தை கூட பேசமாட்டான். ஆனால் நடுத்தர வயதை தாண்டிய தன்னிடம் அவனுக்கு மரியாதை உண்டு. தனக்கும் அவனை மிகவும் பிடிக்கும். எனினும் இன்றைய நிகழ்வின் மூலம் மிகவும் உயர்ந்து போனான். ''டாக்டர்! பெரிதாக ஒன்றும் இல்லையே! எக்ஸ்ரே எதுவும் எடுக்க வேண்டியிருக்குமா?- என பதறியவனிடம், ''கூல் டாக்டர்! ஒன்றும் பெரியகாயம் இல்லை. கீழே விழுந்ததில் அடிபட்டிருக்கலாம் என நினைக்கிறேன். உடலில் நகக்கீறல்கள் உள்ளன. எல்லாத்தையும் கிளீன்பண்ணி மருந்து போட்டாயிற்று. இனி தூங்குவாள். உங்களுக்கு வேண்டிய பெண்ணா? - என்று கேட்டாள் அவனது முகத்தை ஆராய்ந்தபடி.

''யெஸ் டாக்டர்! நான் அப்புறமா சொல்றேன். ஏற்கனவே உங்களை தூக்கத்தில் டிஸ்டர்ப் பண்ணிட்டேன். நீங்க போய் ரெஸ்ட் எடுங்க. காயம் ஆறுகிற வரை மார்னிங் ஓ.பி. பேஷன்ட்சை கவனிக்க போகுமுன் வந்து இந்த பெண்ணை பார்த்துவிட்டு போங்க. மற்றபடி நான் கவனித்துக் கொள்கிறேன்.'' - என அவளை அனுப்பி விட்டு ஜானகி நன்றாக உறங்கும் வரை அவளருகேயே அமர்ந்து அவள் உறங்கிய பின் பெட்சீட்டை எடுத்து மூடிவிட்டு வந்து தன் அறைக்குள் நுழைந்து தன் இருக்கையில் அமர்ந்து அப்படியே உறங்கியும் போனான்.

'' யாராவது வி.ஐ.பி. பேஷன்ட்டா டாக்டர்! நேற்று அட்மிட் ஆனாங்களா? என்ன இவங்க உடம்புக்கு'' - என்று மீண்டும் உமா கேட்டபோது தான் கலைந்து திரும்பினான். ''ம். ஆமாம்! வி.ஐ.பி. தான். ரொம்பவும் முக்கியமானவங்க. இந்த அறையிலேயே இருக்கட்டும். வேற யாரையும் இங்க அலவ் பண்ண வேண்டாம் மிஸ் உமா. நைட் நான் வீட்டுக்கு போகல. அம்மா என்னவோ ஏதோன்னு பயந்திட்டு இப்பாங்க. நான் வீட்டுக்கு போயிட்டு குளிச்சிட்டு வந்திடறேன். அதுவரை நீங்க என்னோட அறையை விட்டு போக வேண்டாம். எந்த நேரத்திலும் இந்தப் பெண் கண் விழிக்கலாம். சாப்பிட ஏதாவது கேன்டீன்ல இருந்து வரவழைச்சு கொடுங்க. அதுக்குள்ள நான் வந்திடுவேன். ஜாக்கிரதை மிஸ் உமா. அவளை தனியே விட்டுட்டு போயிட வேண்டாம் ஓ.கே''

''ஓ.கே. டாக்டர்'' - மளமளவென உத்தரவுகளை இட்டுவிட்டு





காலில் சக்கரத்தோடு பறக்கிறாரே. காலையிலிருந்து பார்த்து பார்த்து உடுத்தி வந்த அலங்காரம் அனைத்தும் வீண். நின்று பார்த்து பேசக்கூடாதா. ஒரு சிரிப்பு. ஒரு பாராட்டு. ஊஹீம். தேவையேயில்லாத அந்த வழிசல் டாக்டர் பிரியன் கூட ''அட! இது நம்ம டாக்டர் உமாவா இல்லை ஏதாவது ஏஞ்சலா. வாவ்! இந்த ரோஜா நிற புடவையும் காதோர ஒற்றை ரோஜாவும். அப்பப்பா! ஸ்ரீராம் கொடுத்து வைத்தவர். நாள் பூரா இந்த அப்சரஸோடவே இருக்கார். ஒன் திங்க் மிஸ் உமா. நீங்க பேசாம எங்க பிளாக்குக்கு வந்திடுங்களேன். நாங்க ரொம்ப உற்சாகமா வேலை பார்ப்போம்'' - என வழிந்தானே.

''உற்சாகமா வேலை பார்ப்பதை விட ஒழுங்காக வேலை பார்ப்பது தான் நம் கடமை. அதுக்குத்தான் நம்மை வேலையில் வெச்சிருக்கார் டாக்டர். போய் வேலையைப் பாருங்க'' - என அவனிடம் சிடுசிடுத்து விட்டு வந்தால் இங்கு இவன் தன்னை ஏன் நிமிர்ந்து பார்க்கிறான். ச்சே! என அலுத்துக்கொண்ட போது தான் டாக்டர் வசந்தி சந்திரன், ''மே ஐக்கமின் ஸார் ''- என கேட்டவாறே வந்தாள். வந்தவள், ''ஹேய் உமா நீயா இருக்கே! டாக்டர் இல்ல'' - என இயல்பாக வந்து ஜானகியின் அறைக்கதவை திறந்தாள்.

''நோ! டாக்டர். அங்க யாரும் போக வேண்டாம்னு டாக்டர் சொல்லிட்டு போனார். யாரோ வி.ஐ.பி. யாம்''- என உமா தடுக்க.

''அந்த வி.ஐ.பி.க்கு நான் தான் நேற்று டிரீட்மெண்ட் பண்ணினேன். கொஞ்சம் காயம் தான். காயம் ஆறுகிறவரை நான் தான் டிரீட்மெண்ட் எடுக்கணும்றது டாக்டர் ஸ்ரீராமோட உத்தரவு. இப்போ நான் போகலாமா'' - என்றாள் சிரிப்போடு.

''ஓ. ஸாரி டாக்டர்! நேற்று நீங்க வெளிய எங்கும் போகலியா? ஏதோ ரிலேஷன் வீட்ல பங்ஷன் அட்டெண்ட் பண்ணணும்னு சொன்னீங்களே?''

''அதெல்லாம் அட்டெண்ட் பண்ணிட்டு நைட் பத்துமணிக்கே வந்திட்டேன். இது அன்டைம்ல அட்டெண்ட் பண்ண கேஸ்''.

''யார் வந்து அட்மிட் பண்ணாங்க. கூட யாருமே இல்லை''.

''சீரியல் டைரக்டரை திருமணம் செய்து கொண்டாயே முதலிரவு எப்படி இருந்தது?''

''நான் பால் கொண்டு வந்து அவர் காலில் விழுவது ஒரு ராத்தியும் பழம் சாப்பிடுவது ஒரு ராத்திரியும் விளக்கை அணைப்பது ஒரு ராத்திரிக்கும் தள்ளிக் கொண்டே போறார்.. முதல் இரவு எந்த ராத்திரிக்கு தான் தெரியலை''.

-ஆரணி தமிழ்செல்வம்.





''டாக்டர் ஸ்ரீராம்தான் அழைச்சிண்டு வந்திருக்கார். மற்றபடி டீட்டெய்ல்ஸ் எனக்கு எதுவும் தெரியல்ல. பட் ஒன் திங். இந்தப் பொண்ணு டாக்டர் ஸ்ரீராமுக்கு வேண்டிய பொண்ணாகத் தான் இருக்கணும். ஏன்னா இவகாயங்களை கிளீன் பண்றச்சே இவ போட்ட கூச்சல்ல ஸ்ரீராமோட தவிப்பை பார்க்கணுமே. அப்படியே துடிச்சுப் போயிட்டார். பயப்பட ஒண்ணும் இல்லன்னு சொன்னப்புறம் தான் நிம்மதியா மூச்சே விட்டார்னு கூட சொல்லலாம். எதுக்கும் நீ ரொம்ப ஜாக்கிரதையா இருந்துக்கோ. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்துவந்தவன் கொண்டு போன கதையா ஆயிடக்கூடாது பாரு. எனக்கு அவுட் பேஷன்டஸ் காத்திட்டு இருப்பாங்க. இவளை பார்த்துட்டு புறப்படணும்'' - என்றவாறு ஜானகியை நோக்கிச் செல்ல,

உமாவிற்கு ஏ.சி. அறையிலும் வியர்த்துக் கொட்டியது. வசந்தி சந்திரன் ஏற்கனவே நன்கு அறிமுகமானவர் என்பதால் ஸ்ரீராமை தான் விரும்புவதும் தெரியும். அதனால் தான் மறைமுகமாக எச்சரிக்கிறார். அவரே அதுவும் நள்ளிரவில் வந்து சேர்த்தாரா? யாரவள்? இவளால் நான் என் ஸ்ரீயை இழந்துவிடுவேனா? நெவர். ஒரு போதும் என் ஸ்ரீயை யாருக்காகவும் எதற்காகவும் இழக்க மாட்டேன். இவளை சீக்கிரம் வெளியேற்ற வேண்டும்'' -என்ற முடிவுடன் ஜானகியை வெறித்தாள். வெறித்துக் கொண்டே இருந்தாள்.

## 14

*பிறப்பிடம் வேறாய் இருந்தாலும்*
*என் இருப்பிடம் உனது மனமல்லவா*
*ஆயிரம் காலம் மாய்ந்த பின்னாலும்*
*வாழ்வது நம் உறவல்லவா*

இரவு முழுவதும் உறக்கம் வராமல் தவித்த அம்பிகை காலையில் மகன் சட்டையில் ரத்தமாக வந்த உடன் பதறித்துடித்து விட்டாள். ''ஐயா! என் ராஜா என்னாச்சு. ஐயோ எவ்ளோ ரத்தம். என்னய்யா ஆச்சு. நேத்து நல்லாத்தானே போனே. சொல்லுப்பா''.

தாயின் பரிதவிப்பைப் பார்த்துவிட்டு, ''அம்மா! இது என்னோட ரத்தம் இல்லம்மா. என் ஜானகியோட ரத்தம். என் தோளில் சாய்ந்து தூங்கினா. அப்ப பட்டிருக்கும்''.- என்றான். ஒரே பதிலில் நிறைய கேள்விகளை தவிர்த்தான்.

அம்மாவின் கண்கள் ஆச்சரியமாய் விரிந்தது. ''அப்படின்னா ஜானகி கிடைச்சிட்டாளா. மகமாயி, எம்புள்ளைக்கு வாழ்க்கை கொடுத்திட்டேம்மா. என் வம்சம் தழைக்க வெச்சிட்டேம்மா'' - கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

''அம்மா! நேத்து நைட்டும் சாப்பிடல. ரொம்ப பசிக்குது. குடிக்க ஏதாவது ரெடி பண்ணுங்க ஜானகிக்கும் சேர்த்து நான் பத்து நிமிஷத்துல ரெடியாக்கிறேன். ஓ.கே'' - என்றவாறு தாயின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டுக் கொண்டே விசிலடித்தவாறே மாடிப்படிகளில் தாவினான்.

''போக்கிரி! இத்தனைநாள் எங்கேடா வெச்சிருந்தே இந்த குறும்பை

யெல்லாம். ஜானகி இந்த வீட்டுக்கு வரட்டும். எல்லாத்தையும் சொல்றேன்'' - என்றவாறு சமையலறையை நோக்கி நடந்தாள்.

ஐந்தே நிமிடத்தில் குளித்து முடித்து அட்டகாசமாய் உடுத்தி வந்து சாப்பாட்டு மேஜை முன் வந்து அமர்ந்தவனைப் பார்த்து அசந்து போனாள் அம்பிகை.

எப்பவும் ஸ்ரீராம் சுறுசுறுப்புதான். ஆனால் இத்தனை துடிதுடிப்பு வேகம் படபடப்பு இவற்றையெல்லாம் விட இந்த உற்சாகம். எத்தனை வருடங்களாய் தொலைந்த உற்சாகம். ஜானகியால் போன உற்சாகம் இன்று அவளால் திரும்பி கிடைத்திருக்கிறதே. சந்தன கலர் சர்ட்டும் கறுப்பு நிற பேண்ட்டும் அவனுக்காகவே அம்சமாய் பொருந்தி இருந்தது. மிதமான செண்ட் நறுமணம் ஆளை தூக்கியது. மிதமான ஒப்பனைதான் என்றாலும் அகத்தின் அழகை முகம் காட்ட பேரழகனாய் தெரிந்தான் ஸ்ரீராம்.

'' வள்ளியம்மை உப்பு வற்றல் எல்லாம் எடுத்திட்டு வா. எம்புள்ளைக்கு சுத்திப்போடணும்''.

'' அம்மா! என்ன விளையாடுறீங்களா? நான் எவ்வளவு அர்ஜெண்ட்டா கிளம்பிட்டு இருக்கேன். உப்பை எடு. புளியை எடுன்னு. டிபன் போடுங்கம்மா. சீக்கிரம் போகணும்'' - கோபமாகக் கத்தினான்.

'' போகலாம்டா. நானும் தான் என்மருமகளை பார்க்கணும். நீ சாப்பிடு. நானும் கிளம்பறேன். எம்மருமகளை நேரா வீட்டுக்கு கூப்பிட்டு வராம ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு போயிட்டியேப்பா. அது நல்லாவா இருக்கும் '' - பேசிக் கொண்டே சூடான இடியாப்பத்தைத் தட்டில் வைத்து தேங்காய்ப்பாலை ஊற்றினாள்.

'' அம்மான்னா அம்மா தான். சூப்பர் டேஸ்ட். அம்மா அப்படியே ஒரு ஹாட்பாக்ஸ்ல போட்டு அதோட பிளாஸ்க் நிறைய சூடா காபி போட்டு கார்ல எடுத்து வைங்க. நான் சாப்பிட்டு வந்திடுறேன்.'' - அம்மாவை தவிர்க்கிறான் என்பது நன்றாக புரிந்தது அம்பிகைக்கு.

'' எம்ப்பா! என்னன்னு சொல்லமாட்டியா. ஜானகியை எங்கே எப்படி பார்த்தே. இரத்தக்காயம் எப்படி வந்தது. எனக்கும் என்மருமக மேல அக்கறை இருக்குப்பா. பிளீஸ் சொல்லு. நேரமில்லன்னா.

என்னையும் கூட்டிட்டுப்போ.''

தாயின் தவிப்பு புரிந்தது. ''அம்மா! பிளீஸ் நான் எது செய்தாலும் ஒரு காரணம் இருக்கும்னு தெரியுமில்லே. ஜானகி கொஞ்சம் உடம்பு முடியாம இருக்கா. இப்ப நீங்க அவளைப் பார்க்க வேண்டாம். நீங்க மொத மொத நேர்ல பார்க்கிற ஜானகி என்னோட பழைய ஜானகியாகத்தான் இருக்கணும். பிளீஸ் இதுக்கு மேல என்னை எதுவும் கேட்காதீங்கம்மா. டயம் இல்லை. அவ கண்விழிக்கிறப்ப நான் அவ பக்கத்துல இருக்கணும்.''

மகனின் அவசரம் ஏதோ உணர்த்தியது. ''சரிப்பா! நீ சாப்பிட்டு கிளம்பு. நான் எல்லாம் கார்ல எடுத்து வைக்கிறேன்''- என்றதும் நிம்மதியானான். அவசரமாக சாப்பிட்டு விட்டு அம்மாவுக்கு பை சொல்லி கிளம்பி பத்தே நிமிடத்தில் மருத்துவமனையை அடைந்து எதிர்பட்ட டாக்டர்களின் குட்மார்னிங்குகளை புன்னகையால் ஆமோதித்தவாறே தனது



அறையை அடைந்தபோது, உமா அறைவாசலில் நின்று ஜானகியின் படுக்கையை பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

அது ஸ்ரீராமின் அறைக்குள் இருக்கும் தனி அறை எனலாம். யாருக்கும் அங்கு அனுமதியில்லை. பெரிய பணக்காரர்கள், நடிகர்கள், அரசியல்வாதிகள் போன்ற பிரபலங்கள் ரகசியமாக வந்து கவுன்சிலிங் செய்து கொள்கிற அறை, சின்ன மனக்குழப்பங்கள் மனச்சிதைவு என்றாலும் வெளியில் தெரியக்கூடாது என்று ஸ்ரீராமின் மருத்துவமனையை நாடி வருவதுண்டு. ஸ்ரீராமும் வெகு ஜாக்கிரதையாய் இருப்பான். நர்ஸ் வார்டுபாய் என யாரையும் அனுமதிப்பதில்லை. ஏன் சக டாக்டர் உமாவே அவன் அழைத்தால் மட்டுமே அந்த அறைக்குள் நுழைய வேண்டும். அதற்காகவே அந்த அறைக்கு வேறு கதவுகள் இல்லாமல் வைத்திருந்தான். ஸ்ரீராமின் அறைக் கதவு மட்டும் தான் வழி. யார் சென்றாலும் ஸ்ரீராமைத் தாண்டித் தான் போக வேண்டும்.

''என்ன மிஸ் உமா! ஜானகி எழுந்தாச்சா''- என்ற ஸ்ரீராமின் ஆவலான குரலில் அதிர்ந்து திரும்பினாள் உமா. சட்டென சமாளித்து ''நோ ஸார்! லேசா முனகல் சப்தம் கேட்டது. அதனால் தான் பார்த்தேன். எழுந்துக்கலை'' என்று சொன்னாள்.

''ஓ.கே. ஐ.வில் டேக் கேர். யூ கேன் கோ'' 'என்றான், ஸ்ரீராம்.

தொடர்ந்து 'இன்னிக்கு மார்னிங் ரவுண்ட்ஸ் நீங்க முடிச்சிட்டு பைலை என் டேபிளுக்கு அனுப்பிடுங்க. கொஞ்ச நேரம் யாரும் என்னை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். பேஷண்ட்ஸ் வந்தா பார்த்து அனுப்பிடுங்க. ஓ.கே. நீங்க போகலாம்''- என்றான் அதற்கு மேல் நிற்க முடியாமல் மனதால் புழுங்கிக் கொண்டே வெளியேறினாள் உமா.

அவள் வெளியேறியதும் கதவை பூட்டிவிட்டு ஜானகியின் அறைக்குள் நுழைந்தான். ஜன்னல்களை திறந்துவிட்டான். விளக்குகளை ஏசியை அணைத்தான். அங்கிருந்த டேப்பில் சுப்ரபாதத்தை சுழலவிட்டான். ஜன்னல் வழியாக காற்று மோத சூரியனின் வெப்பமும் மோத மெலிதாக புரண்டுபடுத்தாள் ஜானகி. வலியில் முகம் கோண முற்றிலுமாய் விழித்தாள். படுத்தவாக்கிலேயே அறையை சுற்றிலும் நோக்கினாள். இது எந்த இடம் என புரியாமல் விழித்தவளின் கண்கள் ஸ்ரீராமின் புன்னகை முகத்தில் நின்றது. ''குட்மார்னிங் ஜானு''-வெகு உற்சாகமாக தன் பெயரை உச்சரித்தவனை புதிதாய்ப் பார்த்தாள்.

''யார் நீ. எம்பேர் உனக்கு எப்படித் தெரியும்''- எழுந்து உட்கார்ந்தவாறே கொஞ்சம் பயத்துடன் கேட்டவளை சற்று கூர்ந்து பார்த்தான். வெகு கூர்மையாய் விழிகளைத் தாண்டி உயிர்வரை இறக்கிய பார்வை. ஒரு நிமிடம் சில நிமிடம் என பார்வையை விலக்கவில்லை ஸ்ரீராம். அவனது பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் முகத்தை திருப்பிக் கொண்டாள் ஜானகி. ஸ்ரீராமின் இதழ்களில் மர்மப்புன்னகை தோன்றி மறைந்தது. அவளருகே வந்து அமர்ந்து கொண்டான். சட்டென விலக முயன்றவளை பிடித்து அமரவைத்தான்.

''என்ன ஜானு! அதுக்குள்ள மறந்து போச்சா. நேத்து நைட் எங்கார்ல வந்து விழுந்தியே. நாம கூட ரொம்ப நேரம் பேசினோமே. நீ அறைஞ்சது இன்னும் வலிக்குது தெரியுமா''-கன்னத்தை பற்றிக் கொண்டு அழுவது

போல முகத்தை வைத்துக் கொண்டான்.

நம்ப முடியாமல் பார்த்தாள். ''இன்னும் நம்பலியா. நான் ஸ்ரீராம் டாக்
டர். என்னைக் கூட டேய் ஸ்ரீராம்னு கூப்பிட்டியே''

''ம்! ஆமாம் இல்ல. டேய் ஸ்ரீராம். இது யார் வீடு. ரொம்ப அழகா
பெரிசா இருக்கே. உன் வீடா''- இயல்பாய் அவள் பேசவும் நிம்மதியா
னான் ஸ்ரீராம்.

''அப்பா! எங்கே மூன்றாம்பிறை ஸ்ரீதேவி மாதிரி போயிடுவி
யோன்னு நினைச்சேன். இப்பவாவது ஞாபகம் வந்ததே சரி சாப்பிட
லாமா?''

''ஐயோ! ரொம்பப் பசிக்குதுடா''

''இதோ ஒரு நிமிடம். பட் அதுக்கு முன்னால பல் துலக்கணும்.
ஓ.கே.கமான்''- அவளது கையைப் பற்றி எழுப்பி பாத்ரூம் அருகே
கொண்டு விட்டான். ''உள்ளே பேஸ்ட் பிரஷ்' எல்லாம் இருக்கு. பிரெஷ்
பண்ணிட்டு லைட்டா முகம் கழுவிட்டு வா. காயத்தில தண்ணி பட்டு
விடாம கழுவணும் சரியா.''

''ம்''- சமர்த்தாய் தலையை ஆட்டிவிட்டு பாத்ரூமிற்குள் நுழைய, ஸ்ரீ
தனது டேபிளுக்கு வந்து இன்டர்காமை தட்டி, ''சிஸ்டர்! மூர்த்தியை வரச்
சொல்லுங்க''-என்று கூறிவிட்டு வைத்தான்.

சில நொடிகளில் கதவை தட்டும் ஒலி கேட்க ''வா மூர்த்தி''-என்
றான். அந்த வார்டுபாய் வெள்ளை யூனிபார்மில் வந்து நிற்க தனது கார்ச்
சாவியை அவனிடம் தந்து, ''கார்ல கொஞ்சம் திங்க்ஸ் இருக்கும் எடுத்
திட்டு வா. சீக்கிரம்''-என்றான். ''எஸ் டாக்டர்'' என்றவாறு சாவியை
பெற்றுக் கொண்டு அவன் விலகியதும் ஜானகியின் அறைக் கதவை
சாத்தி தாழிட்டான். இரண்டு நிமிடத்தில் பார்சல்கள் அடங்கிய பையைக்
கொண்டு வந்தான் மூர்த்தி.

''வெச்சிட்டுப்போ''- என்றான் பையில் இருந்து பார்வையை நகர்த்
தாமலே. ''ஓ.கே. சார்''-என்றவாறு அவன் சென்றதும் எழுந்து கதவை
சாத்தி பூட்டினான்.

''மூர்த்தி நில்லு.''--ஸ்ரீராமின் அறையை அடுத்த அறையிலிருந்து
உமா அழைத்தாள். ''யெஸ் மேடம்''-என்றவாறு அருகே சென்றான்.

''என்ன கொண்டு போனே? யார் தந்தா?'''' டாக்டர் சார்தான் மேடம்.
கார்ல இருந்து எடுத்துட்டு வரச் சொன்னார். சாப்பாடு துணிமணின்னு
நினைக்கிறேன்.''

''யார் அங்கு ஆராய்ச்சி மணி
அடிப்பது!''

''மணி அடிக்கிறதா என்று நான்
தான் ஆராய்ச்சி பண்ணி பார்த்
தேன்''.

- பி.பாலாஜிகணேஷ்.
கோவிலாம்பூண்டி.





''சரி! நீ. போ.''- அவனை அனுப்பிவிட்டு யோசனையாய் தனது
இருக்கையில் அமர்ந்தாள். வீட்டிலிருந்தே சாப்பாடு வருகிறதா?. அப்படி
முக்கியமாக அவள் யார்? ஏதாவது நடிகையாக இருக்குமோ?. அப்படி
இருந்தால் துணைக்கு ஆளில்லாமல் இருப்பாள். தனியாக அவளையும்
ஸ்ரீராமையும் நினைத்துப் பார்க்கவே வயிற்றை பிசைந்தது. உள்ளே என்ன
நடக்கிறதோ?

உள்ளே...

''ஸ்ரீ! எங்கே போயிட்டே. எனக்கு பயம்மா இருக்குடா. கதவை
திறடா. ''படபடவென கதவைத் தட்டினாள் ஜானகி. ''இதோ வந்திட்
டேன்.'' என்றவாறு கதவை திறந்த உடன் படபடவென்று அவன் நெஞ்
சின் மீது அடித்தாள் ஜானகி. ''என்னை விட்டுட்டு எங்கே போனே.
ரொம்ப பயந்திட்டேன் தெரியுமா. பேசாதேடா எங்கூட'' முகத்தைத்
திருப்பிக் கொண்டு கட்டிலின் ஓரத்தில் போய் அமர்ந்து கொண்டாள்.

அமைதியாய் அங்கிருந்த மேஜைமேல் சாப்பாட்டை எடுத்து வைத்து
தட்டில் இடியாப்பத்தை வைத்து தேங்காய் பாலை ஊற்றி அவளிடம் நீட்'
டினான். கண்ணாடி டம்ளரில் காபியை ஊற்றி வைத்தான். ''ரொம்ப பசிக்
குதுன்னு சொன்னியே! நான் இங்கே உட்கார்ந்திருந்தா யார் சாப்பாடு வாங்
கிட்டு வருவாங்களாம். இவ்வளவு கோபமா பேசாட்டி போ. மொதல்ல
சாப்பிடு''

மெல்ல திரும்பினாள். ''அச்சோ! சாப்பாடு வாங்கப் போனியா நான்
ஒரு மக்கு. ரொம்ப அடிச்சிட்டேன் இல்ல. வலிக்குதா.'' நெஞ்சின் மீது
தன் பட்டுக் கையை வைக்க அதை அப்படியே வைத்து தன் கையை அத
னோடு சேர்த்துக் கொண்டான். ''கேட்கிறதா ஜானகி. என் இதயத்துடிப்பு.
இப்போது மட்டுமல்ல. ஐந்து வருடங்களாக உன் பெயரைத் தான் என்
இதயம் உச்சரிக்கிறது. இதயம் மட்டுமல்ல என் இரத்தம் நாடி நரம்பு
அனைத்தும் உன் பெயரைத் தான் உச்சரிக்குது. நீ என்று என்னை புரிந்து
கொள்வாய்?. என்னை என் அன்பை புரிந்து எப்போது ஏற்றுக் கொள்
வாய்?. அம்மா உன்னை தன் மகளாய் தாங்க ரெடியாக உள்ளார். நான்
என் இதயத்தையே உன்னிடம் அர்ப்பணித்து விட்டேன். நீ அனுபவித்த
துன்பங்களை எல்லாம் மறந்துவிடு. உன் கடந்த காலத்தை சுத்தமாய் மறந்
துவிட்டு இன்றுதான் புதிதாய் பிறந்ததாய் எண்ணிக் கொள். எனக்காகவே
பிறந்ததாய் இருக்கட்டும். என்னுயிரே! உன்னைக் காணாமல் நான் வாடிய
நாட்கள் போதும். இனியும் என்னால் நீயின்றி வாழ முடியாது. உன் குழந்
தைத் தனம் எப்போது மாறும். என் பழைய ஜானகியாய் என்று மாறு
வாய்''-பேசிக்கொண்டே போனான் ஸ்ரீராம்.

## 15

கண்ணெதிரே தோன்றினாள்
கனிமுகத்தை காட்டினாள்
நேர்வழியில் மாற்றினாள்
நேற்றுவரை ஏமாற்றினாள்

விக்கித்துப் போய் அமர்ந்திருந்தாள் ஜானகி.

என்ன நடக்கிறது இங்கே. நேற்று இரவு தானே இவனைக் கண்டோம். என்னவோ ஐந்தாண்டுகளாக தன் பெயரை இவனது இதயம் உச்சரிப்பதாக கூறுகிறானே யார்? யாரிவன்? ஒரே நிமிடத்தில் ஜானகியின் முகத்தில் ஆயிரம் கேள்விகள் தோன்றி மறைந்ததை ஸ்ரீராம் கவனிக்க தவறவில்லை. எந்த நோயாளியையும் ஒரே பார்வையில் கணித்து விடுகிறவன் அவன். அவனது கணிப்பு சரியாக இருந்தது. அதற்குமேல் அங்கு அவன் இருக்கவில்லை. எழுந்து டேபிளின் மீது இருந்த கவரினுள் உள்ள மாத்திரைகளை பிரித்து வைத்தான்.

''ஓ.கே! கிளம்புகிறேன். நீ பொறுமையா சாப்பிட்டுவிட்டு காபி குடித்துவிட்டு மாத்திரை போட்டுக் கொண்டு நிம்மதியாக படுத்து தூங்கு. உனக்கு இப்போ தேவை நல்ல ரெஸ்ட். நான் ரவுண்ட்ஸ் போயிட்டு வர்றேன். கதவை வெளியே பூட்டிவிட்டு போகிறேன். நான் வரும் வரை போரடித்தால் டி.வி. இருக்கிறது பார். இல்லை ரேடியோ. இல்லை பேப்பர் பார். பசித்தால் பிரெட் பழங்கள் எல்லாம் இதில் இருக்கிறது. சாப்பிடு. நான் மதிய உணவோடு வருவேன் சரியா''?

அவன் தன்னை விட்டு விலகுகிறான் என்பதை ஏனோ ஜானகியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தனிமை பயம். இத்தனை வருடங்களாய் தன்னை பயமுறுத்திய பயம் முதன் முதலாய் ஸ்ரீராம் அருகில் இருக்கையில் மறைந்த பயம் மீண்டும் தன்னை ஆட்கொண்டு விடுமோ என்ற பயத்தில் தன்னையும் மீறி அவனது கையை பற்றிக் கொண்டாள்.

''என்னைத் தனியா விட்டுட்டு போயிடாதே. எனக்கு ரொம்ப பயம்மா இருக்கும். இனிமே நான் உன்னை அடிக்கமாட்டேன். உம்மேல கோவிச்சுக்க மாட்டேன். என்னை விட்டுட்டு மட்டும் எங்கும் போயிடாதே. நீ என்ன சொன்னாலும் நான் கேட்பேன் சரியா. என்னையும் கூட்டிட்டு போறியா. நான் சமர்த்தா நடந்துப்பேன். பிளீஸ்''- தவிப்போடு கெஞ்சுதலாகக் கேட்டவளை ஒரு நொடி இமைக்காமல் பார்த்தான். பின் அமைதியாக அவள் அருகில் உட்கார்ந்தான். இந்த முறை அவள் விலகவில்லை. மென்மையாய் அவள் தலையை வருடிவிட்டான்.

''இதோ பார் ஜானு! உன்னை வெளிய அழைச்சிட்டு போகக்கூடாதுன்னு இல்லை. பார்தோன்ல கட்டுப்போட்டிருக்கு. இந்தக் கையில்லாத நைட்டியோட என்கூட நீ வந்தா நல்லாவா இருக்கும். தவிர உனக்கு யார் மூலமாவது ஆபத்து வந்திடக்கூடாதுன்னு வேற பயம்மா இருக்கு. ஒரு முறை உன்னை தொலைத்த என்னால் இனியும் உன்னை இழக்க முடியாது. உன்னை இழந்து என்னால் வாழவும் முடியாது. ஜஸ்ட் காயம் ஆறுகிறவரையாவது நீ யார் கண்ணிலும் பட வேண்டாம். இதை விட பாதுகாப்பான இடம் ஒண்ணு இருக்கு. அங்கே நீ ராணி மாதிரி வாழலாம். காயம் ஆறிப்போன உடனே உன்னை அங்கே கூட்டிட்டு போறேன். அங்கே நீ ஜாலியா ஆடலாம் பாடலாம். யாரும் உன்னை ஏன்னு கேட்க மாட்டாங்க''

''அப்ப என்னை உடனே கூட்டிட்டு போயேன். ஆமா! நீ இருப்பல்ல அங்க. ஏன்னா நீ இருந்தா எனக்கு பயமே இல்லை தெரியுமா. நீ இருப்பல்ல.''

''கண்டிப்பா இருப்பேன். உங்கூடவே இருப்பேன்''



''எப்பவுமா'' ''காலம்பூரா'' ''சரி! நீ போ. நான் சாப்பிட்டு படுத்துக்கிறேன்''- சமர்த்தாய் சாப்பிட ஆரம்பித்தாள்.

சிறிது நேரம் அங்கிருந்து பார்த்துவிட்டு அமைதியாய் வெளியேறி கதவை பூட்டினான். தனது இருக்கையில் அமர்ந்தான். சற்று குழப்பமாக இருந்தது.. குழப்பம் தெளிய வேண்டும் என்றால் ஜானகி மனதை திறந்து பேச வேண்டும். ஏன் பயப்படுகிறாள். எப்படி அவளை நம்ப வைப்பது? இரு கைகளாலும் நெற்றியைப் பற்றிக் கொண்டான். இண்டர்காம் கிணுகிணுத்தது. எடுத்தான். ரிஷப்னிஷ்ஸ்ட் மெல்லிய குரலில் ''ஸார் உங்க பிரண்ட் சந்துரு வந்து வெயிட் பண்றார். உள்ளே அனுப்பட்டுமா'' என்றாள்.

சந்துருவுக்கு ஜானகி விஷயம் தெரிய வேண்டுமா?. ஒரு நொடி சிந்தித்தவன் மறுப்பாய் தலையசைத்து விட்டு, ''இதோ நானே வருகிறேன்''- என்றவாறு ரிசீவரை சாத்திவிட்டு தன் அறையை பூட்டிவிட்டு சந்துருவை பார்க்க புறப்பட்டான். வரிசையாக போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த சந்துரு ஸ்ரீராமைப் பார்த்ததும் எழுந்து வந்து கட்டிக் கொண்டான்.

''ஒர்க்கிங் ஹவர்ஸ்ல உன்னை டிஸ்டர்ப் பண்ணிட்டேனோ ஸ்ரீ''

''சேச்சே! வா வா வெல்கம். எப்படி இருக்கு என்னோட ஹாஸ்பிடல்''

''பென்டாஸ்டிக்டா! ரொம்ப ரசனையாகவும் பொறுப்பாவும் பார்த்து பார்த்து வடிவமைச்சிருக்கே. எல்லாம் சுத்திப் பார்த்திட்டேன். நீ ரொம்ப பிஸியா இருக்கிறதா சொன்னாங்க. அதான் அப்படியே சுத்திட்டு வந்தேன்.

''ஓ! ஸாரிடா. ஒரு முக்கியமான பேஷண்ட்''

''இட்ஸ் ஓ.கே.டா,'' பேசிக் கொண்டே ஒரு அறைக்குள் நுழைந்தனர். நிறைய எக்யூப்மென்ட்ஸ் நிறைந்திருந்த அந்த அறை வெகு அமைதியாய் இருந்தது. உள்ளே சென்றுசுவிட்சைப்போட்டு மின் விசிறியை சுழலவிட்டு சந்துருவை அமரச்சொல்லி அவனருகில் அமர்ந்து கொண்டான்.

''ம்! சொல்லு, என்ன சாப்பிடுறே.'' ''எதுவும் வேண்டாம்டா. இப்பத்தான் சாப்பிட்டு வந்தேன்''

''ஓ.கே. மேட்டருக்கு வருவோம். சொல்லு. என்ன பிரச்சனை உனக்கு.'' ஸ்ரீ இயல்பாய் கேட்க சந்துரு அமைதியானான். சிறிது நேர தயக்கத்திற்கு பிறகு, ''ஸ்ரீ! இப்ப நான் சொல்றது உன் மனசோடயே இருக்கட்டும். நம்ம பிரண்ட்ஸ் மட்டுமில்ல என்னோட பேரண்ட்சுக்குக் கூட தெரியவேண்டாம்.''- பீடிகையுடன் ஆரம்பித்தான்.

''கவலையே படாதே! இந்த ஹாஸ்பிட்டல் ரூல்ஸே அதுதான். எந்தத் தகவலும் வெளியே போகாது. அதிலயும் நீ என் நண்பன் நான் எப்படி சொல்லுவேன். நீ தைரியமாக சொல்லு''.

''ஸ்ரீ! நான் மலேஷியாவுக்கு போறதுக்கு முன்னால நீங்கள்லாம் டூர் போனப்போ நான் வரமுடியல்லன்னு சொன்னேன் தெரியுமா''

''ஆமா! நான் கூட நேர்ல வந்து கூப்பிட்டேன். நீ உள்ளே இருந்து வெளியே வரவே மாட்டேன்னு சொல்லி என்னை திருப்பி அனுப்பிட்டியே!'' -கொஞ்சம் வருத்தத்துடன் கூறினான் ஸ்ரீராம்.

''காரணம் இருக்குதுடா. அதுக்கு ரெண்டு நாள் முன்னால தான் எங்க
தோட்டத்து கிணத்துல குதிச்சி குளிக்கும் போது.. எனக்கு படக்கூடாத
இடத்தில் அடிபட்டிருச்சிடா''

நிமிர்ந்து உட்கார்ந்தான் ஸ்ரீராம். ''ஆமாண்டா எப்பவும் போலத்தான்
குதிச்சேன். வரிசையா நட்டிருந்த கல்ல எப்படியோ பட்டது. என்னால
வலிதாங்க முடியல்ல. இந்த வலியை யார்கிட்டயும் சொல்லவும் அசிங்
கமா இருந்தது. ரெண்டு மூணு நாளா வலி உயிர்போயிடிச்சி.''

''ஹாஸ்பிடல் போனியா. டாக்டரைப் பார்த்தியா''

''எனக்கு ரொம்ப கூச்சமாகவும் கேவலமாகவும் இருந்துச்சுடா.அத
னால டாக்டர்கிட்ட போகல்லடா''

''தப்பு பண்ணிட்டியேடா! நீ போயி பார்த்திருக்கலாமே. சரி அப்பு
றம் பிரச்சனை எதுவும் இல்லியே. வலி சரியாச்சில்ல''

''தப்பு பண்ணிட்டேன் ஸ்ரீ. டாக்டர் கிட்ட போக அசிங்கப்பட்டு
சும்மா தைலம் அது இதுன்னு போட்டு தேய்ச்சேன். ஒரு வாரத்தில வலி
நின்னுபோச்சு. ஆனா போன மாசம். அந்த இடத்துல பயங்கர வலி. என்
னால வலி தாங்க முடியல்ல . டாக்டரைப் பார்த்தேன். முன்
னால நடந்த ஆக்ஸிடென்ட்டை சொன்னேன். எல்லா டெஸ்ட்டும் பண்
ணிட்டு...'' சந்துருவின் தொண்டை அடைத்துக் கொள்ள கண்களில் நீர்
சுரந்தது.

''என்னடா மச்சான். எல்லா ரிப்போர்ட்டையும் பார்த்துட்டு என்ன
சொன்னாங்க''-மனம் பதற கேட்டான் ஸ்ரீராம்.

''என்னால... என்னால ஒரு குழந்தைக்கு தகப்பனாக முடியாதுன்னு
சொல்லிட்டாங்கடா. என்னால ஒரு பெண்ணை தாய்மையடைய வைக்க
முடியாதுன்னு சொல்லிட்டாங்கடா''-முகத்தை மூடிக்கொண்டு குலுங்கி
அழ ஆரம்பித்தான் சந்துரு.

ஸ்ரீராம் அதிர்ந்து போயிருந்தான். அவனது நண்பர்கள் குழுவில் மிக
வும் கலகலப்பானவன். எப்பேர்ப்பட்ட சிடுமூஞ்சிகளையும் சிரிக்க வைக்
கும் திறமை உடையவன். அதேபோல் எதற்கும் கலங்கமாட்டான். பரிட்
சையில் மார்க் குறைந்தால் கூட ப்பூ இதுக்கெல்லாமா கவலைப்படுவாங்க
என ஜாலியாய் அரட்டை அடித்துக் கொண்டிருப்பான். ''டேய்! எனக்கு
மட்டும் கல்யாணம் ஆகிடுச்சின்னு வை. குறைஞ்சது பத்து பிள்ளைகளா
வது பெத்துக்கணும்டா. ஒத்தையா பிறந்த நான் தனியா வளர்ந்த மாதிரி
எம்பிள்ளை வளரக்கூடாது. வீடு நிறைய பிள்ளைகளா திரியணும். நான்
சம்பாதித்தி அவர்களை ஜாம் ஜாம் என்று வாழ வைப்பேன். வெளியே
போயிட்டு வீட்டுக்குள் வந்தா என்னோட காலை கட்டிக்கணம் எம்பிள்
ளைங்க. நான் தோள்ல ஒன்று தலையில ஒன்று இடுப்பில ரெண்டு தூக்
கிக் கொஞ்சணும்'- என்பான் ''டேய் இது உனக்கே ரொம்ப ஓவரா தெரி
யல்ல. அரசாங்கமே ரெண்டுன்னு சொல்லி அதையும் ஒன்று போதும்னு
சுருக்கிடுச்சி. நீ என்னன்னா வீடு நிறைய பிள்ளைகளா பெத்துக்கணும்னு
சொல்றியே''-என்பான் விஷ்ணு.

''போடா டேய்! எத்தனை செல்வம் இருந்தாலும் மழலைச் செல்வம்
தாண்டா பெரிது. அந்த செல்வத்தை யாராவது வேண்டாம்னு சொல்
வாங்களா''-என்பான்.



இன்று ஒரு குழந்தை கூட பெற்றுக் கொள்ள இயலாமல் அவன்
தேம்பி அழுகையில் ஆறுதலுக்கு வார்த்தையின்றி தவித்தான் ஸ்ரீராம்.
எழுந்து வந்து அவனை அணைத்துக் கொண்டான். ஆறுதலாக அணைத்த
அணைப்பில் இன்னும் அழுதான். அவன் அழுது முடியும்வரை அமைதி
யாக காத்திருந்தான். ஒரு வழியாக அழுது சிவந்த கண்களுடன், ''ஸாரிடா,
உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன்''- என்றவாறு பேண்ட் பாக்கெட்
டிலிருந்து கர்ச்சிப் எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

சில விநாடிகள் அமைதியாக இருந்துவிட்டு, ''இப்போ நான் உங்கிட்ட
வந்த விஷயமே வேறடா. ஆனது ஆச்சுன்னு நான் பாட்டுக்கு வேலை
பார்த்திட்டு இருந்தேன். அந்த விசயத்தையே மறந்திட்டேன்னு சொல்ல
லாம். அப்பத்தான் ஊர்ல அம்மாகிட்ட இருந்து லட்டர் வந்தது. இதைப்
பாரு''-என்றவாறு ஏர்மெயில் கவர் ஒன்றை எடுத்து நீட்டினான்.

குழப்பமாய் அதை வாங்கிப் படித்து விட்டு துக்கமாய் நிமிர்ந்தான்.
அவனது தாயார் மகனுக்கு பெண் பார்த்து நிச்சயமும் செய்துவிட்டு
மகனை உடனே வரும்படியும் வந்த உடனே திருமணம் என்றும், கடிதம்
கிடைத்த உடன் புறப்பட்டு வருமாறு எழுதியிருந்தார். எல்லா பெற்றோர்
களும் செய்யும் செயல்தான். ஆனால் இதில் தவறேதும் இல்லையே.

''இப்போ என்னடா செய்யப்போறே''-ஸ்ரீகேட்க, ''முடியாது ஸ்ரீ. என்
னால ஒரு பெண்ணோட வாழ்க்கையை சீரழிக்க முடியாது. தாம்பத்ய
வாழ்க்கையில ஒரு பிரச்சனையும் இருக்காது என டாக்டர்கள் சொல்லி
விட்டார்கள். ஆனாலும் அது மட்டுமே வாழ்க்கை ஆகுமா. திருமணமான
கொஞ்ச நாளில் கேட்பார்களே ஏதாவது விசேஷம் உண்டா என்று. என்
னால் அது முடியுமா?. அதோடு எந்தப் பெண் இதற்கு ஒத்துக் கொள்வாள்.
உண்மையை மறைத்து திருமணம் செய்வதில் எனக்கு உடன்பாடில்லை.

அது நரக வாழ்க்கை. உண்மையைச் சொன்னால் எனக்கு திருமணம்
என்பது கனவிலும் நடக்காது. அதில் எனக்கு விருப்பமும் இல்லை.
ஆனால் அம்மா திருமணம் செய்ய மறுத்தால் உயிரை மாய்த்துக் கொள்
வேன் என போனில் மிரட்டுகிறார். நான் என்ன செய்வேன். நீயே சொல்.
அதனால் தான் லீவில் நேரே உன்னிடம் வந்தேன். நீ என்ன சொன்னா
லும் அது சரியான முடிவாக இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் வந்

''என் மனைவியிடம் எந்த
வேலை சொன்னாலும் பொறுப்
போடு செய்யமாட்டாள்''

''பின்னே?''

''வெறுப்போடு முறைப்
பாள்''

- ராமலிங்கம், தூத்துக்குடி.-



தேன். நீ சொல் நான் என்ன செய்யட்டும்''-தன் முன் யாசித்து நின்றவனிடம் என்ன சொல்வதென்று புரியாமல் நின்றான் ஸ்ரீராம்.

சில நிமிடங்கள் அமைதியாய் இருந்தவன் சட்டென நிமிர்ந்து ''டேய் சந்துரு! காலேஜ் டேஸ்ல விதவை திருமணம், பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கணும்னு புரட்சிக்கரமா பேசுவியே இப்பவும் உனக்கு அப்படி எதுவும் ஐடியா இருக்கா''- பரபரப்பாகக் கேட்டான்.

''என்ன ஸ்ரீ ஜோக்கா! என் நிலமையைப் பார்த்து எந்தப் பெண்ணாவது எனக்குத் தான் மறுவாழ்வு கொடுக்கணும். நான் எப்படி கொடுக்க முடியும். போடா உனக்கு எப்பவும் விளையாட்டுத் தான்''- விரக்தியாக புலம்பினான் சந்துரு.

''டேய் இடியட்! நான் சீரியஸா கேட்கிறேன். அப்படி ஏதாவது பாதிக்கப்பட்ட பெண் உன்னைக் கட்டிக்க சம்மதிச்சா நீ அந்தப் பெண்ணை ஏத்துப்பியா''-ஸ்ரீராமின் குரலில் இருந்த உறுதி சந்துருவை தலையசைக்க வைத்தது.

''ஓ. தேங்க் காட். நீ ஒரு உயிரை மட்டும் காப்பாத்தலடா. உங்க அம்மாவோட சேர்த்து ஐந்து உயிரை காப்பாற்றப்போகிறாய்'' கமான் வா என்னோட''- சந்துருவை இழுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

## 16

உன்னிடம் நான் கண்ட
பெருமைகள் பலவுண்டு
கோபம் வேகம் மாறாதோ?
மாறும் நன்னாள் காண்பேனோ
புன்னகையாலே எனை மாற்று!

உமா பொறுமையிழந்தாள். ''ஏய் ஒழுங்கா ஊசியைப் போடவிடு. டாக்டர் டாக்டர்னு உயிரை விடுறியே. இனிமே நான் தான் உன்னை பார்த்துப்பேன். அவர் பார்க்க வேண்டிய பேஷண்ட் நிறைய பேர் இருக்காங்க. இங்க வரமாட்டார்''-ஏற்கனவே எப்போதும் தன்னுடன் இணைந்து ரவுண்ட்ஸ் வரும் ஸ்ரீராம் இன்று வராததால் ஏகப்பட்ட கடுப்பில் இருந்த உமாவிற்கு சுஜாதாவின் பிடிவாதம் எரிகிற தீயில் ஊற்றிய எண்ணெயாய் ஆயிற்று.

''நீ என்ன சொன்னாலும் சரி. டாக்டர் வந்தாத்தான் ஊசி போடணும். இல்லேன்னா போ. ஊசியும் வேணாம் மாத்திரையும் வேணாம்''

''இதெல்லாம் என்னத்தை உருப்படபோறது. சும்மா தெண்டத்துக்கு செலவில்லாம வைத்தியம் பார்க்க இவருக்கென்ன பைத்தியமா. ச்சே! பொட்டைக்கழுதை இப்படி கெட்டுப்போய் வயித்தில வாங்கியும் புத்தி வரலியே. எவன் வருவான் அவனை எந்த நடிகனோடு ஒப்பிடலாம்னு தானே இன்னும் அலையுது. வேஸ்ட் பெல்லோ''-உமாவின் பேச்சு சுஜாதாவை பாதிக்கவில்லை என்றாலும் உடனிருந்த செவிலியர்களின் மனதை தாக்கியது.

''என்ன ஆயிற்று டாக்டரம்மாவிற்கு. இப்படி கேவலமாக பேசுமள



விற்கு என்ன நடந்தது''-ஒருவருக்கொருவர் பார்வையால் பேசிக் கொண்டனர்.

''ஏய் பிரேமா! மீனாட்சி நீங்க ரெண்டு பேரும் அவளைப் பிடிங்க. நான் இன்ஜெக்ஷன் போடுறேன்''-என கூற அந்த இரு செவிலியர்களும் சுஜாதாவின் கையையும் தோளையும் பற்றிக் கொள்ள உமா சிரிஞ்ஜோடு சுஜாதாவின் அருகில் செல்ல சுஜாதா வெறி வந்தாற்போல் சீறிக்கொண்டு காலால் உமாவை எட்டித் தள்ள ஊசி தூரமாய் போய் விழுந்தது. தடுமாறி கீழே விழப்போன உமா கட்டிலை சட்டென பிடித்துக் கொண்டு சமாளித்து நின்றாள். பொறுமை தனது எல்லையை மீறிவிட வசந்திசந்திரன் பேச்சு, ஜானகி அட்மிட்,ஸ்ரீராமின் நிராகரிப்பு என எல்லா கோபத்தையும் திரட்டி பளார் என ஓங்கி அறைந்தாள்.

அம்மா.. ஆ என அலறிச் சாய்ந்தாள் சுஜாதா. சரியாக அந்த நேரம் தான் சந்துருவின் கையைப் பற்றியவாறு உள்ளே நுழைந்த ஸ்ரீராம் இந்தக் காட்சியைக் கண்டு கொதித்துப்போனான்.

''மிஸ் உமா! வாட்ஸ் திஸ் நான்சென்ஸ். ஏன் இப்படி நடந்துக்கிறீங்க. ஆர் யூ மேட். நீங்கள்லாம் என்ன படிச்சீங்க?. பேஷன்ட்கிட்ட எப்படி பிஹேவ் பண்ணணும்னும் தெரியாம எப்படி படிச்சி பட்டம் வாங்கினீங்க.''

''டாக்டர் அவ என்ன செய்தான்னு தெரியாம''...

''நோ! அவ என்ன வேணாலும் பண்ணியிருக்கட்டும். அதுக்கு அடிக்கிறதா?. அந்த ரைட்ஸை உங்களுக்கு யார் தந்தது. குழந்தைத்தனமா பேஷன்ட்ஸ் நடந்தா அன்பா பேசி அரவணைக்க வேண்டுமே தவிர இப்படி காட்டுமிராண்டி தனமா நடக்கக்கூடாது. அதுவும் அவளோட ஹெல்த் கண்டிஷன் தெரிஞ்சும். ஷிட்.. பிளீஸ் அவுட். ஆல் ஆப் யூ அவுட்''-ஸ்ரீராமின் கோபத்தில் மிரண்டு போய் செவிலியர்கள் வெளியேற, உமா அவமானத்தில் குன்றிப்போனாள்.

ஒரு அந்நிய ஆடவன் முன்னால் தனக்கு கீழ் வேலை பார்க்கும் பணியாளர்கள் முன் தன்னை என்னவெல்லாம் பேசிவிட்டான். தானும் செய்தது தவறோ. என்னதான் கோபம் இருந்தாலும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை கைநீட்டி அடித்திருக்கக்கூடாது. எல்லாம் இவனால் இவனால் தானே?. இவனை யார் அந்த ஜானகியை அழைத்து வரச் சொன்னது. அவளால் தான் காலை முதலே டென்ஷன். உமாவின் கோபம் முழுவதும் ஜானகியின் மீது பாய்ந்தது.

''சொன்னது காதுல விழலை. பிளீஸ் அவுட்''- கதவை நோக்கி கைகாட்டிய ஸ்ரீராமை நிமிர்ந்து பார்க்க மனமின்றி விருட்டென வெளியேறினாள்.

கன்னத்தை கையால் பற்றிக் கொண்டு கோபத்தோடு சீறிய ஸ்ரீராமைக் கண்டு மிரண்டு போய் அமர்ந்திருந்த சுஜாதாவை பார்த்ததும் மனம் கனிந்தான் ஸ்ரீராம். தனது இயல்பான புன்னகையை இதழில் படரவிட்டுக் கொண்டு, ''ஹாய் சுஜாக்குட்டி! பயந்துட்டியா. உன்னை அடிச்சாங்கல்ல. அதான் திட்டினேன். சரிசரி. உன்னைப் பார்க்க ஒரு முக்கியமான கெஸ்ட் வந்திருக்காங்க. யார்னு பாரு''-என்றவாறு சந்துருவை முன்னே இழுத்து நிறுத்தினான் ஸ்ரீராம்.

சுஜாதாவின் முகம் சட்டென இயல்பான குழந்தை தனத்திற்கு மாறியது. ''ஹய்யோ! சஞ்சய் ராமசாமி மாதிரியே இருக்கிறாரே. யார் டாக்டர் இவரு. சூர்யாவோட ரிலேஷனா?''

''அதுயார் சஞ்சய் ராமசாமி?''- குழப்பமாய் ஸ்ரீராம் கேட்க, ''ஐயோ டாக்டர் உங்களுக்கு ஒன்னுமே தெரியல்ல''-என்றவள் ''ஏன் சூர்யா சார் உங்களுக்கு தெரியமா''-என சந்துருவை பார்த்துக் கேட்டாள்.

கருகருவென மினுமினுப்பாய் அலைந்த கண்களை ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருந்த சந்துரு கேள்விக்கணை தன்புறம் திரும்பியதும், ''பின்னே! அவரை தெரியாம இருக்குமா. ஆனா ஒரு டவுட். பத்து நிமிஷத்துல மறந்துபோயிடுவாரே அந்த சஞ்சய் ராமசாமியா? இல்லே ஒரு மாலை இளவெயில் நேரம் பாடுவாரே அந்த சஞ்சய் ராமசாமியா? நான் யார் மாதிரி இருக்குறேன்னு சொல்லலியே நீங்க''-என தனது அடர்ந்த தலைமுடியை வருடியவாறே கேட்டான் சஞ்சய்.

''அச்சச்சோ! உங்களைப்போய் மொட்டைத் தலை ராமசாமியோட ஒப்பிடுவேனா. நீங்க பிளாஷ்பேக் சூர்யாதான். ஆனா இந்த கம்பீரமான பேச்சு அப்படியே விஷால்தான்.''

''பார்த்தீங்களா! பேச்சுவாக்கில என்னை கருப்புன்னு சொல்லிட்டீங்களே. வாட் எ ஷேம் வாட் எ ஷேம்''- போலியான வருத்தத்துடன் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டான் சந்துரு. ''அய்யோ! நான் அப்படிச் சொல்லல.''- என பதறிய சுஜாதா மேலும் சில நடிகர்களின் பெயர்களை இழுத்து அவனை சமாதானம் செய்ய ஒரு நிம்மதி பெருமூச்சோடு அவர்கள் இருவரின் விவாதத்தையும் ரசித்துக் கொண்டிருந்தான்.

ஸ்ரீராம். மனதின் பெரும்பாரம் நீங்கிய உணர்வு. இனி சுஜாதாவைப் பற்றிய பயம் வேண்டாம். சந்துரு பார்த்துக் கொள்வான் நிச்சயம் சுஜாதாவை மணக்க சம்மதித்து விடுவான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை வந்தது. அந்த நேரம் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்த சுஜாதாவின் அம்மாவை அப்படியே வெளியே இழுத்துக் கொண்டு வந்தான்.

''இதோ பாருங்க மதுரம்மா! கொஞ்ச நேரம் இங்கேயே இருங்க. சுஜாதாவும் சந்துருவும் மனம் விட்டு பேசட்டும். இவன் என்னோட பிரண்ட். அவன் கிட்ட சுஜாதாவைப் பற்றி எல்லாம் சொல்லப்போறேன். அவன் சம்மதிச்சா உங்க மருமகன் ஆயிடுவான். எதற்கும் உங்க மருமகனை நல்லா பார்த்துக் கொள்ளுங்கள்'' -என்றவாறு கதவை மெலிதாக திறந்து காண்பித்தான்.

அந்த நேரம் சுஜாதா ஏதோ ஜோக்கடித்திருக்க வேண்டும். சந்துரு அடக்க முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தான். அதில் அவனது அழகு பல மடங்கு கூடி விட பார்த்த நொடியிலேயே அவனை மிகவும் படித்து விட்டது மதுரத்திற்கு. ஆனால்... ஸ்ரீராமை கலக்கமாய்ப் பார்த்தாள்.

''ஐயா! இந்த புள்ள பெரிய பணக்கார வீட்டுப் புள்ளையாட்டம் தெரியுதே. அது எப்படிய்யா இந்த ஏழை வீட்ல அது இந்த நிலமையில இருக்கிற எம்பொண்ணை கட்டிக்க சம்மதிக்கும். இதெல்லாம் நடக்கிற காரியமா''- மதுரத்தின் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

''நடக்கும். நிச்சயமா நடக்கும். அதுக்கு முன்னாலே நான் சொல்றத



கேட்டுட்டு உங்க முடிவைச் சொல்லுங்க''- என்றவாறு சந்துருவின் நிலை பற்றி தெளிவாகச் சொல்லி முடித்தான். அமைதியாக அனைத்தையும் கேட்க மதுரம் சிறிது நேர அமைதிக்கு பிறகு ''சரிதம்பி! ஆனா இதுக்கு அந்த தம்பி ஒத்துக்குமா''- என்றாள்.

''அதுக்குத்தாம்மா! இப்ப இவனை இங்க கூட்டிட்டு வந்தேன். பரஸ்பரம் ரெண்டு பேரும் பேசிக்கட்டும். நான் சந்துருகிட்ட எல்லாம் தெளிவா பேசிட்டு இன்னும் ரெண்டு நாள்ல முடிவை சொல்றேன். சுஜாவும் ஓரளவு தெளிஞ்சிட்டா. கொஞ்சம் விளையாட்டுத் தனம் தான் இருக்கு. அது கூடவே பொறந்த குணம். ஸோ. அது ஒன்னும் பிரச்சனை இல்லை. அவகிட்டயே கூட பேசி முடிவு பண்ணிடலாம்.

எது நடந்தாலும் சீக்கிரமா நடக்கணும். ஏன்னா சுஜாவோட குழந்தை பொறக்கிறப்போ சந்துருவோட குழந்தையாத்தான் பொறக்கணும். சரி வாங்க போலாம். இப்ப எதையும் சுஜாகிட்ட காட்டிக்க வேணாம்''-என்று கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தான். பின்னாலேயே மதுரமும் முந்தானையை தோள்வரை போர்த்திக் கொண்டு வந்தாள்.

''அப்போ நீங்களும் என்னை மாதிரியே நிறைய படம் பார்ப்பீங்களா சூர்யா சார்''.

''நிறைய்ய! மலேஷியாவில என் வீட்டில வந்துபார். எல்லா தமிழ் பட சிடியும் குவிஞ்சிகிடக்கும். தியேட்டருக்கும் போய் எல்லா புதுப்படமும் பார்த்திடுவேன் தெரியுமா''

''ஏதேது! நீங்களே பேசிட்டு இருந்தா போதுமா. நான் ஒருத்தன் எவ்வளவு நேரமா நிக்கறதாம்''-ஸ்ரீராமின் சலிப்பான குரலில் இருவரும் திரும்பினார்கள். ''ஐயோ! டாக்டர் உங்களை மறந்தே போயிட்டோமே. சரி எனக்கு ஊசி போடுங்க''-என்றவாறு கையை காட்டியவளை ''குட்'' என பாராட்டியவாறு வேறு சிரிஞ்சில் மருந்தை ஏற்றி ஊசியை சொருகினான்.

எப்போதும் போல் அழவோ, சிணுங்கவோ இல்லை. ''டாக்டர் சார் இந்த ஜூனியர் டாக்டரை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு.

இவர் உங்களை மாதிரி இல்லை. என்னை மாதிரியே எல்லா விசயமும் தெரிஞ்சிருக்கு. நல்லா கலகலன்னு பேசுறாரு. தினமும் கூட்டிட்டு வர்றீங்களா''- ஊசிபோட்ட இடத்தை தேய்த்து விட்டுக் கொண்டே கேட்டாள் சுஜாதா.

''தேசம் என்ற பெயரில் ஒரு படம் எடுத்தீங்களே என்னாச்சு..?''

''மழை வெள்ளத்தால் செட் அடித்து செல்லப்பட்டு நிறைய பொருட் சேதம் ஏற்பட்டு தயாரிப்பு நிறுத்தப்பட்டுவிட்டது.''

- ராமலிங்கம், தூத்துக்குடி-



''போச்சுடா. அடப்பாவி வந்த ஒரே நாள்ல என்னோட ரசிகையை உன் பக்கம் சாய்ச்சிட்டியே. அப்படி என்னடா செய்தே! இந்தப் பொண்ணுங்களை மட்டும் நம்பவே கூடாதுப்பா. எப்போ யார் பக்கம் சாய்வாங்கன்னு சொல்ல முடியல்ல''- ஸ்ரீராமின் வருத்தமான முகத்தைப் பார்த்து பதறினாள் சுஜாதா.

''அய்யோ! அப்படியெல்லாம் சொல்லாதீங்க டாக்டர். நீங்கதான் என்னோட கடவுள். என் உயிரை காப்பாத்தின கடவுள். என்னை தேற்றின கடவுள். உங்களை என் வாழ்நாள் முழுக்க நான் மறக்க கூடாது. அப்படி மறந்தா நான் மனுஷியே இல்ல. நீங்க மட்டும் இல்லேன்னா எங்க அம்மா என்னை அடிச்சே கொன்னுட்டு அவங்க உயிரையும் மாய்ச்சிருப்பாங்க. உங்களைப் போய் நான் மறப்பேனா.

நீங்க என் தெய்வம் டாக்டர்''-சுஜாவின் கண்கள் கண்ணீரால் நிறைந்தது. நெகிழ்ந்து போனான் ஸ்ரீராம். சூழ்நிலையை கலகலப்பாக மற்ற, ''தெய்வமே! தெய்வமே! நன்றி சொல்வேன் தெய்வமே''- என இருகரங்களையும் தலைக்கு மேல் தூக்கி சந்துரு ஸ்ரீராமை நோக்கி பாட கண்ணீரோடு குலுங்கிச் சிரித்தாள் சுஜாதா. அவளைப் பார்த்து மற்றவர்கள் சிரிக்க மீண்டும் சூழல் இனிமையானது.

''சரி. நாங்க கிளம்பறோம். நிறைய வேலை இருக்கு சுஜா. நீ ஆசைப்பட்ட படியே நாளைக்கும் இவர் வருவாரு. என்னடா வருவேல்ல''.


''கண்டிப்பா. சுஜாவோட பேச்சு என்னை எப்படியும் இழுத்துட்டு வந்துடும். பை சுஜா. வரட்டுமா''-சந்துரு கை அசைக்க சுஜாவின் முகம் பூவாய் மலர்ந்தது.

17

**வாழ்வோடு வளர்பிறை**
**தானே வண்ண நிலவே**
**வானோடு நீலம் போல இழைந்து**
**கொண்டது இந்த உறவே உறங்காத**
**நேரம் கூட உந்தன் கனவே**
**ஊனோடு உயிரைப்போல உறைந்து**
**போனது உந்தன் நினைவே!**

''அம்மா! உங்களைப் பார்க்க டாக்டரம்மா வந்து இருக்காங்க''-என்ற வள்ளியம்மையின் குரலால் பூஜையறையை விட்டு வெளியே வந்தாள் அம்பிகை. முகத்தில் கேள்விக்குறி. உமாவா? அவள் எதற்காக இந்த நேரத்தில் வந்திருக்கிறாள். படபடக்கும் இதயத்துடன் ஹாலை நோக்கி வந்தாள். ஹால் சோபாவில் அமர்ந்து எதிரே பெரிய பிரேமிற்குள் லேசான சிரிப்போடு தலைசாய்த்து நின்ற ஸ்ரீராமை வெறித்துக் கொண்டிருந்தாள் உமா, இது என் வீடு. நீ என் ஸ்ரீராம். ஹாலில் இப்படியா பெரிய போட்டோவை மாட்டுவது. கண் திருஷ்டி பட்டுவிடாது. நான் வந்த உடன் முதல்வேலை இதை நம் அறைக்கு ஷிப்ட் பண்ணுறது தான். இங்கே நமது ஜோடி போட்டோ இருக்கும். ஓ.கே. மனதிற்குள்





முடிவு செய்தவள் அருகில் நிழலாடுவதைக்கண்டு எழுந்தாள். ''குட் ஈவினிங் ஆன்ட்டி! எப்படி இருக்கீங்க. இந்தாங்க.'' என்றவாறு கையில் இருந்த பழங்கள் அடங்கிய கவரைக் கொடுத்தாள். சங்கோஜத்துடன் வாங்கிக் கொண்ட அம்பிகை. ''இதெல்லாம் எதுக்கும்மா? சும்மா வர வேண்டியது தானே. வள்ளி! காபி டிபன் எடுத்துண்டு வா''-என உள் நோக்கி குரல் கொடுத்தாள்.

காபி வந்து குடித்து முடிக்கும் வரை அமைதியாக கழிந்தது. அம்பிகை அன்றுதான் முதன் முதலாக பார்ப்பது போல் உமாவைப் பார்த்தாள். பல வருடங்களாக பார்த்து பழகிய முகம் தான் என்றாலும், இப்போது கொஞ்சம் முதிர்வு தெரிந்தது என்றாலும் ஒப்பனையால் அதை மறைத்திருந்தாள். ஸ்ரீயின் கிளாஸ்மேட் என்பதால் எப்படியும் ஸ்ரீவயது தான் இருக்கும். ஆணுக்கு முப்பத்தி மூன்று வயது பெரிதல்ல என்றாலும் பெண் இந்தப்பருவத்தில் இரண்டு குழந்தைக்கேனும் தாயாகி இருக்க வேண்டிய வயதல்லவா?. உடம்பை கட்டுகோப்பாக வைத்திருந்த போதும் தலையில் செவியோரம் ஒரு சில முடிகள் நரைத்திருக்கிறதோ. இல்லைதனது கண்கள் தான் ஒளி குறைந்து விட்டதா. நிமிர்ந்து நடந்து பழகியதில் உட்கார்ந்திருந்த நிலையிலும் ஒரு நிமிர்வு தெரிந்தது. மற்றபடி வேறு எந்தக் குறையும் சொல்ல முடியாத அழகிதான். படிப்பு, பதவி, பணம் அழகு என எல்லாம் நிறைந்திருந்தும் இவள் ஏன் மணம்புரியாமல் இருக்கிறாள். ஒரு வேளை... ஒரு வேளை.. ஸ்ரீ ஜானகியை வேண்டி தவமிருந்தது போல் இவளும் ஸ்ரீராமிற்காக தவமிருக்கிறாளோ என்ற எண்ணம் தோன்றிய உடன் மனம் அதை மறுத்தது.

இல்லை. அப்படி இருக்காது. அப்படி இருந்தால் எப்போதே தெரிந்திருக்கும். இவளது அப்பா கூட அவராகவே தான் சம்மந்தம் பேசவந்தாரே தவிர உமா விரும்புவது பற்றி எதுவும் கூறவில்லையே. ஒரு வேளை அப்படி எதுவும் இருந்துவிட்டால்... மனதிற்குள் பட்டிமன்றம், தாறுமாறாய் நடந்து கொண்டிருக்க,

''ஸ்ரீராம் வரலியா ஆண்ட்டி''- மவுனத்தை கலைத்தாள் உமா. ''இல்லியேம்மா! அவன் என்னிக்கு இவ்வளவு சீக்கிரம் வந்திருக்கான். எப்படியும் பதினொரு மணி தாண்டிடும். சரி! நீ அங்கிருந்து தானே வந்திருப்பே. அவன் அங்கே இல்லியா''-அம்பிகையின் கேள்வியில் சட்டென சுதாரித்தாள் உமா.

''இல்லம்மா! நான் உங்களைப் பார்க்கணும்னு பர்மிஷன் போட்டுட்டு சீக்கிரம் வந்திட்டேன். அம்மா! உங்ககிட்ட நான் முக்கியமான விசயம் பேசணும் பேசலாமா.''

துடிக்கும் இதயத்துடன் தலையாட்டினாள் அம்பிகை. ''சொ. சொல்லும்மா! என்ன விசயம்?''

ஒரு நிமிடம் ஸ்ரீராமின் போட்டோவை பார்த்தவள், ''அம்மா! ஐ லவ் ஸ்ரீ.''-திக்கென நிமிர்ந்தாள் அம்பிகை. அதைக் கவனியாமல் புகைப்படத்தில் இருந்த ஸ்ரீராமின் மேல் வைத்த விழியை நகர்த்தாமல், ''யெஸ் ஆன்ட்டி! ஐ லவ் ஸ்ரீ. ஐ லவ் ஸோமச். இது இப்பவந்த ஆசை இல்லம்மா. காலேஜ் டேஸ்லயே வந்த ஆசை அப்ப இருந்தே என் மனசு நிறைய ஸ்ரீதான் இருக்கார். அவரைத் தவிர வேற ஒருத்தரை என்னால கணவரா



ஏத்துக்க முடியல்ல. அதனால தான் வந்த மாப்பிள்ளையை எல்லாம் வேண்டாம்னு ஒதுக்கினேன். கடைசியா அப்பாகிட்ட எம்மனசை சொல்லி உங்கக்கிட்ட பேசச்சொன்னேன். ஸ்ரீ மனசில எப்படியும் நான் இருப்பேன்னு எனக்குத் தெரியும். ஆனா ஸ்ரீ லேசில பேச மாட்டார். அதனால தான் நான் அப்பாவை அனுப்பினேன். ஆனா நீங்க ஸ்ரீகிட்ட கேட்டுட்டு பதில் சொல்றேன்னு சொன்னீங்களாம். ஆனா இதுவரை எந்த பதிலும் உங்ககிட்ட இருந்து வரல்ல. அதான் நேர்லே பார்த்து பேசிடலாம்னு வந்தேன். ஏம்மா உங்களுக்கு என்ன பிடிக்கலியா. நான் உங்களை என் அம்மாவா நினைக்கிறேன். தயவு செய்து என்னை ஏத்துக்கங்கம்மா. பிளீஸ்! ஸ்ரீ இல்லாம என்னால வாழ முடியாது. இதை நீங்கத்தான் ஸ்ரீகிட்ட சொல்லி புரியவைக்கணும். என்னதான் பிடிச்சிருந்தாலும் ஸ்ரீகூடவே இருந்தாலும் என்னால இதையெல்லாம் ஸ்ரீகிட்ட பேச முடியல்ல. அவருகிட்ட ஒர்க்கிங் ஹவர்ஸ்ல பேச முடியாது. வீட்டுலயும் பார்க்க முடியாது. லோ! எம்மனசை அவர்கிட்ட சொல்ல வாய்ப்பே கிடைக்கலை. இப்பக்கூட நான் ஏன் வந்து சொல்றேன்னா, இன்னிக்கு மார்னிங்ல இருந்தே ஸ்ரீ சரியில்ல. ஏதோ ஒரு பொண்ணை அட்மிட் பண்ணியிருக்காரு. அவ மேல ரொம்ப அக்கறையா இருக்கிறதைப் பார்த்தா எனக்கு ரொம்ப பயமா இருக்கு. அதோட ஒரு நாளும் கோபமே படாத ஸ்ரீ இன்னிக்கு ரொம்ப திட்டிட்டாரு. தப்பு எம்மேலயும் தான் மறுக்கலே. ஆனா அவ்வளவு கோபம் ஏன் வந்ததுன்னு எனக்கு புரியலே. ஒருவேளை எனக்கும், ஸ்ரீக்கும் நடுவிலே வேற யாரும் வந்திடுவாங்களோன்னு பயம்மா இருக்கும்மா. பத்து வருஷத்துக்கும் மேல நான் ஸ்ரீயை நேசிக்கிறேன். ஆனா நேற்று வந்த யாரோ என்னோட ஸ்ரீயை பறிச்சிடுவளோன்னு முதல் முறையா பயம் வந்திடுச்சிம்மா. ஸ்ரீ இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால நினைச்சு கூட பார்க்க முடியாது. என் வாழ்க்கையே உங்க கையில தான் இருக்கு. நீங்க தான் ஸ்ரீகிட்ட பேசி இதுக்கு ஒரு முடிவு பண்ணனும். மாட்டேன்னு சொல்லிடாதீங்கம்மா. நீங்க சொன்னா ஸ்ரீ நிச்சயமா மறுக்கமாட்டார். நீங்க தான் அவரை ஒத்துக்க வைக்கணும். பிளீஸ்மா என் வேதனை உங்களுக்கு புரியுதா. என்னை ஸ்ரீ கூட சேர்த்து வைப்பீங்களா''-மண்டியிட்டு கேட்டவளை தவிப்பாய் பார்த்தாள் அம்பிகை.

''இது தான் சுஜாதாவோட கதை. இப்பச் சொல்லு சுஜா மேல தப்பு இருக்கா. அவளை நாம வெறுத்து ஒதுக்க முடியுமா சொல்லு''-ஸ்ரீராம்

''என் மனைவிக்கு வாய்க்கு வாய் கைக்கு கை..''

''அவ்வளவு சாமர்த்திய சாலியா?''

''ஆமாம் என்னை திட்டி... அடிக்கி றதிலே...!!''

- ராஜி ராதா.



கேட்க சந்துரு சிலையாய் அமர்ந்திருந்தான்.

என்ன கொடுமை இது? ஒன்றும் அறியாத அந்தக் குழந்தைப் பெண்ணை ஏமாற்ற எப்படி மனம் வந்தது அவனுக்கு? மனிதனா இல்லை மிருகமா. ஸ்ரீ அழைத்து சென்ற இடத்தில் வயிற்று பிள்ளையுடன் இருந்த பெண் ஏதோ மனபாதிப்பிற்குள்ளானவள் என்று தான் நினைத்தான். அதனாலயே சந்துரு இயல்பாய் பேசி விளையாடினான். ஸ்ரீ சொல்வது உண்மையென்றால் ஐயோ! அந்தப் பெண்ணின் நிலை.

''என்னடா நான் பாட்டுக்கு கேட்டுட்டு இருக்கேன். நீ எதுவுமே சொல்லாம கனவு கண்டுட்டு இருக்கே. என்ன சுஜா நினைப்பா?''-ஸ்ரீயின் கிண்டலான கேள்விக்கு அமைதியா பதிலளித்தான் சந்துரு.

''ஆமா! சுஜாவோட நினைப்புத்தான். இனிமே அந்தப் பெண்ணோட எதிர்காலம் என்ன ஆகும்.''-அவனது குரலில் தெரிந்த வேதனையை உணர்ந்த ஸ்ரீ, ''ஏன் சந்துரு. நீ அந்தப் பெண்ணை ஏத்துக்க மாட்டியா''-எனக்கேட்டான்.

''ஸ்ரீ என்ன சொல்றே!''- இருக்கையை விட்டு எழுந்தே விட்டான் சந்துரு. ''ஏண்டா! எவனோ கெடுத்த பெண்ணை நான் கல்யாணம் பண்ணனுமான்னு கேட்கப்போறியாடா''-என்ற ஸ்ரீயை அவசரமாக இடைமறித்தான்.

''ச்சேச்சே! அப்படி இல்லடா. என்னோட குறிக்கோளே ஏதாவது விதவைக்கோ ஆதரவற்ற பெண்ணுக்கோ வாழ்க்கை கொடுக்கணும்றது தான். ஆனா அது அப்போ. இப்போ என்னோட நிலமையைப் பத்தி யோசிச்சியா. நான் போயி எப்படிடா அந்தப் பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்க முடியுமா? இது துரோகம்டா? என்னால. என்னால எப்படி அந்தப் பொண்ணை சந்தோஷமா வாழ வைக்க முடியும். நோ. என்னால முடியாது. பிளீஸ். என்னை விட்டுடு'' முகத்தை கைகளால் மூடிக்கொண்டான் சந்துரு.

அவனருகில் வந்து தோளோடு அணைத்துக் கொண்டான் ஸ்ரீ. ''டேய் சந்துரு. உன்னையே ஏன் குறைச்சுக்கிறே. ஸ்ரீ ஒரு ஜெம்டா. இந்தக் காலத்தில் உன்னை மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைப்பதே கஷ்டம்டா. உனக்கு என்ன குறை. ஒரு குழந்தைக்குத் தானே தகப்பனாக முடியாது. மற்றபடி எல்லா சுகமும் உன்னால தர முடியும். இப்ப அவ வயித்தில வளர்ற குழந்தை அவளோட குழந்தை. அவளை நீ மணந்தா அது உன் குழந்தை. தான் எப்படி ஏமாந்தோம்னே தெரியாத குழந்தை உள்ளம். இப்ப அவளை நாங்க முழுமையா குணமாக்கிட்டோம். அவ தெளிவா இருக்கா. ஆனாலும் ஏன் ட்ரீட்மெண்ட் தொடருதுன்னா இப்ப அவளோட ஹெல்த் கண்டிஷன் அப்படி. ஒரு குழந்தையை தாங்குற அளவுக்கு அந்த பெண்ணுக்கு கர்ப்பபையில சக்தி இல்ல. ரொம்ப பலவீனமா இருக்கு. அதே சமயம் அது கலைக்கிற ஸ்டேஜையும் தாண்டிடுச்சி. இனிமேல் ஏதாவது செய்தா அது அந்தப் பொண்ணோட உயிரையே பறிச்சிடும். இதெல்லாம் அந்தப் பொண்ணுக்கு தெரியப்படுத்தாம அவளுக்கு சத்துமாத்திரைகளையும் ஊசிகளையும் போட்டு தேத்திக்கிட்டு வர்றோம். இந்தக் குழந்தைக்கு அப்புறம் இன்னொரு குழந்தை பெத்துக்கு முடியுமான்றது சந்தேகம் தான். பட் இந்தக் குழந்தை ஸேஃபா பொறந்திடும். அதனால உனக்கு



எந்தக் குற்ற உணர்ச்சியும் வேண்டாம். ஒரு குறையை இன்னொரு குறையோடு சேர்த்து நிறைவாக்கினால் என்ன? நான் சுஜாவோட நிலையை எண்ணி வருந்தாத நாளே இல்லை. ஆனா எப்ப உன்னோட குறையை நீ சொன்னியோ அப்ப எடுத்த முடிவு தான் இது. இதை கண்டிப்பா ஒத்துக்கணும்னு இல்லடா. என்னோட கருத்தைச் சொன்னேன். ஏன்னா உன்னோட நிலையை அம்மாகிட்ட சொல்ல முடியாது. சொல்லாம உன் கல்யாணத்தில இருந்து நீ தப்பிக்கவும் முடியாது. கல்யாணமும் செய்துக்க கூடாதுன்னு சொல்றே. அம்மாவும் உயிரை விடுறதா மிரட்டுறதா சொல்றே. என் ஐடியா நீ சுஜாவ கட்டிக்கிட்டா அத்தனை பிரச்சனையும் தீர்ந்திடும். இல்ல உனக்கு எதுவும் ஐடியா இருந்தா சொல்லு'' முடிவை அவனிடம் விட்டுவிட்டு தன் இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டான்.

வெகுநேரம் அமைதியாக நின்று கொண்டிருந்த சந்துரு ஒரு முடிவுடன் அமர்ந்தான். தன்னை சற்று நிதானப் படுத்திக் கொண்டு, ஸ்ரீயை நேராகப் பார்த்து ''சரிடா! எனக்கு பரிபூரண சம்மதம். நான் சுஜாவை மனப்பூர்வமா ஏத்துக்கிறேன். ஆனா இதுக்கு சுஜா அவங்க அம்மா ஒத்துப்பாங்களா. அப்படியே ஒத்துக்கிட்டாலும் சுஜாவை இந்த நிலையில எப்படி என் அம்மாவிடம் காட்டுவது. எப்படி கல்யாணம் செய்வது எப்படி? மற்றவர்களிடம் அறிமுகம் செய்வது. என்ன ஏது என கேட்பவர்களிடம் எப்படி பதில் சொல்வது''-புரியாமல் கேட்டான்.

''தேங்க்ஸ்டா மாப்பிள்ளை. நீ சம்மதிச்சே போதும். மத்ததை நான் பார்த்துக்கிறேன். இப்ப நான் சொல்றதை மட்டும் செய்''-ஸ்ரீ உற்சாகமாக சொல்லத் தொடங்கினான்.

தன் முன் மண்டியிட்டு கெஞ்சியவளை பதை பதைப்புடன் பற்றி எழுப்பி தன் அருகில் அமர வைத்தாள் அம்பிகை. எவ்வளவு பெரிய கோடீஸ்வரனின் மகள். தன் காலில் விழுந்து தன் மகனைக் கேட்கிறாள். நிச்சயம் இவள் தன் மகனுக்கு நல்ல மனைவியாக இருப்பாள். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஸ்ரீராம் மனதில் வேறு ஒருவள் அழுத்தமாக குடி கொண்டிருக்கிறாளே? என்ன செய்வது? இதற்கு முன்பு வந்து இவள் தன் மனதை சொல்லியிருந்தாலாவது மகனிடம் வாதாடியிருக்கலாம். எத்தனை வருடங்களாக தேடிய பொக்கிஷம் கைக்கு கிடைத்தாற்போல் காலையில் அவன் முகத்தில் எத்தனை பூரிப்பு. ஆனந்தம். ஆத்ம திருப்தி. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக எப்படி அழிக்க முடியும்? பெற்ற பிள்ளையாக இருந்தாலும் திருமணம் என்பது அவன் விருப்பம் தான். அவனது மனம்போல் வாழ்க்கை அமைந்தால் தானே இந்த வீட்டில் சந்தோஷமும் உற்சாகமும் பொங்கும். அதில் தானே எப்படி நெருப்பை அள்ளி வீச முடியும். அந்த ஜானகி ஏழையோ, பணக்காரியோ யாராக இருந்தாலும் தன் மகனை ஆட்கொண்டவள். தன் மகனின் இதய தேவதையாக குடி கொண்டவள். அவள் தான் இந்த வீட்டுக்கு மகாராணியாக வரவேண்டும். ஆனால் இவள் பேச்சு வேதனைப்படுத்துகிறதே. இவளிடம் மேலும் மூடி மறைத்தால் அவளாக ஏதேனும் ஆசையை வளர்த்துக் கொண்டே இருப்பாளே. அது மிகப்பெரிய தவறு. ஆசையோ கோபமோ அதை அதிகம் வளரவிட்டால் ஆபத்து. எதையும் முதலிலேயே

அடக்கிஆள கற்றுக் கொள்ள வேண்டும். இவளிடம் தன் மகனின் காதலைச் சொன்னால் எப்படி ஏற்றுக் கொள்வாள்? சாதாரணமாக.

ஏற்றுக் கொள்வாளா? இல்லை தன் மகனிடம் விரோதம் கொள்வாளா? இல்லை சினிமாக்களில் வருவது போல் ஜானகியையே கொல்லும் அளவிற்கு போய் விட்டால்... ஜானகி மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்து அந்தத் திட்டத்தை முழுமையாக கைவிட்டாள் அம்பிகை. முதலில் இப்போதைக்கு எதையாவது சொல்லி இவளை அனுப்ப வேண்டும் என்ற முடிவுடன் இதோ பாரும்மா! நீ கலங்காதே. யார் யாருக்கு யாருன்னு ஆண்டவன் போட்ட முடிச்சு இருக்கு. அதுல உனக்கு ஸ்ரீராம்னு இருந்தா கண்டிப்பா நடக்கும். ஆனா என்னால எம்பிள்ளையோட முடிவு தெரியாம எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. அவன் வரட்டும் நான் பேசுறேன். அதோட அவன் வீட்ல இருக்கும் போது உனக்கு நான் போன் பண்றேன். உன் எதிரிலயே பேசுவோம். அவன் முடிவு எதுவா இருந்தாலும் நீ ஏத்துக்கணும் சரியா. இடிஞ்சு போயிடக்கூடாது. கோபக்கூடாது. சம்மதமா ?என்றாள்.

அந்த அளவுக்கு எதுவும் ஆகாது ஆன்ட்டி. ஸ்ரீ நிச்சயம் சம்மதிப்பார். பட் எனி வே! நீங்க சொன்ன ஐடியா எனக்கும் பிடிச்சிருக்கு. ஸ்ரீயோட வாயால முடிவு தெரிஞ்சா எனக்கும் பரம திருப்தி. இப்ப தான் என் மனசு ரிலாக்ஸா இருக்கு. இனிமே தைரியமா இருப்பேன். ஸ்ரீ இருக்கும் போது எனக்கு போன் பண்ணுங்க. ஆன்ட்டி. நான் போயிட்டு வர்றேன். பை - என்றவாறு உற்சாகமாகவும் நம்பிக்கையோடும் சென்றவளை மனதில் தோன்றிய பயத்தோடும் கலக்கத்தோடும் பார்த்துக் கொண்டே இருந்தாள் அம்பிகை.




**ஆகாய மேகம் அழுகின்றது - அதில்**
**உந்தன் கண்ணீர் ஏன் விழுகின்றது**
**அன்பே என் அன்பே நீ அழுவது கூடாது**
**காவல் நான்தானே நீ கலங்கிடக் கூடாது**

சந்துருவை அனுப்பிவிட்டு உற்சாகமாய் ரவுண்ட்ஸ் போய் விட்டு தன் அறைக்குத் திரும்பிய போதுதான் ஸ்ரீக்கு உறைத்தது. சட்டென மணிக்கட்டை திருப்பி வாட்சைப் பார்த்து பதறிப்போனான். மைகாட்! மணி ஆறு. எப்படி மறந்துப் போனேன். ஜானகியை. ஐயோ பசியால் துடித்திருப்பாளே. பரபரவென சாவியை எடுத்து கதவைத் திறந்து உள்ளே ஓடினான். முகம் கழுவி தலையை ஒழுங்காக வாரி ஜன்னல் கதவை திறந்து அதில் முகத்தை பதித்திருந்தாள். ஸ்ரீ அருகில் வந்த சலனம் கேட்டு திரும்ப வில்லை. கீழே தெரிந்த சாலையில் பார்வை வெறித்திருந்தது. முகம் சோர்ந்து போயிருந்தது. காலையில் வைத்து விட்டு போன பழங்கள் அப்படியே இருந்தன.

அவளருகே சென்று மெல்லிய குரலில் ஜானு- என்றான். சட்டென திரும்பினாள். அந்த கண்கள் கலங்கியிருந்ததோ. பளிச்சென சிரித்தாள். வந்திட்டியா ஸ்ரீராம். எவ்வளவு நேரம் வெயிட் பண்றது. அப்படியே விட்டுட்டு போயிட்டியே. எனக்கு எவ்வளவு பசிக்குது தெரியுமா? - அந்த



பரிதாப முகத்தில் அந்தக் குரலில் சட்டென உடைந்து போனான். சட்டென அந்த முகத்தை தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். ''ஸாரிடா செல்லம்! ஸாரி.. ஸாரி. நான் ஒரு மடையன். வேலைன்னு வந்தா எல்லாத்தையும் மறந்துடுவேன். ஆனா உன்னை மறக்கலாமா? ஐயோ! கடவுளே! எப்படி மறந்தேன். ஸாரிடா குட்டி. என்னை மன்னிச்சிரும்மா. ஒரு செகண்ட். இதோ இப்ப சாப்பாடு வந்துடும். பிளீஸ் ஒன் செகண்ட்''- என்றவன் அவளிடமிருந்து விலகி தனது செல்போனை உயிர்பித்து யாருக்கோ கட்டளை இட அடுத்த பத்தாவது நிமிடம் ட்ரேயில் சூடான உணவு வகைகளை பரப்பிக் கொண்டு கேன்டீன் பாய் வந்து மணியடிக்க அதுவரை இருப்புக் கொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தவனை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானகி.

அழைப்பு மணியடித்ததும் விரைந்து சென்று கதவைத் திறந்து சாப்பாட்டு டிரேயை உள்ளே இழுத்துக் கொண்டு முக்கியமான கெஸ்ட் வந்திருக்காங்க. யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு நர்ஸ்கிட்ட சொல்லிட்டு போ- என்று கூறி விட்டு அவன் பதிலுக்கு காத்திருக்காமல் கதவை பூட்டினான். உள்ளே சென்று சூடான சப்பாத்தியை பிளேட்டில் வைத்து குருமாவை ஊற்றி அவளிடம் கொடுத்தான். மறுவார்த்தை பேசாமல் மளமளவென சாப்பிட்டாள் ஜானகி. எவ்வளவு பசியோடு இருந்திருக்கிறாள். அவள் மறுக்க மறுக்க தட்டில் மூன்று இட்லியை வைத்து சாம்பார் ஊற்றினான். சட்னியை ஊற்றினான். '' ஐயோ சாமி போதும்மா. இது வயிறா. இல்லை குப்பைத் தொட்டியா'' என தட்டை அவனிடமே தந்து விட்டு எழுந்து கைகழுவி விட்டு வந்து வயிறு முட்ட தண்ணீர் குடித்தாள். அப்பா வயிறு புல் ஸ்ரீ. ஆமா நீ சாப்பிட்டியா - ஜானகியின் கேள்வியில் தான் தானும் இன்னும் சாப்பிட வில்லை என்பதை உணர்ந்தான் ஸ்ரீராம். சந்துருவின் திருமண விஷயம் தனது பசியை மறக்கடித்திருந்தது.

தட்டில் சாப்பாட்டை வைத்து அவன் முன் நீட்டினாள்.'' இந்தா சாப்பிடு- என்றவளை நம்பமுடியாமல் பார்த்தான் ஸ்ரீ.

என்ன பார்க்கிறே. நீ சாப்பிடலான்னு உன் முகமே சொல்லுது சாப்பிடு - என்றாள் அக்கறையோடு.

புன்சிரிப்போடு அதை வாங்கி சாப்பிட ஆரம்பித்தான். கண்ணாடி டம்ளரில் நீரை ஊற்றியவாறே ஸ்ரீராம் நீ கூட எனக்கு ஒரு அம்மாதான்-

''மீன் சாப்பிட்டால்
கண்ணுக்கு நல்லது''
''சாப்பிடாவிட்டால்''
''மீனுக்கு நல்லது''
-ஆரணி தமிழ்செல்வம்.



என்றாள்.

"ம்? சாப்பிடுவதை நிறுத்தி அவளை ஏறிட்டான்.

ஆமான்டா! நான் பசியோட இருந்தா எங்க அம்மா தவிப்பாங்களோ அப்படித்தான் இப்ப நீ தவிச்ச. உடனே எங்க அம்மா நினைப்பு வந்திருச்சி தெரியுமா? அதான் சொல்றேன் நீயும் எனக்கு அம்மாதான்.

நெகிழ்ந்து விட்டான் ஸ்ரீ. அம்மா வா மட்டுமில்லாம உனக்கு எல்லாமா நானே இருக்க ஆசைப்படுறேன் ஜானகி. நீ மட்டும் உன் மனசை திறந்து பேசினா எல்லாம் தெளிவாயிடும். எப்போ உன்னை முதன் முதலா பார்த்தேனோ அப்போ இருந்தே நீதான் என் வாழ்க்கைன்னு இத்தனை வருஷமா உனக்காக காத்திட்டு இருக்கேன் ஜானகி. அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஒரு அருமையான மாலைநேரம் திருச்செந்தூர் ஆண்டவன் சந்நிதியிலே கடற்கரை அலைகளோடு அலையா விளையாடிய அந்த பிஞ்சுப்பாதங்கள் அந்த செல்ல சிணுங்கல் உன் கூந்தலில் இருந்து கீழே விழுந்த ஜாதிமல்லிப்பூ அந்தக் கரும்பச்சை பட்டு பாவாடை தாவணியும் கல்ஜிமிக்கியும் இன்னும் என் மனதை விட்டு மறையவில்லை. நீ என்னை பார்க்காவிட்டாலும் நான் உன்னை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த தருணத்தில் கடல் அலையின் கோபத்தில் என் மீது வந்து விழுந்தாயே. அந்த நொடியே என் உடல் பொருள் ஆவி என அனைத்தையும் உனக்கே அர்ப்பணித்து விட்டேன் என்பது உனக்குத் தெரியுமா? கண்மூடித் திறப்பதற்குள் நீ போய்விட்டாய். அதன் பிறகு எத்தனை தேடல், எத்தனை தவிப்பு, எத்தனை ஏமாற்றம். இவையெல்லாம் அறிவாயா ஜானகி?. உன் பெயரை மட்டும் தெரிந்து கொண்ட நான் உன்னை நேற்று மீண்டும் பார்த்த உடன் மறுஜென்மம் கொண்டேன் என்பதை அறிவாயா?. இதை உன்னிடம் சொல்வதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. ஏன்னா நீ மன நலம் பாதிக்கப்படவில்லை. எனக்கு அது தெளிவாக தெரியும் - என்றவாறு கையை கழுவிவிட்டு வேறு புறமாய் திரும்பி நின்றவளை தோளைத் தொட்டுத் திருப்பினான்.

கண்களில் நீர் ஆறாய் பெருக விம்மிக் கொண்டிருந்தாள் ஜானகி. அவளது கண்ணீரைத் துடைத்தான் ஸ்ரீ. நீ சொல் ஜானகி. உன் மனதில் உள்ள பாரத்தை என்னிடம் இறக்கி விடு. என்னவாயிற்று. உன் ஊர் எது எப்படி அந்த குப்பத்திற்கு வந்தாய். ஏன் பைத்தியமாக நடித்தாய். என்ன அப்படி பார்க்கிறாய். காலையிலேயே உன்னை நான் கண்டு கொண்டேன். எத்தனை வருடங்கள் மனநோயாளிகள் கூடவே வாழ்ந்து வருகிறேன். எனக்கு தெரியாதா?. இப்ப அதல்ல பிரச்சனை. உன்னைப் பற்றிச் சொல். என் மீது உனக்கு நம்பிக்கை வரவேண்டும் என்பதற்காகத்தான் என்னைப் பற்றி உன்னிடம் சொன்னேன். அப்படியிருந்தும் உனக்கு என்மேல் நம்பிக்கை வரவில்லையென்றால் சொல்ல வேண்டாம். மாத்திரை போட்டுக் கொண்டு ரெஸ்ட் எடு. நான் அப்புறம் வர்றேன் - என்றவாறு விலகியவனின் கைகளை சுப்பென பற்றினாள். பற்றிய வேகத்தில் கைகளை உதறிக் கொண்டாள். ஸாரி டாக்டர்! என்னால் நீங்கள் சொல்வதை முழுமையாக நம்பமுடியவில்லை. எப்போதோ நீங்கள்



என்னைப் பார்த்திருக்கலாம். ஆனால் அதற்காக என் நினைவிலேயே வாழ்வதாக கூறுவதை நம்ப முடியவில்லை. ஏனென்றால் நான் நம்பியவர்கள் எல்லாருமே என்னை ஏமாற்றத்தான் செய்தார்கள். யாருடைய வாய் வார்த்தைகளையும் என்னால் நம்பமுடியவில்லை. பிளீஸ் என்னிடம் எதையாவது பேசி மீண்டும் என் மனதை ரணமாக்க வேண்டாம். நான் இங்கிருப்பது உங்களுக்கு சிரமம் என்றால் சொல்லுங்கள். எங்காவது போய் விடுகிறேன். அதற்காக அநாதை தானே என்ன சொன்னாலும் வளைந்து விடுவாள் என எண்ண வேண்டாம். நான் என் மானத்தை காப்பாற்றிக் கொள்ள போட்ட வேடம் இது. இது நாள் வரையிலும் யாரும் சந்தேகப்படவில்லை. என் துரதிர்ஷ்டம் ஒரு டாக்டரான உங்ககிட்டே வந்து...

நோ .. ஜானகி .. நோ அப்படிச் சொல்லாதே. நீ கிடைத்ததை அதிர்ஷ்டம் என்றுதான் நான் நினைக்கிறேன். நான் ஒரு கவுரவமான டாக்டர். என்னிடம் சிகிச்சைக்கு வரும் பெண்களிடம் மாயப் பேச்சு பேசி வளைப்பவன் அல்ல. நான் இனிமேல் எதுவும் உன்னிடம் பேசி தொந்தரவு செய்ய மாட்டேன். என்னைப் பற்றி கவலைப்படாதே. இது உன் இஷ்டம். உன் கோட்டை. இங்கு உன்னை கேள்வி கேட்க யாரும் இல்லை. உன் விருப்பம் போல் சுதந்திரமாக இரு. தயவு செய்து இந்த பாதுகாப்பான இடத்தை விட்டு மட்டும் போய் விடாதே. நான் பேசியவை உன் மனதை காயப்படுத்தினால் தயவு செய்து மன்னித்து விடு. நானும் அவசரப்பட்டு இருக்கக் கூடாது. மருத்துவனாய் இருந்தாலும் நானும் மனிதன்தானே. காலம் மாறும். உன் மனக்காயங்கள் ஆறும். அப்போது உன் மனம் என்னை அறியும். அதுவரை காத்திருப்பேன். வரட்டுமா- சிறு கையசைப்புடன் விடைபெற்றுச் சென்றவனை பார்க்கும் போதே மீண்டும் கண்களில் நீர் நிறைந்தது. அவன் வெளியே சென்று கதவை பூட்டியதும் தன் மனக்கதவு திறந்தது. அவனிடம் கோபமாக பேசியதற்காக மனம் வருந்தியது.

என்னை மன்னியுங்கள் ஸ்ரீ. நீங்கள் முதன்முறையா என்னைப் பார்த்த நாள்தான் என் வாழ்வின் சந்தோஷங்களின் கடைசி நாள் என்பது உங்களுக்கு தெரியாது. முகம் தெரியாமலே நானும் உங்களை மறக்கவில்லை. மற்றவர்கள் என்னை மறக்கவும் விடவில்லை. எத்தனை பேச்சுக்கள், எத்தனை இழப்புகள், எத்தனை ரணங்கள். இத்தனை ரணங்களை வைத்துக் கொண்டு என்னால் எப்படி உங்களை ஏற்றுக் கொள்ள முடியும். வேண்டாம். என் வாழ்வில் எந்த ஆணுக்கும் இடமில்லை. உங்களை வருத்தி விட்டேனா. கண்ணீர் கண்களை விட்டு இறங்க அவளது மனம் பாலைவனமாய் மாறிப்போன தன் கடந்த காலத்தை நோக்கிச் சென்றது.

சிரிப்பும் கும்மாளமுமாய் ஆடிய கடற்கரை கடைசியில் ஒரு அலையின் சதியாய் முற்றிலும் மாறிப்போனது. கரையில் இருந்த அந்நிய ஆடவனோடு புரண்டு புரண்டு கடலுக்குள் சென்றதும் மீண்டு கரைக்கு வந்ததும் ஜானகியை ஆடிப்போக செய்தது. யாரோ எவரோ நம் விளையாட்டுப் புத்தியால் அவரை கடலுக்குள் இழுத்து போட்டோம் என்ற படப்படப்பில் ஜானகி நடக்க, தெரியாமல் நடந்ததுதானே என்ற

எண்ணத்தில் அம்மா ஒன்றும் பேசாமல் நடக்க அத்தையம்மாள் தான் பேயாட்டம் ஆடி விட்டாள். பொட்டப்புள்ளைக்கு அடக்கம் வேண்டாம். இப்படியா நாளைக்கு கல்யாணத்தை வெச்சிட்டு அவுத்து விட்ட மாடாட்டம் அலைவாள். தோ பாருடியம்மா. இப்பவே அடக்க ஒடுக்கம்மா இருந்து பழகிக்கோ. என் வீட்டுக்கு வந்தப்புறம் இந்த ஆட்டமெல்லாம் ஆடி அசிங்கப்படுத்தாதே. எனக்கும் பிடிக்காது. எம்பிள்ளைக்கும் பிடிக்காது. ஏன் மதினி. இதெல்லாம் சொல்லி வளர்க்க வேண்டாமா'' - தன்னை தாக்கியதோடு விடாமல் தன் தாயையும் சாடிய அத்தை மேல் சொல்ல முடியாத அளவுக்கு கோபம் வந்தது. அம்மாவின் கண் அசைப்பில் தன் வாயை மூடிக் கொண்டாள். எல்லாம் நேரம்தான். இதே அத்தை ஒரு மாதத்திற்கு முன் தன் வீட்டிற்கு வந்து அம்மாவிடமும் அப்பாவிடமும் காட்டிய பணிவு என்ன? குழைவு என்ன? காரியம் ஆக வேண்டும். இந்தப் பேச்சு பேசியிருந்தால் அன்று அப்பாதான் மகளைக் கொடுக்க சம்மதித்திருப்பாரா. நயமாக பேசினால்தானே அண்ணன் சம்மதிப்பார். சம்மதித்தால்தானே அண்ணன் மகளோடு அத்தனை சொத்துக்களும் கைக்கு வரும். கோவில் மணிமண்டபத்தை எட்டிய உடன் கடற்கரை சம்பவத்தை சொல்லாவிட்டால் தன் தலையே வெடித்து விடும் என்பது போல் அங்க அமர்ந்திருந்த ஆண்களிடம் கொட்ட ஆரம்பித்தாள் அத்தை.

மெதுவாக அம்மாவை அழைத்து அம்மா! நான் ஏற்கனவே சொன்னேன் இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று நீங்களும் அப்பாவும் தான் கேட்கவில்லை. இப்போது பாருங்கள் இன்னும் மருமகளாகி அந்த வீட்டிற்கு போவதற்கு முன்பே இப்படி பேசும் அத்தை என்னை என்ன பாடுபடுத்துவாளோ இந்த பேயுடன் குடும்பம் நடத்துவேனோ... இசுகிசுப்பாய் புலம்பிய மகளை அடக்கினாள் சரோஜா.

ஐயோ! அப்படியெல்லாம் பேசாதே ராஜாத்தி. பெரியவங்களை மதிக்கணும். அத்தையைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே. கிராமத்து ஆள். கொஞ்சம் அப்படி இப்படித்தான் பேசுவாங்க. உன்னை என்ன கல்யாணம் பண்ணி இங்கேயே விட்டு விட்டா போவோம். நீயும் மாப்பிள்ளையும் நம்ம வீட்டுலதான் வாழப் போறீங்க. அதெல்லாம் பேசிய பிறகு தானே அப்பா சம்மதிச்சார். எங்களுக்கு நீ ஒரே பொண்ணு எல்லா சொத்துக்களுக்கும் நீதான் வாரிசு. யாரோ முகம் தெரியாத மனுசனுக்கு உன்னைக் கட்டிக் கொடுத்துட்டு நாங்க பயந்து போய் வாழுறது விட அப்பாவோட சொந்த தங்கை மகன் தானே முத்து. சின்னவயசுல இருந்தே ஒன்னுக்குள்ளே ஒன்னா வளர்ந்தவன் அவன். எப்படியும் உன்னை நல்லா பார்த்துக்குவாம்மா. நீ ஏன் பயப்படுறே. அவனும் உம்மேல உசுறயே வெச்சிருக்கான். கட்டினா உன்னைத்தான் கட்டுவேன்னு சொல்றான். இல்லேன்னா காலம்பூரா அப்பாவுக்கு அடிமையா இருந்த சேவை செய்யறேன்னு சொல்றான். இதை விட நல்ல மாப்பிள்ளை எங்கே கிடைப்பான்.

அத்தை இந்த பாயின்டை சொல்லித்தான் அப்பாவைச் சாய்த்தாள். ஆனால் ஜானகியால் மட்டும் நம்பவே முடியவில்லை, அத்தையும் மாமாவும் பணத்தாசை பிடித்த பேய்கள் என்பது நன்றாகத் தெரியும்.



இருந்தும் அப்பா ஏன் சம்மதித்தார். பணத்தை கொட்டினால் வாயை மூடி விடலாம் என்றா? இல்லை தங்கை மகன் மேல் அத்தனை நம்பிக்கை வரவில்லை. நம்பிக்கை கூட வேண்டாம். ஒரு சிலிர்ப்பு,ஒரு ஆசை எதுவுமே வரவில்லையே. சதா அசட்டு சிரிப்புடன் வழிந்து கொண்டிருப்பவனைப் பார்த்தால் சலிப்பு தானே வருகிறது. இப்படி சலிப்பும் வெறுப்புமாய் உள்ள மண வாழ்க்கை நன்றாக இருக்குமோ? அதை அம்மாவிடம் வாய் விட்டே கேட்டுவிட்டாள் ஜானகி. பதறிப்போனாள் சரோஜா.

எந்த நேரம் என்ன பேச்சு பேசுறே... யாரு காதுலயும் விழுந்தா போச்சு. கோவில் வெச்சு பேசுற பேச்சா இது. அம்மாடி செல்லம் உனக்கு இவன்தான்னு பேசி முடிவெடுத்து நிச்சயம் பண்ணி பத்திரிகையும் அடிச்சி முடிச்சாச்சு. அதை கோவில்ல சாமிபாதத்தில் வெச்சு வாங்கிட்டு போகத்தான் வந்திருக்கோம். இன்னும் ஒரு வாரத்தில் உனக்கு கல்யாணம். இந்த சமயத்தில இப்படி பேசுறதே தப்பு. அதுவும் யார் காதுலயும் விழுந்தா அத்தை பிலுபிலுன்னு பிடுச்சிப்பா. இதோ சரி அத்தைன்னு சொல்லிடும்மா, நீ ஏதாவது ஏடாகூடமா பேசினா தாய் வளர்ப்பு சரியில்லைன்னு அம்மாவைத்தான் குறை சொல்லுவாங்க. புரியுதாடா. புகுந்த வீட்டுக்கு போயி நல்லபடியா வாழ்ந்தாத்தானே அப்பா அம்மாவுக்கு மரியாதை. இனிமே இப்படியெல்லாம் பேசக்கூடாது சரியா - மகளின் தலையை வருடியவாறே கூறினாள் சரோஜா.

அந்த வருடலில் மெய் மறந்து தலையசைத்தாள் ஜானகி. அந்த நிமிடத்தில் தான் முத்து குதிக்க ஆரம்பித்தான். எவனோ ஒருத்தன் ஜானகியை கட்டிப்பிடிச்சு புரண்டு இருக்கிறான். நீங்க எப்படி அவனை விடலாம். உடனே என்னை கூப்பிட வேண்டாமோ. அவன் எலும்பை எண்ணாம விடமாட்டேன் ஜானகி. வா என் கூட அவனைக காட்டு. இன்னிக்கு விடமாட்டேன் அவனை... பற்களைக் கடித்துக் கொண்டு அவன் எகிற சிரிப்பு தான் வந்தது ஜானகிக்கு. நிச்சயதார்த்தம் அன்று அப்பா போட்ட கைச்செயின் கண்ணை பறிக்க எல்லோருக்கும் அதை காட்டுவது போல் கையை அசைத்து அசைத்து பேசியது ரொம்ப அலட்டலாகப் பட்டது. அலட்சியமாக வேறுபுறம் திரும்பிக் கொண்டாள் ஜானகி.

என்ன ஜானகி நான் பாட்டு கத்திட்டு இருக்கேன். நீ பாட்டுக்கு

''மன்னர் அகிம்சை வழியை கடைப்பிடிக்கிறாருன்னு எப்படிச் சொல்றீங்க?''

''அதுவா... போர் மைதானத்தை விளையாட்டு மைதானம்மா மாற்றச் சொல்லிட்டாரே''

-ஜி.அப்துல்பாரி, பழனி.



எனக்கென்னன்னு இருக்கே. எவ்வளவு தைரியம் இருந்தா உன்னை தொட்டிருப்பான். முதல்ல அவனைக் காட்டு- அவன் பெருங்குரலெடுத்துக் கூவ ஷ்ஷ்ஷு! ஏன் இப்படி காட்டுக் கத்தல் கத்தி கூச்சல் போடுறீங்க. அவர் யாருன்னே எனக்கு தெரியாது. அவர் முகத்தை கூட நான் பார்க்கல்ல. அதே சமயம் அவர் மேல எந்த தப்பும் இல்ல. நான்தான் தெரியாம அவர் மேல விழுந்தேன். தண்ணியோட போயிடாம என்னைக் காப்பாற்றினார். அதுதான் அவர் செய்த தப்பு போதுமா. தயவு செய்து இதை இப்படியே விட்டா போதும். அம்மா ரொம்ப டயர்டா இருக்க. வாங்க போலாம்-என்றாவாறு நடக்க ஆரம்பிக்க அதில்லடா செல்லம் .. என அப்பா அருகில் வந்து அவளை சமாதானம் செய்ய, அப்பா பிளீஸ் என்ற ஒரே வார்த்தையில் அவரும் அடங்கி விட பாக்கியம்தான் வயிறு எரிந்தாள்.

பொட்ட புள்ளைக்கு இவ்வளவு செல்லம் குடுக்கப்படாது அண்ணே! அப்புறம் அதுக நம்ம தலையில ஏறி கும்மியடிச்சிடும் என்றவளை மாமாதான் அடக்கினார் ஏதோ கிசு கிசுப்பான குரலில்.

அதன் பிறகு காரில் ஏறும்வரை யாரும் வாயை திறக்க வில்லை. ஆனால் காரில் ஏறி இருக்கையில் சாய்ந்த ஜானகிக்கு அதுவரை அடங்கி இருந்த நினைவு மீண்டும் வந்து உடலை சிலிர்க்க வைத்தது.

யார் அவர்? பாவம் என்னால் முழுக்க நனைந்து விட்டார் தண்ணீருக்குள் செல்லும் வரையில் அலை இழுத்து விட்ட போதும் தனது கையை இறுக பற்றியிருந்த பொறுப்பு சிலிர்ப்பை தந்தது. தன்னையும் மீறி உடல் சிலிர்த்து விட அதை கவனித்த அம்மா, என்னடா குளிருதா! அம்மா மடியில படுத்துக்கறியா- என்றாள் கனிவாக.

சரிம்மா - என்றவள் அன்னையின் கதகதப்பான மடியில் புதைந்து கொண்டாள். எத்தனை வேதனை எத்தனை சலனங்கள் எல்லாம் ஒரே நொடியில் மாயமாகி விட அம்மாவின் வாசனையை முகர்ந்து கொண்டே மெல்ல மெல்ல உறங்கிப் போனாள். அந்த நேரம் தான் அது நடந்தது. வரும் போது கலகலப்பாக பேசிக்கொண்டே வந்தவர்கள் கடற்கரை சமாச்சாரத்தால் அனைவரும் வாயை மூடிக் கொண்டு மௌனியாக வர பேச்சுத்துணைக்கு ஆளில்லாமல் ஓட்டுநருக்கு தூக்கம் கண்ணை தழுவியதோ என்னவோ கார் நிலைதடுமாறி சாலையின் வலது ஓரத்தில் வரிசையாக இருந்த புளியமரத்தில் மோதி டொம்மென்ற சத்தத்தில்தான் கண் விழித்தாள் ஜானகி. நிலைமையை உணர்ந்த சரோஜா சட்டென கதவைத் திறந்து மகளை கீழே தள்ளிவிட சாலையில் பின்னந்தலை மோத அந்த அதிர்ச்சியில் உடனே மயக்கமடைந்தாள் ஜானகி.

கலங்கிய விழிகளை துடைத்துக் கொண்டாள் ஜானகி. அம்மா அப்படி செய்யாமல் விட்டிருந்தால் அம்மா அப்பாவுடன் நிம்மதியாய் போய் சேர்ந்திருக்கலாம். இத்தனை அவமானங்களையும், ஏமாற்றங்களையும் சந்திக்காமல் போயிருக்கலாம். யார் செய்த பாவம்! நான் மட்டும் தனியாய்...பொங்கிய நீரை மீண்டும் துடைத்தாள். ஏனோ வாய் மட்டும் திறக்க முடியாமல் ஒட்டிக் கொண்டது. எவ்வளவு முயற்சித்தும் ஒரு வார்த்தை கூட பேச முடியாமல் போனது. தூணோடு தூணாய் உயிரற்ற சடலமாய் ஒன்றி விட்டிருந்தவளை யார் யாரோ ஏதேதோ




கேட்டார்கள். ஆனால் எதுவும் தன் காதில் விழவில்லை. அதை கேட்கும் ஆர்வமும் இல்லை. அவ்வப்போது அத்தை மட்டும் சீறிக்கொண்டு இருந்தாள். கையிலும் காலிலும் அடிபட்டு இருந்ததை அனைவரிடமும் காட்டி ஏதோ எங்க நல்ல நேரம் இவளை கல்யாணம் பண்ற முன்னாடி தப்பிட்டோம். நல்ல வேளை எம்மகன் பைக்ல வந்தான். இல்ல எம்புருஷனை இழந்த மாதிரி எம்புள்ளையையும் இழந்து அனாதையா நின்னிருப்பேன். பாவிமக! அப்பனையும் ஆத்தாளையும் மாமனையும் முழுங்கிட்டு ஒரு சொட்டு கண்ணீர் விட்டாளா பாரேன். என்னா நெஞ்சழுத்தம்டி. நானும் பார்த்தேன். இப்படி ஒரு பொண்ணை பார்க்கலைடிம்மா. கட்டினா இவளைத்தான் கட்டுவேன்னு எம்புள்ளை சொன்னதாலதான் நான் இந்தக் கல்யாணத்துக்கே சம்மதிச்சேன். அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பத்தானே தெரியுது- மூக்கை சிந்தியவாறே அவள் அளந்த கதையை யாராலும் ஏற்க முடியவில்லை.

பெரியப்பா தான் குரல் கொடுத்தார். ஏ பாக்கியம் பாவம் அந்தப்புள்ள பெத்தவங்களை இழந்துட்டு பிரமைப்பிடிச்ச மாதிரி இருக்கு. அதைப் போய் குத்தம் சொல்றியே. இதுபாவம். பெண் பிள்ளை பாவம் சும்மா விடாது. துக்கம் தீட்டு முடிச்சப்புறம் உன் வீட்டுல தான் வந்து வாழப்போகுது. இப்பவே இப்படி பேசினா அவ எப்படி முழு மனசா உன் வீட்டுக்கு வருவா -என்றார். அட போங்கய்யா பேச வந்துட்டாங்க. எம்புள்ளை அவளைக் கண்டாலே பயந்து சாகுறான். புருஷனை இழந்தது போதாதா. எம்புள்ளையை நான் இழக்கணுமா. கல்யாணம் நிச்சயதார்த்தம் எல்லாம் எங்க அண்ணன் சாவோட முடிஞ்சி போச்சு. எங்கண்ணன் உயிரோட இருக்கும் போதே எல்லா சொத்தும் எம்மகனுக்குன்னு எழுதி வெச்சுட்டார். இனிமே இவ ஆயுசுக்கும் இவளுக்கு சாப்பாடு போட்டு எங்க அண்ணனுக்கு பட்ட கடனை நான் தீர்த்துப்பேன். காரியம் முடிஞ்சா எல்லாரும் புறப்படுங்க. சும்மா வடிச்சிக் கொட்ட இது ஒண்ணும் மடம் இல்ல. அத்தையின் விஷப் பேச்சால் அனைத்து உறவுகளும் முணு முணுப்போடு கலைந்து சென்றனர். அப்போதும் ஒரு வார்த்தை கூட பேச முடியாமல சிலையாக அமர்ந்திருந்தாள் ஜானகி. அதையே தனக்கு சாதகமாக்கிக் கொண்டு அந்த வீட்டின் எஜமானியாகி விட்டாள் பாக்கியம். கட்டினால் உன்னைத்தான் கட்டுவேன் என்ற முத்துவிற்கு தடபுடலாக பக்கத்து ஊர் பண்ணையார் மகளுடன் திருமண ஏற்பாடுகள் நடந்தது. திருமணத்திற்கு நான்கு நாள் முன்னதாக வெள்ளையம்மாளை அழைத்தாள் பாக்கியம்.

தோ பாரு வெள்ளையம்மா. எங்க அண்ணனும் மதினியும் கார்ல நசுங்கியதை பார்த்ததாலே இவளுக்கு சித்தம் கலங்கிப் போச்ச. சித்தம் கலங்கிப் போனவளை வெச்சு எத்தனை நாள் பாதுகாக்க முடியும். இங்கேயும வைத்தியம பார்க்க முடியாது. அதனால நீ இவளை கூட்டிட்டு போயி ஏதாவது வெளியூர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில சேர்த்திடு. இந்தா இது பத்தாயிரம் ரூபாய் காசு இருக்குது. நீ உன் சொந்த ஊருக்கே போயிடு. இனிமே எனக்கு எதுக்கு வேலைக்காரி. அதெல்லாம் எம்மருமகா பார்த்துப்பா. நீ இன்னிக்கே கிளம்பு. நாளைக்கு உறவுக்காரங்க எல்லாம் வந்திடுவாங்க. அப்புறம் இவளை வெளியேத்த

முடியாது. உடனே கிளம்பு- என வெள்ளையம்மாவின் கைகளில் பணத்தை திணித்தாள்.

சிறுவயது முதலே ஜானகியை தூக்கி வளர்த்தவள். இன்று அவளின் நிலை கண்டு துக்கத்தை விழுங்கிக் கொண்டு ஒரு வார்த்தையும் மறுத்துப் பேசாமல் தனது துணி மூட்டையுடன் ஜானகியின் கையை இறுகப் பற்றிக் கொண்டு இருட்டு வேளையில் வெள்ளையம்மா வீட்டின் புழக்கடை வாசல் வழியாக தன்னை அழைத்து வந்ததை இன்னும் மறக்கவில்லை ஜானகி. மற்றவர்களால் சூட்டப்பட்ட பைத்தியக்காரப் பட்டம் அப்படியே இருக்கட்டும். இதுவே தனக்கு பாதுகாப்பாக இருக்கும் என்ற முடிவுடன் வெள்ளையம்மாளிடம் கூட காட்டிக் கொள்ளாமல் வெகு ஜாக்கிரதையாக இருந்தாள். மேலும் துன்பங்கள் விரட்ட இந்த ஸ்ரீராமிடமே வந்து சேர்வோம் என அவள் கனவிலும் நினைக்கவில்லை. விதி வலியது என்பது உண்மையோ!




**என்னை அவளிடத்தில் தருகிறேன்- அவள்**
**இன்னும் ஏன் வெறுத்து மறைகிறாள்**
**என்றும் அவள் எங்க வீட்டு**
**திருமகளாவாள்-அந்த**
**இனிய மகள் எனது தாய்க்கு மருமகளாவாள்**

படுக்கையில் விழுந்த ஸ்ரீராமிற்கு தூக்கம் என்பதே மறந்து விட்டது. விழிகளை சுழற்றி அறையெங்கும் நிறைந்திருந்த ஜானகியை நோட்டமிட்டான். இந்த அறை மட்டுமில்லாமல் என் மனம் எங்கும் நீதான் நிறைந்திருக்கிறாய் என்பதை எப்போது புரிந்து கொள்வாய் ஜானகி. என் மனதை திறந்து அனைத்தையும் கொட்டி விட்ட பிறகும் தயக்கம் என்ன கண்ணே! மாறும் உன் மனக்காயங்கள் ஆறும். அப்போது என் உள்ளம் உனக்குப் புரியும். ஒரு வாரமாக அவளிடம் பேசுவதை தவிர்த்தான். காயங்களை பார்த்து மருந்து மாத்திரைகளை கொடுத்து விட்டு வருவதோடு சரி. பிறகு சாப்பாடுடன் செல்வது வருவது என் இயந்திரத்தனமாக நடந்து கொள்வதோடு வேறு ஒரு வார்த்தை விடாமல் கவனமாக இருந்தான். ஆனால் தன்னை தொடர்ந்தே வரும் ஜானகியின் பார்வையை கண்டும் காணாதது போல் இருக்க மனம் வரவில்லைதான். ஆனால் இதுவும் ஒரு வகை பைத்தியம் தான் என்ற முடிவுடன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தான்.

இன்று காலை அவளாகவே டாக்டர் என் காயங்கள் தான் ஆறிக் கொண்டு வருகிறதே. இன்னும் எத்தனை நாள்தான் இப்படி ஒரே அறைக்குள் அடைந்து கிடப்பது, என்னை வெளியில் விடமாட்டீர்களா? நான் கொஞ்சம் படித்திருக்கிறேன். உங்க ஹாஸ்பிடல்லயே ஏதாவது சின்னதா ஒரு வேலை போட்டுக் கொடுத்தால் கூட போதும். எந்த வேலையாக இருந்தாலும் செய்வேன். சும்மாவே இருப்பது ரொம்பக் கொடுமை டாக்டர்- என்றாள்.

இயல்பான புன்னகையோடு என்ன வேலை செய்வாய் என்றான்.



இந்த பேஷண்டுக்கெல்லாம் சீட்டு எழுதுவாங்களே அது பார்க்கட்டுமா.

ம் ஹூம்! அதை பீத்தி டார்ந்துட்டா.

அப்போ பேஷண்டுகளுக்கு நேரா நேரத்திற்கு மாத்திரை மருந்து எல்லாம் எடுத்து கொடுக்கட்டுமா..

ம்ஹூம் அதைத்தான் செந்திலும் தாஸும் செய்றாங்களே... அப்போ தோட்டத்தை பார்த்துக்கட்டுமா. எனக்கு தோட்டப் பராமரிப்புன்னா ரொம்ப இஷ்டம்.

அதுக்கு நிறைய பேர் இருக்காங்க- என்றான்.. புன்னகை மாறாமல். ஜானகிக்கு முகம் வாடிற்று. அப்படின்னா இந்த ரூமையெல்லாம் வாஷ் பண்ணுவாங்களே அந்த வேலை.

அதை சரசம்மாவும் சுப்புவும் பார்த்துப்பாங்க. இப்ப என்ன உனக்கு வேலை வேணும் அவ்வளவுதானே.

ம் ம்.. ம் - வேகமாக தலையாட்டினாள் ஜானகி.

ஒரு வாரம் பொறுத்துக்க. காயம் நல்லா ஆறட்டும் அப்புறம் இந்த ஹாஸ்பிடல்ல வேலை செய்யற டாக்டரோட அப்பாவுக்கு வீட்ல வேலை செய்ய முடியலியாம். வேலைக்காரங்க இருக்காங்க. ஆனாலும் அந்த அம்மாவோட பேச்சுத் துணைக்கு கூடமாட வெளியே போக ஒரு ஆள் வேணும்னு கேட்டிருந்தாங்க. அங்க போறியா- என்றான் அவளது முகத்தை ஆராய்ந்து கொண்டே.

சந்தோஷமாய் தலையாட்டினாள். அதுவரைக்கும் நான் ரவுண்ட் போறப்போ என் கூட வா. எல்லா பேஷண்டையும் பார்த்த மாதிரியும் இருக்கும். உனக்கும் ரிலாக்ஸா இருக்கும் என்ன சொல்றே? - என்றதற்கும் பலத்த தலையாட்டல் மட்டுமே பதிலாக கிடைத்தது. சிரித்துக் கொண்டான்.

நாளைய தினம் பற்றிய கனவுகளோடு கண்களை மூடினான். அதற்காகவே காத்திருந்தது போல் தொலை பேசி அழைத்தது. எடுத்து காதில் வைத்தவன் சர்வமும் நடுங்கி போனான்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் புயலென மருத்துவமனைக்குள் நுழைந்தவனை ஓடி வந்து கட்டிக் கொண்டாள் ஜானகி. ஸ்ரீ ஸ்ரீ இவன்தான்,. இவன்தான் என்னை.... அதற்குமேல் பேசமுடியாமல் விக்கியது. சரி சரி கூல் டவுன் - என்றவாறு அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு என்னவாயிற்று என பார்வையாலே பிரேமாவிடம் கேட்டான்.

''தலைவர் தைல பாட்டிலை எடுத்துக் கொண்டு எங்கே போறார்?''

''மகளிர் அணித்தலைவிக்கு தலைவலியாம்! தைலம் தேய்த்துவிடப் போகிறார்!''

-தேனி எஸ்.மாரியப்பன்.-



அவள் ஒரு முறை வார்டுபாய் தாஸை திரும்பி பார்த்துவிட்டு டாக்டர் நான் ஹால்லதான் இருந்தேன். திடீரென இவங்க சத்தம் கேட்டது. ஓடிப்போய் பார்த்தப்ப தாஸை போட்டு அடிச்சிட்டு இருந்தாங்க. என்னான்னு விசாரிச்சா நீங்க உடனே வரணும்னு சொல்லி ஒரே ஆர்ப்பாட்டம் அழுகை.. அதனாலதான் போன் பண்ணேன். மற்றபடி எதுவும் தெரியல்ல டாக்டர் என்றாள்.

கோபமாக தாஸிடம் திரும்பினான். தாஸைப் பற்றி தற்போது கேட்கும் பேச்சுகள் சரியாக இல்லை என ஸ்ரீராம் அறிந்திருந்தான். அடிக்கடி பெண்கள் பகுதிக்கு வருவதாகவும் நர்ஸ்களிடம் அசிங்கமாக அரட்டை அடிப்பதாகவும் செய்தி எட்டியது. ஆனால் எதற்கும் நேரிடையாக யாராவது ரிப்போர்ட் செய்யும் போது பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் விட்டிருந்தான். இன்று மாட்டிய உடன் ஸ்ரீராமிற்கு கோபம் தலைக்கேறியது.

என்ன தாஸ் நடந்தது? நள்ளிரவு நேரத்தில் உனக்கு இந்த பிளாக்கில் என்ன வேலை? அதுவும் என் அறையில் இருந்த இந்தப் பெண்ணிடம் செல்ல வேண்டிய அவசியம் என்ன உறுமினான்.

நான் சொல்றேன் ஸ்ரீ. எனக்கு தூக்கமே வரலை. அதனால ஜன்னலை திறந்து வைச்சு வெளியே வேடிக்கை பார்த்திட்டு இருந்தேன். அப்பத்தான் இவன் வந்து டாக்டர் வெளியே நிற்கிறார் கதவைத் திறன்னு சொன்னான். நீதான் எங்கிட்ட சாவியைத் தந்திட்டியே. உனக்கு உள்ள வர சாவி இல்லைன்னு நினைச்சி கதவைத் திறந்துட்டு வெளியே வந்த என்னை இவன் உள்ளே தள்ளி கதவைச் சாத்தி என்னை... என்னை - மேல பேசமுடியாமல் அழ, ஸ்ரீராம் தன் கோபம் முழுவதையும் திரட்டி தாஸின் கன்னத்தில் அறைந்தான்.

அவ்வளவுதான் தாஸ் குதிக்க ஆரம்பித்தான். சார் நான் ரெண்டு வருஷமா வேலைப்பார்க்கிறேன். நேத்து வந்த ஒரு பைத்தியத்தோட பேச்சைக் கேட்டு இத்தனை பேர் முன்னால எப்படி என்னை கை நீட்டி அடிக்கலாம். நான் யார்னு தெரியாம என்மேல கை வெச்சிட்டீங்க இல்ல. நான் ஒரு குரல் கொடுத்தா என் குப்பம் முழுசும் இங்கே வந்திடும். மவனே பொணமாகிடுவே. உன்னை விட மாட்டேன் என மேலும் மிரட்ட யாரடா பைத்தியம்! பொறுக்கி நாயே. உன்னைப் பத்தி ரொம்ப நாளா கேள்விப் படுறேன். எல்லாரையும் மிரட்டி வெச்சிருக்கியா யாராவது ரிப்போர்ட் பண்ணட்டும்னு தான் இருந்தேன். நீ என்னையே மிரட்டுறியா? ஓடிப்போயிடு. நாளைக்கு வந்து கணக்கை முடிச்சிக்க. இனிமே உன்னை இந்தப் பக்கம் பார்த்தேன் ஜென்மத்துக்கும் வெளியே வராதபடி உள்ளே தள்ளிடுவேன். என்னடா முறைப்பு? போடா வெளியே சட்டையை பிடித்து வெளியே தள்ளினான் ஸ்ரீ.

என்னையா வெளியே தள்ற. உன் நிலைமை என்ன ஆகுதுன்னு பார் - கர்ஜித்தவாறே சட்டையை இழுத்துக் கொண்டு வெளியேறினான் தாஸ். எல்லாரும் போய் வேலையை கவனிங்க என்ற உத்தரவில் மற்றவர்கள் நகர ஜானகியை தன் அறைக்கு அழைத்துச் சென்று ஸ்ரீ அவளை அமர வைத்தான். ஜானு உன் கிட்ட என்ன சொல்லி சாவியை தந்தேன். ஏதாவது அவசரம்னா இதை யூஸ் பண்ணி வெளியே வா. மற்றபடி அன் டைம்ல



வெளியே வரக்கூடாதுன்னு சொன்னேன் இல்ல. இப்படியா கவனக்குறைவா இருப்பாய், அவன் யார்னு திறந்தே?

இல்ல டாக்டர் நீங்க வந்ததா சொன்னதால தான் யோசிக்காம கதவைத் திறந்தேன். இப்படி நினைக்கலை- சொல்லும் போதே உடல் நடுங்கியது.

சரி! இனிமே பயப்பட வேண்டாம். அதே நேரம் இங்க தனியா தங்கவும் வேண்டாம். டியூட்டி முடிஞ்ச போறப்போ என் கூட எங்க வீட்டுக்கு வந்திடு. அதுதான் உனக்கு பாதுகாப்பு-சகஜமாய் பேசியவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள் ஜானகி. நான்நான் எப்படி உங்கள் வீட்டுக்கு. இல்லை டாக்டர் என்னால் உங்களுக்கு நிறைய சிரமங்கள். நான் எங்காவது போய் விடுகிறேன்.

சீறினான் ஸ்ரீராம் இடியட் மாதிரி பேசாதே! என்னோட ஹாஸ்பிடல்லயே இத்தனை பேர் இருக்கிற இடத்திலேயே உனக்கு ஆபத்துன்னா வெளியே எப்படியிருக்கும்னு யோசிக்க மாட்டியா? உன் மூளையை என்ன அடகுக்கடையிலயா வெச்சிருக்கே. ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிற. நான் என்ன உம்மேல உள்ள ஆசையால உன்னை கூட்டிட்டு போய் குடும்பம் நடத்தவா போறேன்? அங்க என் அம்மா இருக்காங்க. உன்னை தன் மகளா பார்த்துப்பாங்க. நான் உன் கண்லயே பட மாட்டேன் போதுமா.

ஏதாவது ஒரு லேடீஸ் ஹாஸ்டலா பார்த்து உன்னை சேர்த்துட்டு போகமுடியும் என்னால. ஆனா வீட்ல போய் நிம்மதியா இருக்க முடியாது. ஜானகி சாப்பிட்டாளா. நல்லா தூங்கினாளான்னு ஒவ்வொரு நிமிஷமும் நான் தான் அவஸ்தைப் படுவேன். என் வீட்ல நீ இருந்தா உனக்கும் நிம்மதியா வேலை பார்க்கலாம். எனக்கு நீயும் முக்கியம் என் கடமையும் முக்கியம். பிளீஸ் புரிஞ்சுக்க. நான் நல்லவன் நல்லவன்னு சொல்லிட்டு அலைய முடியாது. அதெல்லாம் தானா மனசில வரணும். உனக்கு ஏன் அப்படி தோணல்லன்னு எனக்கு தெரியல்ல. அப்படி நம்பிக்கை இல்லாம என் வீட்டுக்கு வரவேண்டாம். உனக்கு எங்கே இஷ்டமோ தாராளமாய் போ. ஐ டோன்ட் கேர்... கோபத்துடன் கத்தி விட்டு கதவை அறைந்து சாத்தி விட்டு வெளியேறினான்.

வெகுநேரம் விக்கித்து அமர்ந்திருந்தாள் ஜானகி. அவன் பேசிய கோபத்தில் அள்ளி வீசிய வார்த்தைகள் தன் மனதை காயப்படுத்தவில்லை. மாறாக புன்னகை பூத்தது. அவ்வளவு உரிமையுடன் அவன் கோபம் கொண்டதை மனம் ரசித்தது. தன் மீது உரிமையோடு கோபம் கொள்ளவும் ஒருவர் இருக்கிறார் என்று பெருமிதம் கொண்டது. தன் மனம் இப்போதெல்லாம் அடிக்கடி ஸ்ரீராமைப் பற்றி நினைப்பதை எண்ணுகையில் வெட்கம் பிடுங்கித் தின்றது.

வெளியே வெறுப்பதாக நடித்தாலும் உள்மனம் அவனது அருகாமையைத்தானே நாடுகிறது. இது சரியா? ஏற்கனவே ஒருவனுடன் மணம் பேசி அவன் பெயருடன் தன் பெயரும் இணைத்து திருமண அழைப்பிதழில் பதிவாகி விட்டதே. ஒரு மனம் எச்சரித்தது. உள்மனம் அதை மறுத்தது- அதுதான் என்றோ முறிந்து விட்டதே. அதை முறித்தவன்

என்ன சொன்னான். கண்டவனோடு கடற்கரையில் கட்டிப் புரண்டவளை எப்படி ஏற்க முடியும். தற்செயலாக நடந்ததோ இல்லை வேண்டும் என்றோ நடந்ததோ யாருக்குத் தெரியும். இவ கூடவே வந்தானோ என்னவோ. அவர்களுக்குள் என்ன உறவோ இதெல்லாம் தெரிந்தும் இவளை மணக்க நான் ஒன்றும் பெட்டை அல்ல.

முத்து சொன்ன வார்த்தைகள் இன்னும் நெஞ்சில் நெருப்பைக் கொட்டிக் கொண்டிருந்தது. இறைவனின் சந்நிதானத்தில் நடந்த எந்த நிகழ்ச்சிக்கும் அர்த்தமில்லாமல் போகாது. தெரியாமல் நடந்தாலும் இந்த நிகழ்ச்சியால் தான் தனக்கு நேர இருந்த திருமணம் என்ற நரக வாழ்க்கை நடக்காமல் போனது. அப்படி ஒருவேளை திருமணம் நடந்திருந்தாலும் நிம்மதியாக வாழ்ந்திருப்பாளா? வாழத்தான் விட்டிருப்பார்களா? தாயும் மகனும் பேசியே கொன்றிருப்பார்கள். இல்லை கேட்பதற்கு ஆளில்லை என்று தீயிட்டு கொளுத்தியிருப்பார்கள். எப்படி பார்த்தாலும் முத்துவை விட நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு ஸ்ரீராம் உயர்ந்தவர்தான். சொத்து சுகம், சொந்தம் என எதுவும் இல்லாமல் வந்த என்னை ஏற்றுக்கொள்ள இத்தனை வருடம் தவமிருப்பதாக சொல்கிறாரே. இவரை விட வேறு ஒரு துணை கிடைக்குமா என்ன? ஸ்ரீ சீக்கிரம் சீக்கிரம் விடியட்டும். என் மனமாற்றத்தை உங்களிடம் சொல்லப்போகிறேன். நம்புகிறேன் ஸ்ரீ. நம்புவது மட்டுமில்லாமல் உங்களை விரும்புகிறேன். உங்களிடம் கொண்ட வேண்டும். அதன்பிறகும் என்னை நீங்கள் நேசித்தால் உங்கள் வீட்டிற்கு உங்கள் அம்மாவின் மருமகளாய் வருவேன்.

இரவே சீக்கிரம் விடிந்து கொள்ளேன். என் ஸ்ரீயிடம் என் மனதை கொடுக்க வேண்டும். டேபிளின் மேல் தலைவைத்து கடிகாரத்தை பார்த்துக் கொண்டே இருந்தாள். கடிகாரத்தின் டிக் டிக் தன் இதயத்தின் லப்டப்பை அதிகரிக்கச் செய்தது. கடிகார முள் ஐந்தை நெருங்கியதும் எழுந்து தன் அறைக்குள் சென்று குளித்தாள். ஸ்ரீராம் எடுத்துத் தந்திருந்த துணி மணிகளை ஆராய்ந்தாள்.

ஜானகி! ஒரே நைட்டியோட எத்தனை நாள் இருப்ப. அதான் எனக்கு

"மகளிருக்கு 33 சதவீதம் என் பதை என் மனைவி தப்பாப் புரிந் சிக்கிட்டா...!"

"எப்படி"

"33 சதவீதம் தான் அவளை தொட அனுமதிக்கிறா!"

-தேனி எஸ்.மாரியப்பன்.





தெரிந்த அளவு மூணு செட் சுடிதார் வாங்கிட்டு வந்தேன். ரெண்டு புடவையும் இருக்கு. உனக்குஎது பிடிக்குமோஅதை கட்டிக்கோ. என்ற மறுநாளே நாலைந்து ஜவுளி பார்சலோடு வந்து அவளிடம் தந்து விட்டுத்தான் போயிருந்தான்.

இத்தனை நாள் சுடிதாரை போட்டாயிற்று. இன்று புடவைக் கட்டிக் கொண்டு ஸ்ரீயை பார்த்தால் என்ன? இரண்டு புடவையையும் மாற்றி மாற்றிப் பார்த்தாள். ஒன்று ஆகாய நீல நிறத்தில் மிக மெல்லிதாக பொடிக்கற்களால் வேயப்பட்டிருந்தது. இன்னொரு புடவை இளஞ்சிவப்பில் பொட்டு பொட்டாய் சமிக்கி வேலைப்பாடுடன இருந்தது. இரண்டுமே கொள்ளை அழகுதான். சற்று நேரயோசிப்பிற்கு பிறகு ஆகாய நீல நிறப்புடவையை தேர்ந்தெடுத்தாள். தலையை உலர்த்தி லூசாகப் பின்னினாள். லேசாக பவுடரை ஒற்றிக் கொண்டாள் புடவையை நேர்த்தியாக கட்டி பின் குத்திக் கொண்டாள். விடிய ஆரம்பித்திருந்தது.

மெதுவாக வெளியேறி அறையை பூட்டிக் கொண்டு காலார நடக்க ஆரம்பித்தாள். புல்வெளியில் பனித்துளிகள் மினுக்கிக் கொண்டிருந்தது. வரிசையாக வைத்திருந்த ரோஜாத் தொட்டியில் பூக்கள் கண்ணைப் பறித்தது. மெல்ல அதனருகில் சென்று ஒரு வெள்ளை நிற ரோஜாவை பறித்து காதருகில் செருகினாள். பொழுது நன்றாகவிடிந்து விட்டிருந்தது. மனிதர்களின் நடமாட்டம் அதகரிக்க மெல்ல திரும்பி நடக்க ஆரம்பித்தாள். ரிஷப்சனை அடைந்ததும் ரிஷப்சனிஸ்ட் எழுந்து குட்மார்னிங் மேம் என்றாள். ஜானகி தனக்குள் சிரித்துக் கொண்டாள். டாக்டர்கிட்ட பேசணுமே,. இதோ மேம் - உடனே நம்பரை டயல் செய்து ரிசிவரை நீட்டினாள் அவள். துடிக்கும் இதயத்தோடு ரிஸீவரை வாங்கி காதில் வைத்தவளுக்கு ஹலோ என்ற ஸ்ரீயின் கம்பீரமான குரல் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

ஹல்லோ ஸ்ரீயின் அழுத்தமான குரல் மீண்டும் அழைக்க ஹலோ நான் . நான்தான் ஜானகி.

''ஜானகியா?'' படபடித்த இதயத்தை அடக்கிக் கொண்டு சொல்லு என்ன விஷயம்?'' - என்றான் ஆர்வமற்ற குரலில்.

ஒரு கணம் வாடிப்போயிற்று ஜானகியின் முகம். சுதாரித்துக் கொண்டு ஸ்ரீ எனக்கு உடனே உங்களை பார்க்க வேண்டும் போலிருக்கிறது. கொஞ்சம் சீக்கிரம் வருகிறீர்களா. ''உங்கள் வீட்டிக்கு வந்து நிறைய பேச வேண்டும். மன்னிப்பு கேட்க வேண்டும். உங்கள் கைகளை பற்றிக் கொண்டு நன்றி சொல்ல வேண்டும். பிளீஸ் சீக்கிரம் வாருங்கள் - பதிலை எதிர்பாராமல் ரிசீவரை வைத்து விட்டாள்.

சஸ்பென்சாக இருக்கட்டும். வந்தவுடன் பார்க்கலாம் உல்லாச எண்ணத்தோடு அறைக்கு திரும்பினாள். நான் தெரிஞ்சுக்க விரும்பல. அப்புறம் ஒரு அவசரம்னா உன்கிட்டே உதவி கேட்டு வரத்தோணும். நீ எங்க இருந்தாலும் நல்லா இரு. அவ தேடுவா. நான் போறேன்- கண்ணீரைத் துடைத்தவாறே சென்றவனை பார்த்துக் கொண்டே நின்றாள்.

## 20

**காணவந்த காட்சி என்ன வெள்ளி நிலவே- நீ
கண்டுவிட்ட கோலமென்ன வெள்ளி நிலவே
ஓடிவந்த வேகமென்ன வண்ண நிலவே- நீ
ஒரிடத்தில் நிற்பதென்ன சொல்லு நிலவே**

இரவெல்லாம் விழித்திருந்த கண்கள் தீப்பற்றியது போல் எரிந்தது. கண்களை மூடினால் கொஞ்சம் எரிச்சல் அடங்குமோ. டேபிள் மீது கை வைத்து தலை சாய்த்து கண்களை மூடினாள். இதமாக இருந்தது. மலர்ந்த முகத்துடன் ஸ்ரீராம் கண்களுக்குள் தோன்றி தலை சாய்த்து சிரித்தான். ஜானகியின் முகம் புன்னகை பூத்தது. மூடிய விழிகளை திறக்க மனமின்றி மெல்ல மெல்ல உறங்கிப் போனாள். அந்த நேரம் தன் அறைக்குள் நுழைந்த ஸ்ரீராம் அமைதியாக இருக்கையில் வந்து அமர்ந்தான். அமைதியான உறக்கத்திலும் புன்னகையோடு இருந்த ஜானகியின் முகம் அவனை சிலையாக்கியது. இனிமையான கனவு கண்டிருப்பாளோ. அவளது பால் முகம் பச்சிளம் குழந்தையை போல தெளிவாக இருந்தது. என சொல்லாமல் சொன்னது. மின் விசிறிகாற்றில் ஒருசில முடிக்கற்றை நெற்றியில் விழுந்து புரண்டு குதூகலத்தது. தான் மிகவும் விரும்பி வாங்கியிருந்த ஆகாய நீல நிறப் புடவை இவளுக்காகவே நெய்தது போல் அத்தனை கச்சிதமாக இருந்தது. இந்த ஒற்றை ரோஜா. இந்த புன்னகை ஏதோ ஒன்றை சொல்கிறதே. தனது கையை அவளை எழுப்பும் நோக்கில் நகர்த்திய நேரம் அவனது செல்போன் கிணுகிணுத்தது. அந்த ஓசை ஜானகியின் தூக்கத்தை கலைத்து விடுமோ என்ற பரபரப்பில் வேகமாக போனை எடுக்க அதற்குள் விழித்துக் கொண்டாள். ஜானகி சிவந்த கண்களில் ஸ்ரீராமைக் கண்டதும் தூக்கம் பறந்துவிட சட்டென எழுந்தாள். ''எவ்வளவு நேரம் உங்களுக்கு வெயிட் பண்ண ஸ்ரீ. ஏன் இவ்வளவு லேட்.''- என்றவளை 'ஒரு நிமிஷம்'' என்றவாறு போனை அட்டெண்ட் செய்தான்.

எதிர்முனையில் சந்துரு வெகு உற்சாகமாய் பேசினான். ''டேய் ஸ்ரீ! நானும் அம்மா அப்பாவும் ட்ரெயின்ல வந்திட்டு இருக்குகோம்பா. இன்னும் ஒன் அவர்ல உன் ஹாஸ்பிட்டல்ல இருப்போம். அப்பாவுக்கும், அம்மாவுக்கும் சம்மதம். முதல்ல கோவிச்சாலும் மருமக முழு காம இருக்கான்னதும் ஒரே கொண்டாட்டம் தான். எம்மேல உள்ள கோபம் போயி மருமகளை உடனே பார்க்கணும்னு ஒரே தொல்லை. அதான் புறபட்டோம். நீ சுஜாகிட்டயும் அவங்க அம்மாகிட்டயும் பேசிடு. அவங்களும் தயாரா இருக்கட்டும். சரியா வெக்கட்டுமா. நேர்ல பேசுவோம் பை''- வைத்துவிட்டான்.

அவனது உற்சாகம் ஸ்ரீயையும் தொற்றிக் கொண்டது. தயக்கத்துடன் எழுந்த ஜானகியைப் பார்த்து, ''ஜானு'' வெகு அவசரம். ஒரு பேஷண்ட்டை பார்க்கணும். நாம அப்புறம் பேசுவோமா. நீ ரெஸ்ட் எடு''- என அவசரமாய் சொல்லியவாறே நடக்க அவன் பின்னாலயே ஓடி வந்தாள். ''நானும் வர்றேன்'' ''ஓ.கே. குயிக்''- என்றவாறு அவன் முன்னே செல்ல கால் தடுக்கிவிடாமல் புடவையை லேசாக தூக்கிப் பிடித்தவாறே



அவன் பின்னே செல்லும் ஜானகியை மற்றவர்களைப் போலவே உமாவும் வியந்து பார்த்தாள். யாரிவன்? ஸ்ரீயிடம் இத்தனை உரிமையாய் ? சட்டென எழுந்து போக முடியாமல் தன் முன் இருந்த நோயாளிகளை விட முடியாமல் வெகு கஷ்டப்பட்டு தன் மனதை வேலையில் செலுத்தினாள்.

ஹாய் சுஜா! ஹவ் ஆர்யூ'' வெகு உற்சாகமாய் குரல் கொடுத்தவாறே உள்ளே நுழைந்த ஸ்ரீராமைப் பார்த்ததும் சுஜாவும் மதுரமும் எழுந்து நின்றனர். சுஜா நன்றாக தேறியிருந்தாள். முகத்தில் உள்ள குழந்தைதனம் மாறி ஒரு நிறைவு இருந்தது. பம்மிய வயிற்றோடு முகத்தில் பூரிப்பும் நாணமும் பணிவுமாய் நின்றவளை பார்க்கையில் ஸ்ரீராமிற்கு திருப்தியாய் இருந்தது. ''வாங்க டாக்டர் ஸார்''.

''அட சுஜாவா பேசினது. ஒரே வார்த்தையில நிறுத்திவிட்டாயே'' ''நீங்க சொன்னதுல இருந்து ரொம்ப மாறிட்டா தம்பி. எனக்கே இது எம் பொண்ணு தானான்னு சந்தேகமா இருக்குது. அவ்வளவு அடக்கம். இப்பல்லாம் சினிமா பத்தி பேசுறதே கிடையாது தம்பி. மஹூம். இந்த புத்தி அப்பவே இருந்திருந்தா...''

''மதுரம்மா'' அதட்டினான் ஸ்ரீராம். ''ஏற்கனவே நான் சொன்னது மறந்து போச்சா. இப்ப சுஜா சந்துருவோட வொய்ப். அத மறந்திடாதீங்க. இது சந்துருவோட குழந்தை. இது மட்டும் தான் நிஜம். மற்றதெல்லாம் கனவு. கலைந்து போன கனவு நினைவில இருக்கக்கூடாது. சுஜா உன்னோட மாமியார் மாமனார் வந்திட்டு இருக்காங்க. இப்ப வந்திடுவாங்க. சந்துருவும் தான். நல்லபடியா நடந்துக்க. உன் வாழ்க்கை சந்தோஷமா அமைய என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். அப்புறம் சந்துரு வாங்கிக் கொடுத்த மோதிரம் பத்திரமா இருக்கா''

''இதோ''- வலது கை மோதிர விரலில் மின்னிய ஒற்றைக்கல் மோதிரத்தை காட்டினாள் சுஜா.

''குட்! சந்துரு பேரன்ட்ஸ்கிட்ட உன்னை மோதிரம் மாற்றி மேரேஜ் பண்ணிகிட்டதா சொல்லியிருக்கான். அவங்க வந்தப்புறம் மேலே பேசி முறைப்படி தாலி கட்டுவான் சரியா. சுஜா உனக்கு முழு சம்மதம் தானே? ஏன்னா வாழப்போறவ நீ. இதுல உன் சம்மதம் தான் ரொம்ப முக்கியம். சந்துருவைப் பத்தி எனக்கு தெரியும். கல்லூரி நட்கள்ல பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வாழ்க்கை கொடுக்கணும். அவங்க மனக்காயத்தை ஆற்

''இந்த டாக்டர் ரொம்ப வீக்கா இருக்கார்!''
''எப்படி சொல்ற...?''
''என் அழகில மயங்கி கீழே விழுந்திட்டார்!''
-தேனி எஸ்.மாரியப்பன்.



றுகிற மருந்தா இருக்கணும். அவங்களோட கடந்த காலத்தை புதைகுழியில புதைச்சிடணும்னு பேசுவான். அதனால அவனைப்பத்தி உனக்கு ஒரு பயமும் வேண்டாம். குழந்தை பிறந்தப்புறம் மலேஷியாவுக்கு போயிடுவே. உங்க அம்மா நம்ம ஹாஸ்பிட்டல்லயே தங்கி தோட்ட வேலை பார்க்கட்டும். நீ எந்த கஷ்டமும் இல்லாம சந்தோஷமா வாழணும். அது தான் எங்களுக்கு முக்கியம். நீ என்னம்மா சொல்றே''

மெல்ல ஸ்ரீராமின் அருகில் வந்த சுஜா அவன் காலில் விழுந்தாள். பதறி விலகி அவளை தூக்கினான் ஸ்ரீராம். ''என்ன பண்ற சுஜா?''

''டாக்டர் நானும் எம் பிள்ளையும் என் அம்மாவும் எத்தனை தரம் வேணும்னாலும் உங்க கால்ல விழலாம். தப்பே இல்ல. எங்களை வாழ வெச்ச சாமி நீங்க. சாமி கால்ல விழறது எப்படி தப்பாகும். நீங்க தந்த இந்த வாழ்க்கையை சந்தோஷமா ஏத்துக்கறேன் டாக்டர். நீங்க என்ன சொன்னாலும் கேட்பேன்- கண்ணீரோடு கூறிய சுஜா தோளைத் தட்டிக் கொடுத்தான் ஸ்ரீ. ''நீ என் தங்கை. வயிற்றில் பிள்ளையோடு அழக்கூடாது. போ. போய் முகம் கழுவி தலைவாரி பூ வைத்து லட்சுமிகரமாய் இரு. சந்துரு எப்படி உன்னை பார்த்தவுடன் விழுந்தானோ அதே மாதிரி உன் மாமியார் மாமனாரும் உன் பக்கம் சாய்ஞ்சிடணும். போ ரெடியாகு'' என்றான் சிரிப்போடு.

''போங்க டாக்டர்''- வெட்கத்தோடு திரும்பியவள் அங்கே ஓர் ஓரமாய் நின்று ஒவ்வொருவர் முகத்தையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்த ஜானகியை அப்போது தான் பார்த்தாள். ''டாக்டர், யார் இது. புது லேடி டாக்டரா? அந்த உமா இல்லையா. வேலையை விட்டு அனுப்பிட்டீங்களா''- என்றாள் ஜானகியை பார்த்துக் கொண்டே.

அப்போது தான் ஜானகி தன் பின்னே வந்தது நினைவு வர, 'ஓ! ஸாரி! இவங்களை அறிமுகப்படுத்தவே இல்லையே ஜானகி. இது சுஜா! நம்ம பேஷண்ட் ரொம்ப வாலு. நம்ம சந்துருவோட வொய்ப். ஜானு! இவ பேசி நீ பார்க்கலியே. அப்பா! வாயைத் திறந்தாலே, அத்தனை சினிமா பட நாயகர்களையும் இழுத்திடுவா. இவகிட்ட மாட்டிகிட்டு சந்துரு என்ன பாடு படுவானோ! சுஜா இது ஜானகி. இவங்க ''இதற்கு மேல் அவளை எப்படி அறிமுகப்படுத்த என்று புரியாமல் ஸ்ரீராம் தடுமாற

''ஓ! உங்க வருங்கால வொய்ப்பா''- என சுஜா கேட்க அதற்கு அவன் பதிலளிக்க வாய் திறப்பதற்குள் ''ஆமா'' என்றாள் ஜானகி. நம்ப முடியாத அதிர்ச்சியுடன் ஸ்ரீராம் ஜானகியை பார்க்க அவள் தலை குனிந்து கொண்டாள்.

''அய்யோ! டாக்டர் உங்க வொய்ப் ரொம்ப அழகு டாக்டர். தேவயானியும், மீனாவும், சினேகாவும் அந்த காலத்து தேவிகாவும் சாவித்ரியும் சரோஜா தேவியும் மொத்தமா கலந்தாற்போல் என்ன ஒரு அழகு. உங்களுக்கு ரொம்ப மேட்ச்சா இருப்பாங்க. டாக்டர் என் கண்ணே பட்டிடும் வீட்டுக்கு போனதும் சுத்திப்போடுங்க''- மேலும் மேலும் சுஜா ஏதோ பேசிக் கொண்டே போக ஸ்ரீராமிற்கு எதும் காதில் ஏறவில்லை.

ஜானகியை விட்டு அவன் கண்கள் அகலவில்லை. சந்துருவும் அவனது பெற்றோரும் வந்த பிறகும் கூட ஸ்ரீராம் தெளியவில்லை. மருமகளை வாரியணைத்த புஷ்பம் அம்மாள் மகனை கடிந்து கொண்டார்.



முதல்லயே இதைச் சொல்லியிருந்தா நான் புள்ளைத்தாச்சி புள்ளைக்கு வேண்டியதை ஆக்கிப்போட்டு எவ்வளவு தெம்பா ஆக்கியிருப்பேன். தானா சுகப்பிரசவமாகிடும். திருட்டுப்பய! இத்தனை மாசமா மறைச்சிட்டியே. போனது போகட்டும்.

மனம் முழுக்க சந்தோஷமா இருந்தது. உற்சாகமா விசிலடித்தவாறே தனது அறைக்குள் நுழைந்தான் ஸ்ரீராம். சந்துருவின் பெற்றோர் முழு மனதுடன் சுஜாவை ஏற்றுக்கொள்ளுவார்கள் என நினைக்கவில்லை. சுஜாதாவும் பயந்துபோய் தான் இருந்தாள். எப்படியோ எல்லாம் நிறைவாக திருப்தியாய் நடந்து முடிந்ததில் மனதுக்கு வெகு நிறைவு.

இருக்கையில் வந்து அமர்ந்தவனின் மனதில் உறுத்தியது ஜானகியின் சொல் தான். சுஜாவின் கேள்விக்கு ஆம் என்று எப்படி பதில் கூறினாள். தன் எதிரில் வந்து அமர்ந்த ஜானகியின் முகத்தில் தெரிந்தது என்ன? நாணமா! பிரமிப்பா. இல்லை பெருமிதமா கண்டுபிடிக்க முடியாமல் திணறினான்.

அமைதியாக அவன் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள். ''டாக்டர் உங்ககிட்ட நிறைய பேசணும். இங்கே வேணாம். நான் எந்தவித தடங்கல் இல்லாமல் உங்ககிட்ட பேசணும். அதனால அதனால நீங்க வீட்டுக்கு போறச்சே என்னையும் உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போறீங்களா''

சத்தியமாய் இதை எதிர்பார்க்கவில்லை ஸ்ரீராம். லேசாக கையில் கிள்ளிப்பார்த்தான். வலித்தது. அட நிஜம் தான். வெட்கமும் தயக்கமும் போட்டி போட தன் எதிரில் இருப்பது என் இதய தேவதை தான்.

''என்ன ஜானகி இது கேள்வி. வீட்டுக்கு கூட்டிட்டு போடா ஸ்ரீராம்னு சொன்னா கூட்டிட்டு போக மாட்டேனா இதுக்குப் போய் இவ்வளவு தயங்கணுமா''

''சரிடா. வீட்டுக்கு கூட்டிட்டு போடா ஸ்ரீராம்''- சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள். வாய்விட்டுச் சிரித்தான். கூடவே சேர்ந்து கிண்கிணியாய் சிரித்தாள் ஜானகி.

## 21

**காதோடு தான் நான் பாடுவேன்**
**மனதோடு தான் நான் பேசுவேன்**
**விழியோடு தான் விளையாடுவேன்-**
**உன்மடிமீது தான் கண் மூடுவேன்!**

ஜானகியால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. நிஜம் தானா இது. ஸ்ரீ யின் அறையில் நானா இத்தனை கோணங்களில் சிரித்துக் கொண்டிருப்பது. ஆமாம் நான் தான். இதோ அம்மாவுடன் சிரித்துக் கொண்டு இதோ அலையோடு ஆர்ப்பரித்துக் கொண்டு. அறையை சுற்றி சுற்றி வந்த ஜானகியின் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாயின் அருகில் உல்லாசமாய் சிரித்த அந்த பொன்னான நாளை தாயுடன் வாழ்ந்த அந்த கடைசி நாளை திரும்பவும் பெற்றுவிட்ட நிறைவு.

அம்மா! அம்மா! ஏனம்மா என்னை விட்டு பிரிந்து சென்றாய்? என் ஆசை நேசம் இன்பம் அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஏனம்மா சென்

றாய்? நீ சென்ற நாளிலிருந்து என்னை மட்டுமே நினைத்து வாழ்ந்த இந்த ஸ்ரீராமை என்னிடம் காட்டியது நீதானம்மா. இந்த ஸ்ரீராமின் முகத்தில் உன்னைப் பார்க்கிறேன். என் தாயை என் தெய்வத்தைப் பார்க்கிறேன். அநாதையாய் என்னை விட்டுவிட்டு போய்விட்டோமே என்ற மன வருத்தத்தில் எனக்கு இந்த ஆறுதலை பரிசாகத் தந்தாயா அம்மா. நன்றி அம்மா! இன்னொரு தாயை என்னிடம் தந்ததற்கு நன்றி அம்மா. மனமுருகி தாயிடம் மருகியவள் கண்ணீரோடு திரும்பினாள். கட்டிலின் மீது அமர்ந்து அறையை சுற்றி சுற்றி தனது புகைப்படங்களை பார்த்துக் கொண்டிருந்த ஜானகியை முகத்தில் புன்னகையோடு மடியின் மீது இருந்த தலையணையில் கைகளை ஊன்றி கன்னத்தை தாங்கிப்பிடித்திருந்த ஸ்ரீராமை பார்த்தாள். ஒரு கணம் தன் தாய் அமர்ந்திருந்தாற்போல் கண்களில் தோன்ற மறுகணமே ஓடிவந்து தரையில் மண்டியிட்டு அமர்ந்து அவன் மடியில் இருந்த தலையணை தூக்கி வீசிவிட்டு மடியில் புதைந்து கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

இதை சற்றும் எதிர்பாராத ஸ்ரீராம் முதலில் அதிர்ந்தாலும் உடனே இயல்பானான். அழட்டும். மனதின் பாரங்கள் தீரும் வரையும் அழட்டும். அப்போது தான் ஜானகியின் மனம் தெளியும். அத்தனை துயங்களும் காயங்களும் கண்ணீராய் வெளியேறட்டும். ஒரு தாயின் பரிவோடு மடியில் புதைந்தவளின் தலையை வருடினான்.

அந்த வருடலில் ஜானகியின் அழுகை இன்னும் கூட, மெல்லிய குரலில் ''ஜானும்மா! ஏன் அழறே! போதும் உன் அழுகையெல்லாம். இனிமே உன் கண்ல இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வரக்கூடாது. நான் இருக்கேன்டா செல்லம். உனக்கு உனக்காகவே நான் இருக்கேன்டா. அப்புறம் ஏன் அழறே. அழக்கூடாது. என்னோட ஜானகி அழக்கூடாது''- என்றான்.

ஜானகியின் அழுகை குறைந்தது. மெலிதான விசும்பல் மட்டுமே தொடர்ந்தது.

'' ஸ்ரீ! உங்ககிட்ட நான் பேசியே ஆகணும். அப்பத்தான் எந்தவித உறுத்தலும் இல்லாம என்னால உங்க வீட்ல நடமாட முடியும். நான் உள்ளே நுழைந்ததும் உங்கம்மா வாம்மா மருமகளேன்னு வாரியணைச்சு முத்தம் கொடுத்தாங்களே. அந்த ஸ்பரிசத்தை என்னால முழுமையாக ஏற்க முடியாம தடுமாறினேனே. அந்த தடுமாற்றம் விலகணும்னா நான் பேசணும்''- என்றவள் மெதுவாக எழுந்து தன் குடும்பத்துடன் அமர்ந்து சுண்டல் சாப்பிடும் புகைப்படத்தை காட்டினாள். தன் தாயின் உருவத்தை தன் வெண் பிஞ்சு விரல்களால் நீவினாள்.

''ஸ்ரீ! இது தான் அம்மா! நான் ஒரே பொண்ணுன்றதால அம்மாவுக்கு நான்னா உயிர். அப்பாவுக்கு எல்லாமே நான் தான். என்னை கேட்காம எதுவுமே செய்ய மாட்டார். அப்படி என்னைக் கேட்காம எடுத்த ஒரே முடிவு என் கல்யாணம் தான். ஆனா அதுவே எங்க அப்பாவோட உயிரையே குடிச்சிடும்னு நானும் நினைக்கல்ல''

ஸ்ரீராம் அதிர்ந்து நிமிர்ந்தான். மெல்ல அவனருகே வந்தாள். ''ஆமாம் ஸ்ரீ தன்னோட பொண்ணு வெளியே போனா எங்கே கஷ்டப்பட்டு போயிடுமோன்னு பயந்து வீட்டோட மாப்பிள்ளையா தன் தங்கச்சி மகன் இருப்



பான்ற நம்பிக்கையில தான் எங்க அத்தை மகன் முத்துவை எனக்கு மாப்பிள்ளையா தேர்ந்தெடுத்தார். எங்க அத்தைக்கும் மாமாவுக்கும் சொத்து மேல பைத்தியம். இது எனக்கும் அம்மாவுக்கும் தெரியும். அப்பாவுக்கும் தெரிந்திருக்கலாம். எல்லா சொத்தும் அவங்க புள்ளைக்கும் தன் மகளுக்கும் தானே போகும். அப்புறம் ஏன் பிரச்சனை வரப்போகுது என்று நினைத்திருக்கலாம். தன் முடிவை மகள் ஏற்றுக் கொள்வாள் என்ற நம்பிக்கையில் நான் பாட்டி வீட்டிற்கு போயிருந்தபோது அத்தையின் வற்புறுத்தலில் தாம்பூலம் மாற்றிவிட்டார்கள். எனக்கு அது பெரிய அதிர்ச்சி. ஆனா 'அம்மாடி! உன்னை பிரிய முடியாதுன்னு தான்வீட்டோட முத்து இருப்பானேன்னு இந்த சம்பந்தம் பேசி முடிச்சேன். உனக்கு விருப்பம் இல்லையாம்மா''- ன்னு எங்கப்பா கேட்டப்போ என்னால மறுக்கவும் முடியல்ல. ''சரிப்பா உங்க இஷ்டம்ன்னு சொல்லிட்டேன்.

முத்துவை எனக்கு எப்பவுமே பிடிக்காது. சம்பாவழிந்து கொண்டே வெட்டியா திரிவான். ஸோ எனக்கு எப்பவுமே அவன் மேல ஈடுபாடு கிடையாது. இருந்தாலும் பெற்றோர் பார்த்து தீர்மானித்துவிட்டதால் அப்பாவிற்காக ஒத்துக் கொண்டேன். திருமண தேதியும் முடிவாகி பத்திரிகையும் அச்சடித்தாயிற்று. அதை ஸ்வாமிபாதத்தில் வைத்துவிட்டு வர தான் . நாங்கள் திருச்செந்தூர் கோவிலுக்கு வந்தோம். அன்று தான் நீங்கள் என்னை பார்த்திருக்கிறீர்கள். நான் கடைசியாக சிரித்ததும் அன்று தான். மெல்ல கண்களை மூடினாள். விழிகளில் ஈரம் கசிந்தது. முகம் வேதனையாக சுருங்கியது.

பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீராமிற்கு தாங்க முடியவில்லை. அவளை அணைத்து தன் மார்பு கூட்டினுள் புதைத்து அவள் கண்ணீரை நிறுத்த வேண்டும் என்று துடித்த கரங்களை கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான். அதற்குள் தன்னை சமாளித்தக் கொண்ட ஜானகி மீண்டும் தொடங்கினாள்.

''கடற்கரையில் அலையோடு விளையாடுவது எப்பவுமே எனக்கு மிகவும் பிடிக்கும். மணிக்கணக்கில் விளையாடுவேன். அன்று ஏதோ விபத்து போல் உங்கள் மீது விழ அது பெரிய பிரச்சனையாகி விட்டது. அன்று இரவு நாங்கள் வீடு திரும்பும் போது தான் தாய் தந்தை இருவரையும் பலி கொடுத்த அந்த விபத்து நடந்தது''- என்று கடற்கரை சம்பவத்தை தொடர்ந்து தன் வாழ்வில் நிகழ்ந்த அனைத்தையும் ஒன்று விடாமல் சொன்னாள். கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீயின் முகம் சொல்ல

''என் மனைவி எது சொன்னா ஊம் தட்டாம செஞ்சிடுவேன்..''
''இல்லேன்னா ஒரு தட்டு தட்டிடுவாளா?''
''ஒன்னுக்கு நாலா போடுவா.. என் உடம்பு தாங்காது!''
- ராஜிராதா.



முடியாத அளவுக்கு வேதனையில் துடித்தது. என்தந்தையின் சொத்துக்கள் கைவசம் வந்து விட்டதால் சித்தம் கலங்கிய நிலையில் இருந்த என்னை வீட்டை விட்டு வெளியேற்றினாள் என் அத்தை.

''என்னைக் கைல பிடிச்சிட்டு வெள்ளையம்மா இரவோடு இரவாகவெளியே வந்தப்பவும் என்னால உண்மையைச் சொல்ல முடியல்ல. சொல்லி என்ன பிரயோஜனம். பைத்தியமாகவே இருந்திடலாம்னு விட்டுட்டேன். அப்படியும் போன இடத்தில் எல்லாம் பிரச்சனை. எத்தனை வஞ்சகக் கழுகுகளிடம் இருந்து என்னை வெள்ளையம்மா காப்பாற்றினார் தெரியுமா. அவர் மட்டும் இல்லாது போயிருந்தால் என் உடல் சின்னாபின்னமாகிப் போயிருக்கும். நானும் உயிருடன் இருந்திருக்க மாட்டேன். கடைசியில் அந்த குப்பத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கும் விதி விடவில்லை. வெள்ளையம்மாவின் கணவர் முழு குடிகாரன். அவனிடம் என்னை விலை பேசியவர்கள் என் விலையாக கொடுத்தது இரண்டு பாட்டில் சாராயம் தான். வெளியில் உள்ளவர்களிடமிருந்து என்னை காப்பாற்றிய வெள்ளையம்மாவால் வீட்டிற்குள் குடிகார கணவனிடம் போராட முடியாமல் போனது. தினமும் என்னால் அவர் பட்ட அடியும் உதையும் கண்ணீரும் என்னை வாட்டியது. அவள் அனுபவித்த வேதனை போதும் என்று தான் அவள் வீட்டை விட்டு வெளியேறினேன். அந்த இருட்டில் உங்களிடம் வெள்ளையம்மாள் பேசும்போது கூட அதனால் தான் வெளியே வராமல் இருந்தேன். ஏழைகளின் சிரிப்பில் மட்டுமல்ல இதயத்திலும் இறைவன் இருக்கின்றான்''- பெருமூச்சுடன் நிறுத்தினாள் ஜானகி.

''அவள் கூறியபோது ஸ்ரீராமிற்கு நிம்மதி பெருமூச்சு வந்தது. பொறுமையாய் இருந்தது. எவ்வளவு நல்லதாய் போயிற்று. இருவரும் தங்களது மனவருத்தங்களை விடுத்து நிம்மதியாய் மூச்சுவிட்ட போது, ''அப்பா தம்பி! ஜானகியை சாப்பிட கூப்பிட்டு வாப்பா. பாவம் குழந்தை பசியோடு இருப்பா''- கதவிற்கு வெளியே அம்மாவின் குரல் கேட்டது. ''பார்த்தியா! மருமக வந்த உடனே இந்த அம்மாவுக்கு தன்னோட புள்ளையோட பசி பெரிசாத் தெரியலை.''- என்றவுடன் தன்னை மறந்து சிரிக்க ஆரம்பித்தாள் ஜானகி. உடன் ஸ்ரீராமும் இணைந்து சிரிக்க பெற்றவளின் மனம் குளிர்ந்தது.

''20 ரூபாய் ரோட்டுல கிடந்தா எடுத்து வச்சுக்கிறியா?''
''வச்சுக்க மாட்டேன்''
''வெரிகுட்''
''செலவழிச்சுடுவேன்''
-ஆரணி தமிழ்செல்வம்.





சந்துருவின்வீட்டுக்குபுறப்பட்டுக் கொண்டிருந்தான்ஸ்ரீராம். ''ஜானு போயிட்டு வரட்டுமா''- கார்ச்சாவியை எடுத்துக் கொண்டே கேட்ட ஸ்ரீராம் பதிலின்றி போகவே ஜானகியின் முகத்தை நிமிர்த்தினான். மான் விழிகள் இரண்டும் நீரில் மிதந்தன. என்னடா! என்னஆச்சு''- பதறினான்.

''என்னவோ மனசு ரொம்பவும் பதறுது. நீங்கஅண்டிப்பா போகணும்தான்! என்னையும் கூட்டிட்டு போங்களேன். உங்க கூடவே இருந்தா தைரியமா இருக்கும். ரெண்டு நாள் எப்படி? ப்ளீஸ்ப்பா என்னையும் கூட்டிட்டு போங்கப்பா''

''நான் ரெடி! பட் அம்மா தான் அலவ் பண்ணமாட்டேன்றாங்களே. ம்மா! ஜானுவை பாருங்க அழுறா. கூட்டிட்டு போகட்டுமா''

காபியை ஆற்றியவாறே வந்த அம்பிகை பதறிப்போனார். ''என்னம்மா இது சின்னக் குழந்தையாட்டம். உன்னை அனுப்புறது பெரிசில்லம்மா. தொலைதூரம் போகணும்மா. இன்னும் நாலு நாள்ல கல்யாணத்தை வச்சிட்டு இப்படி போகக்கூடாதும்மா. காத்து கருப்பு பட்டிச்சின்னா கஷ்டம்மா. இவனையே அனுப்ப மாட்டேன். சந்துரு சின்னவயசில இருந்து இவன் நண்பன். அதனால தான் அனுப்புறேன். டேய்! அங்க லேட் பண்ணிடாதே. சீக்கிரமா கிளம்பிடு. அப்படியே எல்லாருக்கும் பத்திரிகையை கொடுத்திட்டு வந்திடு. அப்புறம் அதுக்கு ஒருவாட்டி அலையாதே. இந்தா காபியை குடிச்சிட்டு கிளம்பு. நான் போயி அடுப்பை ஆப் பண்ணிட்டு வர்றேன்''- என்றவாறு அம்மா நகர ஜானகியை இறுக அணைத்து அழுத்தமாய் முத்தமிட்டான். சிலிர்த்துப் போனாள். ''நான் வர்ற வரைக்கும் இது போதும். சீக்கிரம் வந்திடுறேன். சிரிச்சிட்டே பாய்சொல்லும்மா''- கொஞ்சலாகக் கேட்டதும் சிரித்தாள்.

22

உமா! நல்லா யோசிச்சு தான் இந்த முடிவை எடுத்தியாம்மா. எம்மகன் வந்து கேட்டா நான் என்னம்மா சொல்லுவேன். நான் சொல்றதை கேளும்மா. உன் முடிவை மாத்திக்கம்மா. ஐயோ நான் என்ன பண்ணுவேன்'' - பதறிய அம்பிகையின் கைகளில் தனது ராஜினாமா கடிதத்தை திணித்தாள் உமா.

''அம்மா! நான் நல்லா யோசனை பண்ணித்தான் இந்த முடிவை எடுத்தேன். இதை விட வேற ஒரு நல்ல முடிவை என்னால எடுக்க முடியாதும்மா. என்னோட ஸ்ரீயை ஜானகிக்காக விட்டுத்தர முடிஞ்ச என்னால அவங்க கல்யாணத்தை பார்க்கவோ தொடர்ந்து அவர்கிட்ட வேலை செய்யவோ நிச்சயமா முடியாது. அதனாலதான் நான் லண்டன் போறதா முடிவு பண்ணிட்டேன். இது ஏற்கனவே வந்த ஆபர் தான். அப்பாவையும் அங்கே

கூட்டிட்டு போய் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கலாம். எனக்கும் இங்கே வேறு யார் இருக்கா''- சொல்லும் போதே தொண்டை அடைத்தது.

''அப்புறம் ஒரு முக்கியமான விஷயம் அம்மா. எந்த சூழ்நிலையிலும் நான் ஸ்ரீயை விரும்பினது அவர்க்கு தெரியவேண்டாம். ஏன்னா ஸ்ரீயோட மனசு பூ மாதிரி. தன்னால ஒரு பெண் மனம் காயப்பட்டு போனாள் என தெரிந்தால் நிச்சயம் அவர் வாடி விடுவார். ஜானகியுடன் மனம் ஒன்றி வாழ முடியாமல் திணறிவிடுவார்.

அதனால தயவு செய்து இந்த விஷயம் நம்மோட புதைஞ்சிபோகட்டும். நான் கிளம்பறேம்மா''- என்றவள் விடுவிடுவென போயே விட்டாள்.

என் மகளைப் பற்றி இத்தனை தூரம் தெரிந்து வைத்திருக்கிறாயே பெண்ணே! ஏன் இத்தனை ஆண்டுகளா உன் காதலை மனதிற்குள்ளேயெப்படி போட்டு பூட்டி வைத்தாயோ?. சொல்லாத காதல் எப்படியம்மா நிறைவேறும். கலங்கிய விழிகளுடன் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள் அம்பிகை.

''என்ன அத்தை. நான் குளிச்சிட்டு சாமி கும்பிட்டுட்டு வர்றதுக்குள்ளே டாக்டரம்மா போயிட்டாங்கடா. நானும் கொஞ்சம் பேசியிருப்பேனே. என்னைப்பத்தி என்ன நினைப்பாங்க''- என்றவாறு தலையில் சுற்றிய ஈரத்துணியோடும் கைகளில் கற்பூர தட்டோடும் நின்ற ஜானகியை பார்த்ததும் மனம் இளகியது.

''உன்னோட நல்ல மனசுக்கு எதுவும் யாரும் தப்பா நினைக்க மாட்டாங்க. அவ அவசரமா வெளியூர் போக வேண்டியிருக்காம். அதான் சொல்லிட்டு போனா. நீ போய் தலையைத் துவட்டிக்க. அப்புறம் சளி புடிச்சதுன்னா அவன் வந்து என்னைத் திட்டுவான். ப்போ. போ''- என விரட்டினாள்.

''ஆமாமா. இன்னிக்கு வந்திடுவாங்க, இல்ல அத்தே ?இன்னிக்கு அவருக்கு பிடிச்சதா சமைச்சு அசத்திடணும். அப்பாடி ரெண்டு நாள் முழுசா ஓடிப்போச்சே. இதான் லாஸ்ட். இனிமே அவரை எங்கயும் தனியா அனுப்பக்கூடாது. வரட்டும். வரட்டும். ஒரு போன் கூட பேச முடியலியா. வரட்டும்''- செல்லமாய் திட்டியவளை பெருமிதமாய் பார்த்தாள் அம்பிகை.

''மன்னா கோழியை தூது அனுப்பச் சொல்றீங்களே..!''

''எதிர்நாட்டு மன்னருக்கு நெஞ்சுவலியாம்! கோழி அனுப்பச் சொல்லி வேண்டுகோள் விடுத்துள்ளார்!''

-தேனி எஸ்.மாரியப்பன்.-





23

கெட்டிமேளம் முழங்க நண்பர்களின் உற்சாக கூக்குரல்களுக்கு நடுவே வானத்து தேவதையாய் ஜொலித்த ஜானகியின் பொன் கழுத்தில் ஸ்ரீராமின் தாலி பேறியது. ஹோ என்ற இரைச்சலுடன் பூமழை தூவி ஆர்ப்பரித்தனர் நண்பர்கள். வெட்கமும் நாணமும் போட்டியிட உலகையே வென்ற ஆனந்தம் ஜானகியின் முகத்தில் தெரிந்தது.

''அம்மா ஜானகி! எங்க கண்ணையே உங்ககிட்ட ஒப்படைக்கிறோம். ஏற்கனவே ஜானகி ஜானகின்னு அரை பைத்திய மாதிர்ந்சான். அவனை முழு லூசாக்கிவிடாதேம்மா''- விஷ்ணு போலிக்கண்ணீருடன் கூற, ''டேய்! இவனை புடிச்சி அந்த ஹோம குண்டத்தில உட்கார வைபுடா. எப்போ என்ன பேசுறான்னு பாரு''- சிவாகத்த மணமேடையே கலகலத்தது.

கீழே நாற்காலியில் அமர்ந்து அனைத்தையும் ரசித்துக் கொண்டிருந்த அம்பிகை அம்மாள் ஆனந்த கண்ணீர் உகுத்தார்.

''போதும்டா போய் சாப்பிட்டு வாங்க''- என்ற ஸ்ரீயின் வார்த்தையைக் கேட்டதும், ''பார்த்தியா இப்பவே கட் பண்ணி விடுறான். உன்னை நாங்க விடமாட்டோம். ஹனிமூன் போறவரைக்கும் உன்னைவிட்டு நகரப்போவதில்லை. என்னடா சொல்றீங்க?''- என்ற திலீப்பின் கேள்விக்கு ''ஆமாம் ஆமாம்''- என கோரஸாய் பதில் வந்தது.

''ஆமா ஸ்ரீ! ஹனிமூனுக்கு எங்கே போலாம்னு பிளான் வெச்சிருக்க. இதுவரை எங்ககிட்ட மூச்சே விடலை. காஷ்மீரா சுவிட்சர்லாந்தா அமெரிக்காவா இல்லே ஆப்பிரிக்காவா''

''எங்கும் இல்லை. என்னோட ஜானகியை முதன் முதலா எங்கே பார்த்தேனோ அங்கே''- ஜானகியைப் பார்த்துக்கொண்டே ஸ்ரீராம் சொல்ல, ''திருச்செந்தூரா ஆ ஆ...'' அலறினான் விஷ்ணு.

''ஹேய்! எங்கே என்னைத் தொடு பார்க்கலாம்''- என கால்கவில் கொலுசோடு மெட்டியும் சப்திக்க அலைகளிடம் போட்டி போட்டு ஓடிக்கொண்டிருந்தாள் ஜானகி. கரும்பச்சையில் இரத்தச் சிவப்போடு கூடிய பார்டர் இணைந்த பட்டுப்புடவை. தோதாய் பச்சை கல் பதித்த பொன் வளையல்கள். பச்சையும் சிவப்புமாய் கல் பதித்த முத்துக்களும் கோர்த்த ஜிமிக்கி. அதற்கேற்ற கல் நெக்லஸ். அதோடு ஸ்ரீராம் கட்டிய கனத்த தாலி. மஞ்சள் பூசிய ஜானகியின் முகம் என அனைத்தும் மாலை வெயிலில் பளபளத்தது. ஸ்ரீராம் பார்த்துபார்த்து தேடி எடுத்து ஜானகிக்கு அவற்றை பரிசளித்திருந்தான். ஜானகியின் ஓட்டத்திற்கு ஏற்றாற்போல் அவளது நீண்ட கூந்தலும் அதில் சூடியிருந்த ஜாதிமல்லிச்சரமும் அசைந்தாட ஸ்ரீராம் தன்னை மறந்து லயித்திருந்தான்.

''சிஸ்டர் போதும் சிஸ்டர்! நாம கடற்கரைக்கு வந்து நாலுமணி நேரமாச்சு''- பரிதாபமாய் சொன்னான் விஷ்ணு.

''இன்னும் பத்தே நிமிஷம். ப்ளீஸ்''- சொல்லிவிட்டு மீண்டும் ஜானகி ஓட, ''இதோட அஞ்சாவது பத்தே நிமிஷம்''- பெருமூச்சு விட்டான் திலீப்.

''ஏன்டா உங்களுக்கு இவ்வளவு சலிப்பு. வேணும்னா நீங்களும் போய் விளையாடுங்க. ஏன் என் ஜானகியை டிஸ்டர்ப் பண்றீங்க. அவ இஷ்டத்துக்கு விளையாடட்டும்''- ஸ்ரீராம் பரிந்து கொண்டு வந்தான்.

''ஏம்ப்பா சொல்லமாட்டே. உனக்கு வேணா ஜானகியை பார்த்து பசி மறந்திடலாம். எங்களுக்கு வயத்தை கிள்ளுது தெரியுமா''- விஷ்ணுவை முறைத்தான் ஸ்ரீ. '' எப்பவும் பசிதானா உனக்கு. போ போய் ஏதாவது சாப்பிட்டு வா. இந்தா என்றவாறு''- ரூபாய் தாளை நீட்டினான்.

அதை வாங்கி அவனிடமே கொடுத்தான் சிவா. ''இப்போ சாப்பாடா முக்கியம். ஏடா ஸ்ரீ வந்து நாலு நாளாச்சு. ஹாஸ்பிடல் பேச்சே எடுக்காம இருக்கே. எப்போ போறதா உத்தேசம். நாங்களும் வேலைக்கு போணுமில்ல''.

''சிவா. உமா அவங்க அப்பாவோட ட்ரீட்மெண்டுக்காக பாரின் போயிட்டாங்க. அவங்க இடத்தில சரண்யான்னு ஒரு நியூ அப்பாயின்ட்டெண்ட். ரொம்ப ஸின்சியர் லேடி . ரொம்ப கறுசுறுப்பு. டாக்டர் ஒருவாரம் என்ன கூட பத்துநாள் இருந்து என்ஜாய் பண்ணிட்டு வாங்க. ஹாஸ்பிடலை நான் பார்த்துக்கிறேன்னு சொல்லிட்டாங்க. அதனால தான் எந்த டென்ஷனும் இல்லாம ரிலாக்ஸா இருக்கேன். நீங்களும் ஒருவாரம் லீவை எக்ஸ்டெண்ட் பண்ணுங்கடா''

''என்னது இன்னும் ஒருவாரமா''- குதித்தான் விஷ்ணு. முறைத்தான் ஸ்ரீராம். ''அங்கே பாருடா என் ஜானகியை. உலகையே மறந்து எத்தனை உற்சாகமாய் ஆனந்தமாய் விளையாடுகிறாள் . எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு அவள் இப்படி விளையாடுகிறாள் என்று உனக்கு தெரியுமா? இந்த விளையாட்டை கலைக்க எனக்கு மனம் இல்லை. அவளுக்கு நான் கணவன் மட்டுமில்லை. அம்மா அப்பா சொந்தம் பிரண்ட் எல்லாமே நான் தானடா''

நண்பர்கள் அந்த தம்பதியின் இனிமையில் குறுக்கே நிற்க விரும்பாமல் சற்றே நாகரீகத்துடன் விலகினர்.

முற்றும்

''வாலியிடமிருந்து தனது மனைவியை மீட்டுத் தருமாறு ஸ்ரீராமபிரானிடம் எப்படி வேண்டி நின்றான்?''

''தாரை தாரையாக கண்ணீர் விட்டுத்தான்.''

- ராமலிங்கம்,
தூத்துக்குடி.-





# டிப்ஸ் டிப்ஸ்

பாலாடை, தேன், இரண்டு சொட்டு எலுமிச்சை சாறு, பன்னீர் நான்கையும் குழைத்து முகத்தில் பூசி காய்ந்த பின்பு கழுவுங்கள் இவ்வாறு மாதம் இருமுறை செய்தால் முகம் பொலிவும், பளபளப்பும் பெறும்.

-அ.ருக்மணி, சின்னமனூர்.

உடலில் கொழுப்புச் சத்து அதிகம் உள்ளவர்கள் தினசரி பூண்டு அல்லது வெங்காயத்தை வதக்கி சாப்பிட்டு வர கொழுப்பைக் குறைத்து மாரடைப்பைத் தடுக்கும்.

-பா.அச்சுதன், வயலூர்.

சாம்பாரில் உப்பு அதிகமானால் கரண்டியை அடுப்பில் நன்றாக சூடுபண்ணி சாம்பாரில் போட்டுவிட சூடான கரண்டி உப்பை எடுத்துவிடும்.

-ரேகா, தேனி.



முள்ளங்கியை துருவி மைய அரைத்து முகத்தில் அப்பிக் கொள்ளுங்கள். பிறகு வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவி முழுபயறு, கஸ்தூரி மஞ்சள் சேர்த்து அரைத்த மாவை தடவி கழுவுங்கள். இது பொலிவைக் கூட்டும். வாரம் இருமுறை செய்யலாம்.

கி.அநந்யா,
திருவாரூர்

தீராத தலைவலி இருந்தால் சிறிது சீரகம், ஒரு கிராம்பு, இரண்டு மிளகு இவற்றை பசும்பால் விட்டு அரைத்து நெற்றியில் பூசிக்கொண்டால் தலைவலி பறந்துவிடும்.

-ஆர்.தங்கராஜ், திருப்பூர்.

பிசைந்த மாவினை சிறிது நேரம் ஊறவிட்டு பிறகு சப்பாத்திகளாக தேய்க்கலாம். தேய்த்துப் பிறகு நீண்ட நேரம் வைத்திருக்கக் கூடாது. தேய்த்தவுடன் கல்லில் போட்டு வேகவைத்து விடவும்.

-அ.ருக்மணி,
சின்னமனூர்.

பெண்களுக்கு மாத விலக்கின் போது ஏற்படும் வயிற்று வலிக்கு அந்த சமயங்களில் எலுமிச்சம் பழச்சாற்றை நீரில் கலந்து பருகினால் வயிற்று வலி நீங்கும்.

-பா.அச்சுதன்,
வயலூர்.